ரூபா 20.00


நடந்தது என்ன?
பக்கம் 02


சாவு
பக்கம் 09


கடற்படை
பக்கம் 11


விவசாயிகள்
பக்கம் 20



www.onlineuthayan.com

பக்கங்கள்: 32

# உதயன்

சுடர் 27
கதிர் 135

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 27 திங்கட்கிழமை (09/04/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# இந்தியாவுடன் உறவுகளை சீராக்கும் முயற்சி சறுக்கல்

## ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையே முதலில் எதிர்பார்க்கிறது புதுடில்லி

கொழும்பு, ஏப்ரல் 9

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இராஜதந்திர விரிசலை சரி செய்ய இலங்கை அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்தியாவிடம் இருந்து பச்சைக் கொடி காட்டப்படவில்லை.

விரிசலைச் சீர் செய்யும் நோக்கில் அமைச்சரும் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்கள் குழு ஒன்றை இந்தியாவுக்கு அனுப்பும் திட்டத்துக்கு புதுடில்லியிடம் இருந்துஇதுவரைசாதகமான பதில் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண காத்திரமான நகர்வு ஒன்றை இலங்கை அரசு மேற்கொள்ளும் வரை இலங்கையின் எந்த இராஜதந்திர முயற்சிகளையும் வரவேற்பதில்லை என்று புதுடில்லி கொள்கையளவில் முடிவு செய்திருப்பதாக கொழும்பில் உள்ள இந்திய இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் பஸில் தலைமையிலான அமைச்சர்கள் குழுவின் வருகையையும் உடனடியாக ஊக்குவிப்பதில்லை என்ற முடிவுக்கு இந்திய மத்திய அரசு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அடுத்த மாத முற்பகுதியில் இந்தியா செல்ல பஸில்தலைமையிலான அமைச்சர்கள் குழு திட்டமிட்டிருந்தது. இப்போது அது சாத்திய

04

## பொருளாதார சுமையால் சோகமான புத்தாண்டு

கொழும்பு, ஏப்.9

வரலாற்றில் முதற் தடவையாக மக்கள் சோகங்களைச சுமந்து கொண்டு சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாட வேண்டிய மோசமான நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலை இந்த சித்திரைப் புத்தாண்டுடன் முடிவடையாது, நத்தார் பண்டிகை மற்றும் அடுத்த புதுவருடம் வரை உக்கிரமடைந்து மக்களுக்குப் பெரும் துன்பத்தை ஏற்படுத்தப் போகின்றது என ஐக்கிய தேசியக் கட்சி அபாய எச்சரிக்கை விடுத்தது.

பொருளாதாரப் பெரும் சுமையால் வாழ்வதறியாது திண்டாடித் திரியும் மக்கள் மீது கரிசனை கொண்டு அவர்கள் மீது ஏற்றிவைத்த சுமையை இறக்கிவைக்காது, தனது அசம்பாவிதச் செயல்களை நியாயங்கள் கூறி மூடி

04

## நன்றி சொல்ல பயணமாகும் ஹிஸ்புல்லா

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்திற்கு இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் நாடுகளுக்கு நன்றி தெரிவிக்க அரசு தீர்மானித்துள்ளது. இதற்கிணங்க, சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா இன்று திங்கட்கிழமை சவூதி அரேபியாவுக்கு பயணமாகிறார்.

## நைஜீரியாவில் 38 பேர் சாவு

நைஜீரியாவின் கடுனா நகரில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் குறைந்த பட்சம் 38 பேர் உயிரிழந்தனர். பரபரப்பான வீதியொன்றில் மக்கள் உணவகங்களுக்கு அருகிலும் எரிபொருள் வாங்குவதற்காகவும் திரண்டிருந்தபோதே குண்டு வெடித்தது. குண்டுத் தாக்குதலில் குறைந்தபட்சம் 38 பேர் உயிரிழந்தனர் என்று கடுனா மாநில அவசரகால முகாமைத்துவ முகவரகம் தெரிவித்தது.

3வயதுக் குழந்தைகள் இரண்டு நீரில் மூழ்கி உயிரிழந்த பரிதாபச் சம்பவம் மிருசுவில் வடக்கில் நேற்று இடம்பெற்றுள்ளது.

விரிவாக வாசிக்க
பக்கம் 3ஐப் பார்க்க



தனங்களப்பு யுவதியின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூவர் நேற்று சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விரிவாக வாசிக்க
பக்கம் 3ஐப் பார்க்க

## கேதீஸ்வரத்தில் வெண்கலப் புத்தர்

### படையினர் அதிரடி ; மக்கள் அதிர்ச்சி

முருங்கன், ஏப்.9

மன்னார், திருக்கேதீஸ்வரம் பாலாவி தீர்த்தக் கரைக்குச் சமீபமாக தனியார் காணி ஒன்றில் போயா தினமான - கடந்த வெள்ளிக்கிழமை - வெண்கலத் திலான புத்தர் சிலை திடீரென கொண்டுவரப்பட்டு 'பிரித்' ஓதி வழி பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே குறித்த பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் தனியார் காணியில் சிறிய புத்தர் சிலை ஒன்றை வைத்து வழிபட்டு வந்துள்ளனர்.

ஆனால் தற்போது திடீரென மேற்படி வெண்கலத்திலானசிலைகொண்டு வரப்பட்டு அங்கு வழிபாட்டுத் தலமும் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. சுமார் ஆயிரத்து 500 கிலோ கொண்ட இந்த புத்தர் சிலை வைக்கப்பட்டமை மன்னார் மாவட்ட இந்து மற்றும் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திருக்கேதீஸ்வரத்தின் தீர்த்தக் கரையான பாலாவிக்குச் சமீபமாக, இந்த

04

## இந்தியா செய்வது இராஜதந்திரம்

### அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.9

இலங்கை அரசு மீதான மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினையில் இந்தியா இராஜதந்திரத்தையே கையாண்டு வருகிறது. ஜெனிவாத் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நாடுகளையும் இந்தியா தன் பக்கம் இழுக்க

04

## ஜெனிவா தொடருக்குப் பின் 19 பேர் காணாமற் போயினர்

### அம்பலப்படுத்துகிறார் ரணில்



கொழும்பு, ஏப்.9

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் கூட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் இலங்கையில் காணாமல் போதல் சம்பவங்கள் 19 இடம் பெற்றுள்ளன என்றும் கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம் 456

04

## சிறுபான்மையினரை அரசு நடத்துகின்ற முறை சரியா?

### ஹக்கீமிடம் கேட்கிறார் சுரேஷ்

கொழும்பு, ஏப்.9

வடக்கு, கிழக்கில் வாழும் சிறுபான்மையின மக்கள் இலங்கை அரசால் நீதியாகவும், நேர்மையாகவும் நடத்தப்படுகின்றனரா என்ற கேள்விக்கு சிறுபான்மையின மக்களின் தலைவர்களுள் முக்கியமான ஒருவர் என்ற அடிப்படையில் நண்பர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதிலளிக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

04

## இலங்கையில் பட்டதாரிப் பாட்டி

அறிவுப் பயணத்திற்கு வயது தடையாக அமையாது என்பதை மருதானையைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டியுள்ளார். இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞான பிரிவில் 72 வயதான கருணா வெலிவிடகே என்ற வயோதிபப் பெண் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார். இவர் காலியைச் சேர்ந்தவர்.

## சூதாடிய பொலிஸ்

வவுனியா - மதவாச்சி தனியார் ஹோட்டல் ஒன்றில் சூது விளையாடிக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர், சிறைச்சாலை அதிகாரி உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மதவாச்சி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் நேற்று அதிகாலைமேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## கிழக்கு முதலமைச்சர் வேட்பாளராக ஹக்கீமை நிறுத்த ஜனாதிபதி திட்டம்

கொழும்பு, ஏப்.9

கிழக்கு மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கும் அரசு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமை அரசின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது என்று அலரிமாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடன் ஆலோசித்து வருகிறார் என்றும் ஹக்கீமை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதன் மூலம் அரசுக்கான வெற்றிவாய்ப்பு அதிகரிக்கும் என அவர்களிடம் ஜனாதிபதி எடுத்துக்கூறியுள்ளார் என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களின் விருப்பத்திற்குரிய ஒருவராக

04

## முதலமைச்சர் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவேன்

### பிள்ளையான் அறிவிப்பு

கொழும்பு, ஏப்.9

கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு தேர்தலொன்று வருமாயின், முதலமைச்சர் வேட்பாளராக மீண்டும் நானே போட்டியிடுவேன். அதில் வேறு பேச்சுக்கே இடமில்லை. - இவ்வாறு நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்.


கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டால், அடுத்த முதல

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குணரட்ணம் கடத்தப்பட்ட சம்பவம்: கிரிபத்கொடவில் நடந்தது என்ன?



## வெளிவரும் புதிய தகவல்கள்

கொழும்பு, ஏப்.9

முற்போக்கு சோசலிசக் கட்சியின் தலைவர் பிறேமகுமார் குணரட்ணம், அந்தக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவரான திமுது ஆட்டிக்கல ஆகியோரை தாம் கைது செய்யவில்லை என்று இலங்கை பாதுகாப்புத் தரப்புகள் கைவிரித்துள்ள நிலையில், இவர்கள் கடத்தப்பட்ட சூழல் பற்றிய பின்னணித் தகவல்கள் பல வெளியாகியுள்ளன.

ஆயுதம் தாங்கிய நபர்கள் சிலர் நேற்று அதிகாலை குணரட்ணத்தின் வீட்டுக்குச் சென்றதை அயல்வீட்டுக்காரப் பெண் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து வெளிவந்துள்ள மேலதிக தகவல்கள் வருமாறு:

இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த முற்போக்கு சோசலிசக் கட்சியின் முதலாவது மாநாடு தொடர்பாக, வெள்ளிக்கிழமை மாலை மடிவெல என்ற இடத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட குணரட்ணமும், திமுது ஆட்டிக்கலவும் அதன் பின்னரே இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர் என்று கூறப் படுகிறது.

குறித்த கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை மாலை 6. 30 மணியளவில் முடிவடைந்தது. அதையடுத்து இருவரும் தத்தம் வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

குணரட்ணம் கட்சிச் செயற்பாட்டாளரான மெய்க்காவலர் ஒருவருடன் தனியான வாகனம் ஒன்றில் புறப்பட்டுச் சென்றார்.

அவர்கள் இருவரும் நேராக கிரிபத்கொட பகுதியில் உள்ள வீட்டுக்குச் சென்றனர்.

கிரிபத்கொடவில் இலக்கம் 291/1 கெமுனு மாவத்தையில் உள்ள வீட்டில் குணரட்ணம் தனியாகவே வசித்து வந்தார்.

அவரை அங்கு இறக்கி விட்ட பின்னர், அவரது மெய்க்காவலர் வேறு இடத்துக்குச் சென்றார்.

இரவு 11 மணியளவில் தனது மெய்க்காவலருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட குணரட்ணம், தன்னை அதிகாலை 5 மணியளவில் வந்து ஏற்றிச் செல்லுமாறு கூறியிருந்தார்.

குணரட்ணம் வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் கட்சியின் செயற்பாட்டாளர் ஒருவருடன் தொலைபேசியில் உரையாடினார். அதுவே அவருடனான கடைசித் தொடர்பாடலாக இருந்தது. அதன் பின்னர் அவருடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

அதிகாலை 5 மணிக்கு குணரட்ணத்தை அழைத்துச் செல்ல அவரது மெய்க்காவலர் வாகனத்துடன் அங்கு வந்தார்.

எனினும் நீண்டநேரமாகியும் குணரட்ணம் வெளியே வரவில்லை. சந்தேகம் கொண்ட மெய்க்காவலர் அந்தப் பகுதியை நோட்டமிட்டபோது வீட்டுக்கு வெளியே நான்கு சக்கர வாகனத்தின், சக்கர அடையாளங்களைக் கண்டார். வீட்டின்பின்புறக் கதவு உடைக்கப்பட்டிருந்தது.

குணரட்ணத்தின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கும், அங்கு ஒரு போராட்டம் நடந்ததற்குமான தடயங்களை மெய்க்காவலர் கண்ணுற்றார். அவர் ஏனைய உறுப்பினர்களுக்கு இது தொடர்பாக அறிவித்த பின்னரே குணரட்ணம் கடத்தப்பட்ட விடயம் தெரியவந்தது.

இதேவேளை, குணரட்ணத்தின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் பெண் ஒருவர் பொலிஸாரிடம் பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார்.

''ஆயுதம் தாங்கிய 4, 5 நபர்கள் நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் குணரட்ணம் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தனர். அவர்களில் சிலர் எங்களது வீட்டுக்கு வந்து எரிந்துகொண்டிருந்த மின் விளக்குகளை அணைத்து விட்டு உள்ளே போகுமாறு அச்சுறுத்தும் தொனியில் மிரட்டினர். அதன் பின்னர் வித்தியாசமான சத்தங்களை கேட்க முடிந்தது. ஏதோ ஒரு அசம்பாவிதம் நடப்பதை உணர முடிந்தது. ஆனாலும் என்ன செய்வதென்று எங்களுக்குத் தெரியவில்லை.

எனினும் அதிகாலை 5.15 மணிக்கு வெளியே பார்த்தபோது வழக்கத்துக்கு மாறாக எதுவும் தெரியவில்லை. எல்லாமே இயல்பாக இருப்பது போல இருந்தது.'' என்றனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை குணரட்ணம் கடத்தப்பட்டபோதும் காலை 8 மணி வரை, அவரது 071-3519722 என்ற இலக்கக் கைபேசி இயங்குநிலையில் இருந்தது.

ஆனால் தொடர்பு கொண்டபோது பதில் இல்லை. தற்போது அதன் தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது. அல்லது அழைப்பு பெறமுடியாத நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 8 மணி வரை அந்தக் கைபேசி கிரிபத்கொட பகுதியிலேயே இருப்பதை ஜிபிஎஸ் கணிப்புகள் உறுதிப்படுத்தின என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் மேலதிகமான சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை.

அதேநேரம் கலந்துரையாடலை முடித்துக் கொண்டு வெள்ளிக்கிழமை இரவு திமுது ஆட்டிக்கல பஸ் ஒன்றில் தலவத்துகொடவில் உள்ள தனது வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

காணாமற்போயுள்ள திமுது ஆட்டிக்கலவை கடைசியாக பார்த்தவர் கட்சியின் மற்றொரு தலைவரான துமிந்த நாகமுவ.

கொஸ்வத்த பேருந்து நிலையத்தில் அவர் மாலை 6 மணியளவில் திமுது ஆட்டிக்கலவை இறக்கி விட்டார்.

32/14/7 ஹைலெவல் வீதி, ஹெனவத்த, மீகொடவில் உள்ள வீட்டுக்கு திமுது புறப்பட்டுச் சென்றதை நாகமுவ உறுதி செய்துள்ளார்.

ஆனால் மறுநாள் காலையில் அவரது 077-0325567 என்ற இலக்க கைபேசிக்கு அழைத்தபோது பதில் கிடைக்கவில்லை.

நேற்றுமுன்தினம் காலை 11 மணிவரை அந்தக் கைபேசி இயங்கிக் கொண்டிருந்தது.

அவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டுக்குத் திரும்பவில்லை என்பதும் உறுதியாகியுள்ளது.

குணரட்ணம் காணாமற் போனதையடுத்து பொலிஸ் மா அதிபரிடமும், கிரிபத்கொட, பிலியந்தல பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

''இந்தக் கடத்தல் அரசியல் நோக்கம் கொண்டது. எமது இன்றைய மாநாட்டை நிறுத்துவதற்கான முயற்சியே இது''-என்று தெரிவித்துள்ளார் முற்போக்கு சோசலிசக் கட்சியின் செயற்பாட்டாளர் சேனாதீர குணதிலக.

அண்மையில் விடுமுறைக்காக இலங்கை வந்த குணரட்ணத்தின் மனைவி ஆஸ்திரேலியா திரும்பும்போது விமான நிலையத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

அதேவேளை, இந்தக் கடத்தல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை. குற்றப்புலனாய்வுப் பிரிவினராலோ அல்லது வேறு எந்தக் பொலிஸ் பிரிவினராலோ குணரட்ணம் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸ் திணைக்களப் பேச்சாளர் கூறியுள்ளார்.


ஆஸ்திரேலியக் குடியுரிமை பெற்றவரான குணரட்ணம் காணாமற்போன விடயம் குறித்து கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய தூதரகத்திடமும் முறையிடப்பட்டுள்ளது.

குணரட்ணத்தை இலங்கை அரசு கடுமையாகக் கண்காணித்து வந்ததாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளதாக அவரது கட்சியினர் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இருவரையும் அரச படையினரே கடத்தியுள்ளனர் என்று கட்சி உறுப்பினர்கள் நம்புகின்றனர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, குறிப்பாக வடக்கில் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்து இந்தக் கட்சி பரப்புரைகளை மேற்கொள்ளத் தொடங்கியதன் விளைவாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முற்போக்கு சோசலிசக் கட்சியினர் கருதுகிறார்கள். (ங)

## அரசு மீது இளைஞர்களுக்கு நம்பிக்கையாம் சொல்கிறார் டலஸ்



கொழும்பு, ஏப்.9

தற்போதுள்ள அரசு மீது நாட்டு இளைஞர்கள் நம்பிக்கை கொண்டுள்ளதால், சுதந்திரமாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வழி பிறந்துள்ளது என்று இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வீடமைப்புத் திட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இக்கருத்துக்களை வெளியிட்டார். இதன் போது அவர் மேலும் தெரிவித்தாவது,

கடந்த காலங்களில் இளைஞர்கள் நம்பிக்கை அற்றவர்களாக இருந்தார்கள். அதனால் இளைஞர்கள் பலர் உயிர்த் தியாகம் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ங)

## கட்சியும் மக்களுமே எனக்கு முக்கியம் சத்தியம் செய்கிறார் மேர்வின் சில்வா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது நான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன். எனினும் கட்சிக்கு என்மீது நம்பிக்கை இல்லை என்று தெரியவந்தால் ஒரு நொடிப்பொழுதேனும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்க நான் விரும்பமாட்டேன். - இவ்வாறு பொது மக்கள் தொடர்பு மற்றும் பொதுசன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று களனி பகுதியில் இடம்பெற்ற புதுவருட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மைக் காலமாக எனக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. என்னுடைய வளர்ச்சியையும் கட்சி மீது நான் காட்டுகின்ற விசுவாசத்தையும் விரும்பாத சிலரே இத்தகைய வேலைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு கட்சி பற்றிய எந்த வித அக்கறையும் இருப்பதில்லை. அவர்களின் நோக்கம் எல்லாம் அரசியலில் இருந்து இந்த மேர்வின் சில்வாவை அகற்ற வேண்டும் என்பது தான். நான் யதார்த்தமாகச் சொல்லும் விடயங்களை எல்லாம் திரிவுபடுத்தி வேண்டும் என்றே சர்ச்சைகளை உருவாக்குகிறார்கள். இதற்கு சில ஊடகவியலாளர்களும் துணையாக நிற்கிறார்கள். இவற்றையெல்லாம் பொய் என்று நிரூபிக்க என்னால் முடியும்.

கட்சி மீது நானும் என் மீது கட்சியும் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஒருவேளை என்மீது கட்சிக்கு நம்பிக்கை இல்லாமல் போகுமிடத்து கட்சி என்னைத் தூக்கி எறிய முன்னர் நானாகவே வெளியேறி விடுவேன்.

எனக்கு கட்சியின் பெயரும் நலனும் மக்களும் தான் முக்கியம் - என்றார். (ங)

## மாடியில் இருந்து வீழ்ந்து பெண் சாவு

கொழும்பு, ஏப்.9

மாத்தளை யட்டவத்த வாலவெல்ல பிரதேசத்திலுள்ள இரு மாடிகள் கொண்ட வீட்டின் மேல்தளத்திலிருந்து வீழ்ந்து பெண்ணொருவருர் உயிரிழந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தாயான 39 வயதான பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குடும்பத் தகராறு காரணமாகவே குறித்த பெண் [illegible] தொடர்பாக அப்பெண்ணின் கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

[illegible] மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ங)

## கண்ணைக் கட்டுவோம் காட்டில் தேடுவோம்.....



பொலிஸ் திணைக்களத்தில் புதுவருடக் கொண்டாட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இதன்போது தயிர் முட்டி அடிப்பதற்காக பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கண்ணைக் கட்டுகிறார் பொலிஸ் மா அதிபர் இலங்கக்கோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனங்களப்பு இளம் பெண் கொலை: சந்தேக நபர்கள் மூவர் நேற்றுக்கைது


சுரேஸ்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 9

***கடந்த வருடம் நவம்பர் மாதம் கொலை செய்யப்பட்ட தனங்களப்பு இளம்பெண் அற்புதமலரைக் கொன்ற குற்றச்சாட்டில் மூவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.***

***கடந்த வருடம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி சுப்பிரமணியம் அற்புதமலர் (வயது 24) காணாமற்போயிருந்தார். மூன்று மாதங்களின் பின்னர் கடந்த ஜனவரி மாதம் 25ஆம் திகதி இவரது எலும்பு எச்சங்கள் தனங்களப்புப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டன. உடற்கூற்றுப் பரிசோதனையில் அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.***

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் சுரேஷ், தொக்கையன், ஜெகமோகன் ஆகிய மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனங்களப்பைச் சேர்ந்த சுரேஸ் அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர் என்று கூறப்படுவதை உறுதிப்படுத்த முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனங்களப்பைச் சேர்ந்த வரும் மீசாலையில் வசிப்பவருமான சிவில் பாதுகாப்பு குழுவைச் சேர்ந்த நவரட்ணம் (தொக்கையன்) என்பவரே கொலையின் முக்கிய குற்றவாளி மற்றும் சூத்திரதாரி என்று பொலிஸார் தெரிவித்தனர். சண்முகம் ஜெகமோகன் என்ற மூன்றாவது சந்தேக நபர் இயக்க உறுப்பினர் என்று கூறப்படுகின்றது. ஆனால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இவர்களது முதற்கட்ட வாக்கு மூலங்களில் இருந்து தனங்களப்பைச் சேர்ந்த அற்புதமலரைக் கொன்று களப்பு வயற்கரையில் புதைத்துள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவதினம் காலை 7 மணிக்கு ஜெகமோகனை, குறித்த பெண்ணை அழைத்து வருமாறு பணித்துவிட்டு நவரட்ணம் மண்வெட்டி, உரம் என்பவற்றுடன் களப்பு வயற்கரைக்குச் சென்றுள்ளார். அங்கு சுரேஷ் என்பவரும் சென்றுள்ளார்.

ஜெகமோகன் பெண்ணை அழைத்து வந்ததும் நவரட்ணம் காலைப் பிடிக்க, சுரேஷ் கைகளைப் பிடிக்க ஜெகமோகன் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளார்.

பின்னர் ஜெகமோகனை அவ்விடத்தை விட்டுச் செல்லுமாறு பணித்த நவரட்ணமும், சுரேஷும் வயற்கரையில் பெண்ணை புதைத்துவிட்டுச் சென்றுள்ளனர். விசாரணைகளில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அந்தப் பகுதிக்கு வேட்டைக்காகச் சென்றவர்கள் அங்கு ஆடைகள், காலணிகள் கிடப்பதைக் கண்டு, பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

சம்பவஇடத்துக்குவிரைந்த பொலிஸார் மண்டை ஓட்டுடன் குறித்த யுவதி அணிந்திருந்த ஆடைகளையும் மீட்டனர்.

பெண்ணின் உள்ளாடைகளில் காணப்பட்ட தடயங்களைக் கொண்டு அவர் பலரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வங்கியொன்றில் கடன் பெறுவதற்குச் செல்வதாகத் தெரிவித்துவிட்டே அற்புதமலர் காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றிருந்தார். பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. 3 மாதங்களின் பின்னர் அவரது மண்டையோடு மற்றும் எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானின் நெறிப்படுத்தலில், சாவகச்சேரிப் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொண்டு இந்த மூவரையும் நேற்றைய தினம் கைது செய்தனர். (உ-10)

## குளத்து நீரில் மூழ்கி இரு குழந்தைகள் சாவு

### மிருசுவில் வடக்கில் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்.9

குளத்து நீரில் இறங்கி விளையாடிய மூன்று வயதுக் குழந்தைகள் இரண்டு நீரில் மூழ்கி உயிரிழந்தன. இந்தப் பரிதாபகரமான சம்பவம் மிருசுவில் வடக்கில் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது.

தவசிக்குளத்தைச் சேர்ந்த சந்திரகுமார் இசைப்பிரியன் (வயது 3), மிருசுவில் வடக்கைச் சேர்ந்த செல்லக்குமார் தர்மிதா (வயது 3) ஆகிய குழந்தைகளே உயிரிழந்தன.

குளத்து நீரில் இறங்கி விளையாடிக் கொண்டிருக்கையில் அதிலிருந்த கிடங்குக்குள் குழந்தைகள் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று குளத்தில் இறங்கி சடலங்களை மீட்டவர்கள் தெரிவித்தனர்.

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளைத் திடீரெனக் காணவில்லை என்று தேடிய பெற்றோர் காலடித் தடங்களைப் பின் தொடர்ந்தபோது அவை குளத்துக் கரையில் போய் முடிந்ததைக் கண்டனர். நீச்சல் தெரிந்தவர்கள் அழைக்கப்பட்டு குளத்தில் இறங்கித் தேடிய போது இரு குழந்தைகளதும் சடலங்கள் கிடைத்தன.

உயிரிழந்த இசைப்பிரியனின் தந்தையும் தர்மிகாவின் தாயும் சகோதரர்கள் அவர்கள் தோட்ட வேலைக்குச் சென்றிருந்த சமயம், பிள்ளைகளை உறவினர்கள் வீட்டில் விட்டிருந்தனர்.

வீட்டின் முன்புறம் நின்று குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன. 12.30 மணியளவில் பெற்றோர் வந்து தேடிய போதே குழந்தைகள் காணாமல்போனமை தெரியவந்தது.

அதிர்ச்சியூட்டும் இந்தச் சம்பவத்தால் குழந்தைகளின் உறவினர்கள் பெரும் சோகத்தில் ஆழ்ந்திருந்தனர். சாவகச்சேரி வைத்தியசாலையில் கூடி இருந்த உறவினர்களின் அழுகுரல்களாலும் கதறல்களாலும் அந்தப் பகுதியே துயரத்தில் மூழ்கி இருந்தது. சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (உ-9-15)

## சம்பள உயர்வு கோரி ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்

### இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நாடு தழுவிய ரீதியில்

**சம்பள அதிகரிப்பு, யாப்புச் சீர்திருத்தம், இடமாற்ற ஒழுங்கு விதிகள் உள்ளிட்ட முரண்பாடுகளை தீர்க்கக்கோரி**

யாழ்ப்பாணம், ஏப்.9

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திப் பாடசாலைகளின் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நாடு தழுவிய ரீதியாக ஆசிரியர்கள் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்து வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் இந்த விடயம் தொடர்பாக பேச்சில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இடைக்கால சம்பள அதிகரிப்புத் திட்டம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். 2008 இன் வரவு செலவுத் திட்டத்தின் போது ஆசிரியர் சம்பள உயர்வுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஒரு சதம் கூட வழங்கப்படவில்லை. எனவே அதை உடனடியாக வழங்க வேண்டும்.

அதிபர், ஆசிரியர் சேவை யாப்புகளை மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. அவ்வாறு மாற்றுவதாயின் தொழிற்சங்கத்துடன் பேசியே மாற்றப்பட வேண்டும்.

ஆசிரியர் இடமாற்றங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர் பதவியுயர்வுக்கான பரீட்சைகளை ஒழுங்காக நடத்தி உரியமுறையில் பதவியுயர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தே ஆசிரியர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் கூறினார். (10-3)


மனைப் பொருளாதார திட்டத்தைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தியவர்களுக்கான சான்றிதழ்கள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்டன. வேலணை பிரதேச செயலகப் பிரிவில் திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்திய வேலணைப் பிரதேச கிராம உத்தியோகத்தர் ஒருவருக்கு பிர தேச சபைத் தலைவர் சி.சிவராசா சான்றிதழ் வழங்குகிறார். (ம-7)

## நிகழ்வுகள் இன்று

**கருத்தரங்கு**

பருத்தித்துறை பொது நூல் நிலையத்தின் ஏற்பாட்டில் 'யோகாக்கலை' தொடர்பான கருத்தரங்கு நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்கு நூல் நிலையத்தில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை நகர சபைத் தலைவன் சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் ஆசிரியர் மா.இரத்தினசோதி கருத்துரை நிகழ்த்தவுள்ளார். (ம-8)

**செயலமர்வு**

யாழ்.மாவட்டத்தின் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளில் 50 இற்கு குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் ஆசிரியர்கள், ஆசிரியை ஆலோசகர்கள் ஆகியோருக்கான செயலமர்வு இன்றும் நாளையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-9)

**வர்த்தகச் சந்தை**

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தின் மனைப் பொருளாதார விற்பனை சந்தை ஆரம்பிக்கும் நிகழ்வு காலை 9 மணிக்குப் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வலி.மேற்குப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த விற்பனை சந்தை தொடர்ந்து 3 தினங்கள் நடைபெறவுள்ளது. (ம-14)

## தென் பகுதிகளில் இருந்து வரும் விளக்குமாறுகள் தரமற்ற நிலையில்

### விசனம் தெரிவிக்கின்றனர் குடாநாட்டுப் பாவனையாளர்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.9

தென் பகுதிகளில் இருந்து குடாநாட்டுக்குத் தருவிக்கப்படும் விளக்குமாறு மற்றும் தும்புத் தடிகள் தரம் குறைந்தனவாகக் காணப்படுகின்றன என்று பாவனையாளர்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பாவனைக்காக வாங்கப்பட்டு ஒரு சில நாள்களுக்குள்ளேயே ஈர்க்குகள் கொட்டியும் தும்புகள் கொட்டியும் பாவனைக்கு உதவாது போய்விடுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குடாநாட்டின் வர்த்தக நிலையங்களில் உள்ளூர் பொருள்களே காணப்பட்டன. இதனால் இதன் பாவனை அதிகரித்தும் காணப்பட்டது. தற்போது இந்த நிலைமை முற்றாக மாறியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை உள்ளூர் உற்பத்தியாளர்கள் கவனத்தில் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

உள்ளூரில் இவ்வாறான உற்பத்திகள் இடம்பெறுகின்ற போதும் அவை போதிய அளவில்இடம்பெறுவதில்லை என்றும் அவ்வாறு உற்பத்தி செய்வதை உரிய வகையில் சந்தைப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குடாநாட்டு மக்களின் தேவைகளை உரிய வகையில் நிறைவு செய்யவும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திக்கு ஏற்ற வருவாயைப் பெற்றுக் கொடுக்கவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாவனையாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை இன்று

2011ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை இன்று வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் 62வது அறிக்கையினை, ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில், பொருளாதார வளர்ச்சி, புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட கொள்கை விளக்கங்கள், மத்திய வங்கியின் கணக்கு விவரங்கள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (எ)

## இந்தியாவுடனான உறவுகளை சீராக்கும் முயற்சி சறுக்கல்

01↘ மாகாது என்று தெரிகிறது.

''இலங்கை அரசு ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில், அரசியல்வாதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதில் பயனேதும் இல்லை என்று புதுடில்லி கருதுகின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் காத்திரமான நகர்வுகளை மேற்கொள்ளவும் இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும். அதற்காகவே புதுடில்லி காத்திருக்கிறது. இலங்கையின் நகர்வுகளே எல்லாவற்றையும் தீர்மானிக்கும்'' என்றார் அவர்.

போர்க்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைச் சீராகப் பேணுவதற்காக இரு நாடுகளிலும் விசேட குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. இலங்கைத் தரப்பில் பஸில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் குழுவில் இடம்பெற்றிருந்தனர். இந்தியத் தரப்பில் வெளியுறவுத்துறைச் செயலர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

போர் முடிந்த பின்னரும் இந்தக் குழுவினருக்கு இடையே நெருங்கிய தொடர்புகள் பேணப்பட்டு வந்தன. ஆனால் ஜெனிவா தீர்மானத்தின் பின்னர் இந்தக் குழுக்களும் செயலிழந்த நிலைக்குச் சென்றுள்ளன. (உ)

## பொருளாதார சுமையால் சோகமான புத்தாண்டு

01↘ மறைக்கவே அரசு முயற்சித்து வருகின்றது என ஐ.தே.கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டினார்.

நாட்டில் தற்போதைய பொருளாதார நிலையில் இந்த சித்திரைப் புத்தாண்டு மக்களுக்கு எவ்வாறிருக்கும் என்பது தொடர்பில் 'உதய'னிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசு, மக்கள் மீது ஏற்றிவைத்துள்ள பொருளாதாரப் பெரும் சுமையால் மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்துவருகின்றனர். வியாபாரிகள், விவசாயிகள், ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் பொருளாதார ரீதியில் மட்டுமல்லாது வாழ்வியலிலும் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

புத்தாண்டு என்பது மக்களுக்குப் புத்துணர்ச்சியையும், மகிழ்ச்சியையும், மனநிறைவையும் ஏற்படுத்துவதாக அமையவேண்டும். ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளின்படி சித்திரைப் புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்க முடியாத நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அபாயநிலை இந்த சித்திரைப் புத்தாண்டுடன் முடிவடைந்துவிடாது. வருகின்ற நத்தார் பண்டிகை, அடுத்த புதுவருடம் வரையில் உக்கிரத்துடன் கூடிய பெரும் தாக்கத்தை மக்களுக்கு ஏற்படுத்தும். அந்தளவிற்கு அரசின் பொருளாதார நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

மக்கள்மீது பெரும்சுமையை ஏற்றிவைத்த அரசு, அதனை இறக்கிவைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்காது, தனது செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு முயற்சித்து, பொறுப்புணர்வற்ற முறையில் கருத்து வெளியிடுவதானது எமக்கு மிகவும் கவலையளிக்கின்றது - என்றார்.

## கேதீஸ்வரத்தில் வெண்கலப் புத்தர்

01↘ பௌத்த வழிபாட்டுத் தலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் இந்துக்கள் மத்தியில் அச்ச உணர்வும் பீதியும் காணப்படுகிறது.

இந்தப் பகுதியில் பௌத்த மக்கள் எவரும் வசிக்காத நிலையில், தனியார் காணியை அபகரித்து பௌத்த தலம் அமைக்கப்பட்டுள்ளமை திருக்கேதீச்சரம் தனித்து இந்து மத வழிபாட்டிடமாக இருப்பதை மாசுபடுத்துவதற்கான திட்டமிட்ட நடவடிக்கை என்று பிரதேச இந்து, கிறிஸ்தவ மக்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

புதிதாக மத வழிபாட்டுத் தலங்கள் அமைப்பதற்கு பிரதேச செயலகம் மற்றும் கலாசார, மத விவகாரங்கள் அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும்.

ஆனால் இந்த நடைமுறை ஏதும் கைக்கொள்ளப்படாமல் படையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்றும் சைவப் பெரியார்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

(ஒ-86)

## ஜெனிவா தொடருக்குப் பின் 19 பேர் காணாமற் போயினர்

01↘ பேர் காணாமல் போன சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்ட இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் இருவர் காணாமல் போனமை குறித்து தான் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

மக்கள் போராட்ட இயக்க முக்கியஸ்தர்களான பிரேம்குமார் குணரட்ணம் மற்றும் திமுது ஆட்டிகல ஆகியோர் காணாமல் போனமை தொடர்பில் நாம் ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. நாட்டில் நீதியும் பாதுகாப்பும் எந்தளவில் உள்ளன என்பதை இதன்மூலம் விளங்கிக் கொள்ள முடிகின்றது.

கடந்த ஆறு மாதங்களில் காணாமல்போன சம்பவங்கள் 56 இடம்பெற்றுள்ளன. ஜெனிவாவில் மனித உரிமைப் பேரவை கூட்டம் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் மாத்திரம் 19 காணாமல்போதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியிருக்கும் இச்சம்பவங்களைத் தடுத்து நிறுத்தவோ அல்லது இச்சம்பவங்களுடன் தொடர்புள்ள குற்றவாளிகளைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவோ இந்த அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்த நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கடமை. ஆனால், சாதாரண மக்களை மாத்திரமின்றி வியாபாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோரும் காணாமல் போகக் கூடிய சூழ்நிலையைத்தான் இந்த அரசு உருவாக்கியிருக்கின்றது - என்றார் ரணில்.

## சிறுபான்மையினரை அரசு நடத்துகின்ற முறை சரியா?

01↘ விடுத்துள்ளார்.

கம்பன் விழாவுக்கு முக்கிய அதிதியாக அழைப்புவிடுக்கும் அளவுக்கு தமிழில் பாண்டித்தியம் பெற்ற தமிழ்மகன் நண்பர் ஹக்கீம், தமிழ் பேசும் மக்கள் தொடர்பிலான இலங்கை அரசின் செயற்பாடுகளை ஏற்றுக் கொண்டுள்ளாரா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் மருதமுனையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில், புலம்பெயர் தமிழர்களைக் கடுமையாக விமர்சித்திருந்தார். அத்துடன், உயிருடன் இருந்த பிரபாகரனால் தமிழீழத்தைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. ஆனால், பிரபாகரனின் வெற்றுடல் அதனைப் பெற்றுத்தரும் என புலத்தமிழர்கள் கனவு காண்கின்றனர் என்றும் ஹக்கீம் சரமாரியாக விமர்சித்துள்ளார். அமைச்சர் ஹக்கீமின் கடும் போக்குடைய இந்த உரை தமிழ் உணர்வாளர்களைச் கொதிப்படையச் செய்துள்ளது. சிறுபான்மையின மக்களின் மனங்களையும் நோகடித்துள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தேர் தலையும், அரசியல் சுயலாபங்களையும் இலக்கு வைத்தே, தான் ஒரு சிறுபான்மையினத் தலைவன் என்பதைக்கூட மறந்து ஹக்கீம் வீரவசனம் பேசுகின்றார் என்றெல்லாம் விமர்சனங்கள் குவிந்தவண்ணமுள்ளன.

இந்நிலையில், புலம்பெயர் தமிழர்களை அமைச்சர் ஹக்கீம் விமர்சித்துள்ளமை உட்பட முக்கிய சில காரணிகள் தொடர்பில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பியிடம் கருத்துக் கேட்டோம்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நீதியமைச்சர் என்ற அடிப்படையில் நண்பர் அமைச்சர் ஹக்கீம் ஜெனிவா சென்றதை நாம் ஏற்கின்றோம். அமைச்சர் என்ற அடிப்படையில் அவர் அரசின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும்.

ஆனால், இலங்கைவாழ் சிறுபான்மையின மக்கள் தொடர்பில் அரசு முன்னெடுக்கும் செயற்பாடுகளை நண்பர் ஹக்கீம் ஏற்றுக்கொள்வாரா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கவேண்டும்.

புலம்பெயர் தமிழர்களையோ அல்லது இங்கு வாழ் தமிழர்களையோ விமர்சிப்பது அவரின் ஜனநாயக உரிமை. அதை எவராலும் கட்டுப்படுத்தமுடியாது. இருப்பினும், சிறுபான்மையினத் தலைவர்களுள் ஒருவர் என்ற அடிப்படையில் அவரின் காட்டமான விமர்சனங்கள் ஆரோக்கியமானதா என்பது பற்றியும் அவர் சிந்திக்க வேண்டும். ஏனையவர்களின் மனங்களும் நோகாத வகையிலேயே கருத்துகள் இருத்தல்வேண்டும்.

கம்பன் விழாவில் முக்கிய அதிதியாகக் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கும் அளவுக்கு தமிழ்ப் பாண்டித்தியம் பெற்ற நண்பர் ஹக்கீம், வடக்கு, கிழக்கில் வாழும் சிறுபான்மையின மக்கள் நீதியாகவும், நேர்மையாகவும் அரசினால் நடத்தப்படுகின்றனரா என்ற கேள்விக்கும் பதிலளிக்க வேண்டும் - எனக் கோரியுள்ளார் சுரேஷ் எம்.பி.

## இந்தியா செய்வது இராஜதந்திரம்

01↘ முடிவு செய்துள்ளது. இதற்கும் இராஜதந் திரத்தையே இந்தியா கையாளும்.

- இவ்வாறு இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஐ.நாவில் அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரித்தமைக்குப் பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் சிதம்பரம் மேலும் பேசியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆளுங்கட்சிக்கும், எதிர்க் கட்சிகளுக்கும் பொறுப்புகள் உள்ளன. அதைக் காங்கிரஸ் மதித்து நடக்கிறது.

இலங்கையும் இறையாண்மை பெற்ற நாடு. எனவே, அயல்நாடு தொடர்பான பிரச்சினையில் ஒவ்வொரு கட்டமாகத்தான் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

அதன்படி, முதல்கட்டமாக கவனமாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வெளியிட்டார்.

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தியா முடிவெடுக்கும் எனப் பின்னர் அறிவிக்கப்பட்டது.

பின்னர் மார்ச் 19 இல் ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டது, அதைப் பிரதமர் வெளியிட்டார். மிகுந்த கவனத்தோடு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது.

அந்த அறிக்கை இந்தியாவுக்கு மட்டுமல்ல, 46 நாடுகளுக்கும் விடுக்கப்பட்ட செய்தி. சில நாடுகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையே அது.

ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை 24 நாடுகள் ஆதரித்தன; 15 நாடுகள் எதிர்த்தன, 8 நாடுகள் நடுநிலை வகித்தன.

இந்தியா தனது அறிக்கையை கவனமாகத் தயாரித்திருக்காவிடின் ஆதரவு, எதிர்ப்பு நிலை மாறியிருக்கும். எனவேதான் மிகுந்த இராஜதந்திரத்தோடு இந்த விடயம் கையாளப்பட்டது.

மொரிசியஸ், ரஷ்யா, பாகிஸ்தான், சீனா, சவூதி அரேபியா உள்ளிட்ட நாடுகள் அந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன.

இந்தத் தீர்மானத்தின் மீதான அடுத்த நிலையில், இந்த நாடுகளையும் தனது பக்கம் இழுக்கும் இராஜதந்திரத்தையும் இந்தியா கையாளும். - என்றார்.

## கிழக்கு முதலமைச்சர் வேட்பாளராக ஹக்கீமை நிறுத்த ஜனாதிபதி திட்டம்

01↘ ஹக்கீம் இருப்பதால், அரசின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக அவரை நிறுத்துவதே கிழக்கு மாகாணத்தை அரசு கைப்பற்றுவதற்கான சரியான நகர்வாக அமையும் என்று ஜனாதிபதி அந்த அமைச்சர்களிடம் கூறியுள்ளாராம்.

இத்தகவலை அறிந்த அரசுடன் இணைந்துள்ள ஏனைய முஸ்லிம் கட்சிகள், முதலமைச்சர் வேட்பாளராக ஹக்கீம் நிறுத்தப்படுவதை விரும்பவில்லை என்று அறியமுடிகின்றது.

இது தொடர்பில் ஜனாதிபதி தமது கட்சிகளின் ஆலோசனைகளை உள்வாங்கியே இறுதி முடிவை எடுக்கவேண்டும் என்று முஸ்லிம் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் சிலர் நேற்று 'உதய'னிடம் தெரிவித்தனர்.

''கிழக்கில் தமது கட்சிகளுக்கு தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்ல ஆதரவு உள்ளதால் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் நாம் முக்கிய இடத்தை வகிக்கப் போகின்றோம். ஆகவே, அரசு எடுக்கும் தீர்மானத்தில் எமது கருத்துகள் உள்ளடக்கப்படவேண்டும்'' - என்று அக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஹக்கீமை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதென்ற ஜனாதிபதியின் தீர்மானம் சரியானதே என்றும் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றுவதற்கான சரியான நகர்வு இதுவென்றும் சில அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

(சி)

## முதலமைச்சர் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவேன்

01↘ மைச்சர் பதவிக்காகப் போட்டியிடுவீர்களா எனக் கேட்ட போதே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

''கிழக்கு மாகாணசபை கலைக்கப்படுமா என்பது பற்றி எனக்கு இதுவரை எந்தத் தகவலும் அறியக் கிடைக்கவில்லை. எவரும் என்னுடன் அதைப்பற்றிப் பேசவுமில்லை. நீங்கள் கூறுவதன்படி மாகாணசபை கலைக்கப்பட்டால் முதலமைச்சர் பதவிக்கு நான் போட்டியிடுவேன். இப்போது முதலமைச்சராக நான் பணியாற்றுகிறேன். அடுத்த முறையும் போட்டியிடுவேன். இதில் வேறு கேள்விக்கே இடமில்லை'' - என்றார் முதலமைச்சர் சந்திர காந்தன்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவு தொடர்பில் ஏதாவது விட்டுக்கொடுப்பைச் செய்வீர்களா எனக் கேட்டபோது பதிலளித்த அவர், ''முதலில் தேர்தல் அறிவிப்பு வெளிவரட்டுமே. பின்னர் எனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பேன்'' என்றார்.

இதேவேளை, கிழக்கு மாகாணசபை ஜூலை மாதமளவில் கலைக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது என அரச தரப்பு வட்டாரங்கள் நேற்று மீண்டும் 'உதயனி'டம் உறுதியாகத் தெரிவித்தன.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒரே வேளையில் வந்து படமெடுத்து நிற்கும் அரவங்களிடமிருந்து தப்ப...

''மனிதன் மறந்தாலும் காலம் மறக்கமாட்டாது'' என்பது ஒரு மறக்க முடியாத முதுமொழி. அதற்கு அமைய ஆறு வருடங்களுக்கு முன்னர் திருகோணமலை மாவட்டம் மூதூரில், பிரான்ஸின் பட்டினிக்கு எதிரான தொண்டு (Action Faim) நிறுவனத்தில், பணிபுரிந்த பதினேழு தமிழ் இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட்ட கொடுமையை இலங்கை அரசாங்கம் அடியோடு மறந்துவிட்டது.

ஆனால் அந்தத் தொண்டர் நிறுவனத்தின் மாதாவான பிரெஞ்சு அரசு மறக்கவில்லை; அந்த அரசால் அதனை எப்படித்தான் மறக்க முடியும்?

அந்தத் திட்டமிட்ட படுகொலைகள் குறித்து, இலங்கை அரசாங்கத்தின் சார்பில், ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று விசாரணை நடத்திய போதிலும், ஆணைக்குழுவின் அறிக்கை எங்கே போயிற்று, என்ன ஆயிற்று என்பது குறித்து எதுவுமே தெரியாது.

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தின் பணியாளர்களின் கொலைகள் உட்பட, 2006 ஆம் ஆண்டுப் பகுதியில் மூதூரில் நடத்தப்பட்ட பதினைந்து வன்முறைச் சம்பவங்கள் குறித்து, விசாரணை நடத்துவதற்கென ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

விசாரணைகளை நடத்திய ஆணைக்குழு, தனது அறிக்கையை இந்த நாட்டின் ஜனாதிபதியிடம் கையளித்திருந்தது. அத்தோடு முடிவுற்றது நீதி தேடும் அத்தியாயம்.

ஆணைக்குழுவின் அறிக்கை, சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் கிடப்பில் போடப்பட்டு செல்லரித்துப் போயிற்றோ என்னவோ!

பதினைந்து வன்முறைச் சம்பவங்களிலும் பலியானோரின் உறவுகள், ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சம்பந்தப் பட்டவர்களிடம் கையளிக்கப்பட்ட ஒருசில மாதங்களிலேயே, அது ''பதுக்கி'' வைக்கப்பட்டு விட்டது என்று முடிவு கட்டி, அந்த விசாரணை அறிக்கை ஊடாக, தமக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்பதனை உணர்ந்து மௌனித்துப் போயிருப்பர்.

இது போன்ற விவகாரங்களில், கொழும்பு அரசு, எப்போதும், ''அந்தா பார், இந்தா பார்'' என்று முதலில் ''படை கலக்குவதும்'' பின்னர் வசதியாக மறந்துபோய் அறிக்கைகளை மறைத்து விடுவதும் சர்வ சாதாரணம். அதுவும் தமிழ் மக்கள் தொடர்பான விடயங் களில், எந்தப் பெரும் விவகாரங்களிலும், ஆட்சியில் இருப்பது எந்தக் கட்சியாக இருப்பினும், வாய்ப்பாடு மாற்றப்படுவதில்லை;

1983 ஆம் ஆண்டில், நாடளாவிய ரீதியில் சிறுபான்மை இனத்தவரான தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்ட ''கொலவெறி'' ஆட்டத்தினால் உண்டான உயிர் உடைமை இழப்புக்களுக்கு, உரிய வகையில் நஷ்டஈடு வழங்குதலோ, இன நல்லுறவுச் செயற்பாடு களோ அரச தரப்புக்களால் தேவைக்கு ஏற்ற அளவில் மேற்கொள் ளப்படவில்லை.

அத்தகைய முன்னுதாரணங்களை மனதில் கொண்டு, பாதிக்கப் பட்ட மூதூர் மக்கள் மறந்து போயிருந்தாலும் கூட, பிரெஞ்சு அரசு மறந்து விடவில்லை.

மனித நேயத்துக்கும் மனிதாபிமானத்துக்கும், மனித உரிமைகளுக்கும் மதிப்பும் முன்னுரிமையும் வழங்கும் பிரான்ஸ் போன்ற நாடுகள், அவற்றை எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் மறந்து போகா.

அதனாலேயே, ஆறு வருடங்களுக்கு முன்னர் மூதூரில் பலி எடுக்கப்பட்ட பட்டினிக்கு எதிரான தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மீதான படுகொலைகள் குறித்த விசாரணை அறிக்கை என்னாயிற்று என்று -

கொழும்பில் உள்ள பிரெஞ்சு நாட்டின் தூதுவர், எங்கள் நாட்டின் சட்டமா அதிபரிடம் இது தொடர்பாக பென்னம்பெரிய கேள்வியை எழுப்பி உள்ளார்.

இலங்கைக்கு எதிராக, இலங்கை அரசுக்கு எதிராக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்காவின் தீர்மானம் உருவாக்கிய அமர்க்களமும், அல்லோலகல்லோலமும், புயலும் இன்னும் அடங்கி விடவில்லை.

அதனை அடுத்துத் தொடுத்து, அமெரிக்க செனட் சபைக்கு, அந்த நாட்டு அரசின், மனித உரிமைகளுக்கான சர்வதேச போர்க்குற்றங் களுக்கான விசேட அலுவலர் ஸ்ரீபன் ராப், இலங்கை தன்மீதான போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து, விசாரிப்பதற்கு சுயாதீனமான, பக்கச்சார்பில்லாத, விசாரணை ஒன்றைக் கட்டாயம் நடத்தியாக வேண்டும் என்று இடித்துரைத்திருந்தார்.

அதாவது, இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு குறிப்பிடத் தவறிய, நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்கு சுயாதீன விசாரணைக்குழு மிகவும் அவசியம். காலம் தாழ்த்தாமல் இலங்கை அரசு அதனைச் செய்தாக வேண்டும் என்றும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அவை குறித்த விடயங்களை நேற்று முன்தினம் இப்பத்தியில் விசாலமாக எடுத்துக் காட்டியிருந்தோம்.

ஜெனிவாத் தீர்மானம் குறித்து ஒரு தெளிவான நிலைத் தளத்துக்கு வாராது, தள்ளாடித் ததும்பும் எங்கள் நாட்டு அரசுக்கு, ஸ்ரீபன் ராப்பின் அறிக்கையும், 2006 ஆம் ஆண்டின் மூதூர்க் கொலைகள் குறித்த விசாரணை அறிக்கையும் இரண்டாம், மூன்றாம் சோதனைக் களங்களாக முன்னெழுந்து நிற்கின்றன.

வெவ்வேறு புற்றுக்களிலிருந்து வந்த மூன்று பாம்புகள், ஒரே நேரத்தில் முன்னால் நின்று படமெடுத்துக் காத்திருக்கும் ஒரு காட்சி இங்கே தோன்றுகிறது அல்லவா?

பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வதற்கு, சமயோசிதமான, சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வல்ல படிமுறைகளுக்குப் பணிவதா, இல்லையா?

எதிர்கொள்ள வேண்டிய பாதக நிலைகள், எத்தகையனவாக அமையும் என்பதனை எல்லா வழித்துறைகள் மூலமும் உய்த் துணர்ந்து செயற்படுவதிலேயே யாவும் தங்கி உள்ளன. நாம் இறைமை உள்ள நாடு, அதற்குள் எவரும், எந்தவகையிலும் உள்வரவோ, ஊடுருவவோ அனுமதியோம் என்ற வீம்புத்தனம் ஆக்கபூர்வமான பெறுபேறுகளை ஒரு போதும் தரா என்று ஆரம்ப கட்டத்திலேயே உய்த்துணர்வதே உகந்தது நல்லது, காதில் போடுமா அரசு?

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரை பராமரிக்க ஆண்டுக்கு ரூ. 168 கோடி

கொழும்பு, ஏப்.9

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பராமரிக்க ஆண்டு ஒன்றுக்கு 168 கோடி ரூபா செலவாகிறது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐந்து ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியில் இருக்கும் ஒருவர் ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுகிறார்.

இந்த வகையில் மக்கள் வாக்குகளைப் பெற்று கடந்த நாடாளுமன்றத் தொடரில் நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி இந்த முறை தோல்வி கண்டுள்ள அறுபது பேர் ஓய்வூதியச் சம்பளங்களைப் பெறுகின்றனர்.

இவர்களுள் தொண்ணூறு வீதமானோர் ஐந்து ஆண்டுகள் நாடாளு மன்றத்தைப் பிரதிநிதிப்படுத்தியவர்கள்.

இவ்வாறு 600 வரையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியச் சம்பளங்களை வழங்குவது தொடர்பாக மாதமொன்றில் 140 லட்சங்கள் செலவாகின்றன என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

மரணமடையும் நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்குப் பின்னர் அவரது விதவை மனைவிக்கும் அதே அளவுக்குச் சமமானதொரு ஓய்வூதியச் சம்பளம் அவரது இறுதிக்காலம் வரை கிட்டுகிறது.

இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் விதவை மனைவிமார் 200 இற்கும் மேற்பட்டோர் ஓய்வூதியச் சம்பளங்களுக்கு உரித்துடையவர்களாக உள்ளனர்.

ஐந்தாண்டு காலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சேவையாற்றியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உரித்தாகும் தற்போதைய ஓய்வூதியச் சம்பளம் 18 ஆயிரத்து 95 ரூபா. ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்டு நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 36 ஆயிரத்து 190 ரூபா ஓய்வூதியமாகக் கிடைக்கின்றது.

இதேவேளை, ஐந்தாண்டு காலம் நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தியுள்ள அமைச்சர் ஒருவருக்கு 21 ஆயிரத்து 666 ரூபாவும் ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்திவரும் அமைச்சர் ஒருவருக்கு 43 ஆயிரத்து 332 ரூபாவும் ஓய்வூதியமாகக் கிடைக்கிறது.

(ம-22)

# சாதாரண தரப் பெறுபேறுகளில் கொழும்பு மாவட்டம் முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப். 9

அண்மையில் வெளியான சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சித்தியடைந்தவர்கள் வீதத்தை மாவட்ட ரீதியாக நோக்கும் போது கொழும்பு மாவட்டம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் சித்தியடைந்தோர் வீதம் 71.62 ஆகும்.

சித்தியடைந்தோர் 65.15 வீதத்தைப் பெற்று குருநாகல் மாவட்டம் இரண்டாம் இடத்தையும் 64.67 வீதத்தைப் பெற்று மாத்தறை மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் இறுதி 25 ஆவது இடத்தை 35.39 வீதத்தைப் பெற்று கிளிநொச்சி மாவட்டம் பெற்றுள்ளது.

பரீட்சையில் 9 பாடங்களிலும் 'ஏ'தரம் சித்தி பெற்றவர்கள் வீதத்தை நோக்குகையில் 4.24 வீதத்தை கொழும்பு மாவட்டம் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. 2.03 வீதத்தைப் பெற்று கம்பஹா மாவட் டம் இரண்டாம் இடத்தையும், 1.92 வீதத்தைப் பெற்று கண்டி மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற் றுள்ளது. இந்த விடயத்திலும் கிளிநொச்சி மாவட்டமே அனைத்து மாவட்டங்களிலும் கடைசி இடத்தைப் பெற்றுள்ளது.

அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியவர்கள் வீதத்தை நோக்கும் போது மொனராகல மாவட்டம் 10.78 வீதத்தைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுள்ளது. 8.05 வீத்தைப் பெற்று கிளிநொச்சி மாவட்டம் இரண்டாம் இடத்தையும், 6.63 வீதத்தைப் பெற்று மாத்தளை மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியவர்கள் வீதத்தில் கடைசி இடத்தை மன்னார் மாவட்டம் பெற்றுள்ளது.

இலங்கையில் இரண்டு லட்சத்து 70 ஆயிரத்து 32 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். தோற்றியவர்களில் சித்தியடைந்தோர் வீதம் 60.80 ஆகும். அனைத்துப் பாடங்களிலும் 'ஏ' தரச்சித்தி பெற்றோர் வீதம் 1.45 ஆகும். அனைத்துப் பாடங்களிலும் சித்தியடையத் தவறியவர்கள் வீதம் 4.74 ஆகும்.

பரீட்சைத் திணைக்கள ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான பிரிவு மேற்கொண்ட பகுப்பாய்வு அறிக்கை மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

(ம-3)

## கடற்கரைகளைப் பாதுகாக்க கனதியான துணி உறைகள்

கொழும்பு, ஏப். 9

கடற்கரைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு கருங்கற்களைக் கொண்டு அணைகளைப் போடுவதை நிறுத்தி விட்டு அதற்குப் பதிலாக ஜேர்மனியின் தயாரிப்பு ஒன்றான கனதிமிக்க துணிப்பைகளை இந்த ஆண்டின் இறுதியில் அறிமுகப் படுத்துவதற்கு கரையோரப் பாதுகாப்புத் திணைக் களம் தயாராகி வருகின்றது.

முதற் கட்டமாக இந்த வகையான 400 துணிப்பைகளை ஜேர்மனியிலிருந்து தருவிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக் களத்தின் ஆய்வுகள் மற்றும் நிர்மாணப் பிரிவின் தலைமைப் பொறியியலாளரான பந்துல விக்கிரம ஆராச்சி தெரிவித்துள்ளார்.

கனதிமிக்க இந்தத் துணியால் தயாரிக்கப்பட்டுள்ள உறையில் மணலை நிரப்பி கரைகளின் பாதுகாப்புக்காக அவற்றைப் பயன்படுத்தும் முறைமை உலகின் வளர்ச்சியுற்ற பெருமளவு நாடுகளில் இன்று காணப்படுகிறது.

இந்த முறையை அறிமுகப் படுத்துவதன் மூலம் இலங்கையிலும் சுற்றாடல் பாதுகாப்பு என்ற கோணத்தில் பேருதவியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த வகைத் துணி உறை ஒன்றினுள் நான்கு தொன்கள் வரையிலான மணலை நிரப்ப முடியும். இது சுகாதாரமானதாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-22)

## தெல்லிப்பழையில் கர்ப்பிணிகளுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

தெல்லிப்பளைப் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் 45 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அன்பளிப்புப் பொருள்களும் உபசரிப்பும் இன்று காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசிங்க அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழைஆதாரவைத்தியசாலைக் கர்ப்பவதி மருத்துவப் பரிசோதனைக்கு செல்லும் கர்ப்பிணித் தாய்மாருக்கே இவை வழங்கப்படவுள்ளதாக பொறுப்பதிகாரி மேலும் அறிவித்துள்ளனார். (ம-3)

# சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு இலாபத்தில் செயற்படும் சங்கங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ். மாவட்டத்தில் தற்போது பத்து வரையிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பதினைந்து வீத சம்பள அதிகரிப்பை பணியாளர்களுக்கு வழங்க இலாபத்தில் செயற்பட்டு வருகின்றன என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் புதிய சுற்றறிக்கைக்கு அமைவாக சங்கங்கள் இடைலாபத்தில் செயற்பட்டால் மாத்திரமே இந்தப் புதிய சம்பள உயர்வை நடைமுறைப்படுத்த முடியும்.

தற்போது பார்க்கப் போனால் குடா நாட்டில் பத்து வரையான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த 15 வீத சம்பள உயர்வை பணியாளர்களுக்கு வழங்க முடியும்.

அதனை விட இருபது வரையான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சுற்று நிருபத்துக்கு அமைய 5 வீத சம்பள உயர்வை வழங்க கூடியதாக இருக்கும்.

பெரும் நட்டத்தில் செயற்பட்டு பணியாளர்களுக்கே மாதாந்த கொடுப்பனவை வழங்க முடியாது இருக்கும் சங்கங்கள் இந்த 5 வீத சம்பள உயர்வை கூட வழங்க முடியாத இக்கட்டான நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இலாபத்தில் செயற்படும் சங்கங்கள் இந்தச் சம்பள உயர்வைப் பணியாளர்களுக்கு விரைந்து வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி ஒழுங்கைப் பின்பற்றாததால் ஆபத்தை எதிர்கொள்ளும் மாணவர்

### கைப்பேசியாலும் எவ்வேளையும் ஆபத்து

முல்லைத்தீவு,ஏப்.9

முல்லைத்தீவு பாடசாலை மாணவ, மாணவிகள் வீதி ஒழுங்குகளைக் கடைப் பிடிக்காது வரிசையாகச் செல்வதால் வீதி விபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

பாடசாலைகளுக்குச் செல்லும் போதும், வீடுகளுக்குச் செல்லும் போதும், தனியார் வகுப்புக்களுக்குச் சென்று வரும் போதும் மாணவர்கள் வீதி ஒழுங்குகளைக் கடைப் பிடிக்காது வரிசையாகச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

தற்போது தென்பகுதியிலிருந்து அதிகளவு வாகனங்கள் இங்கு வந்து செல்கின்றன. அவை அதிவேகத்துடன் பயணிப்பதையும் காண முடிகின்றது. இந்த நிலையில் மாணவர்களின் இத்தகைய செயற்பாடுகள் பெரும் வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு வழி அமைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சில சந்தர்ப்பங்களில் பின்னால் வரும் வாகனங்களின் ஒலியைக் கேட்டு இவர்கள் அதிர்ச்சியில் ஒருவரோடு ஒருவர் மோதி விழுவதும் உண்டு.

அத்துடன் இவர்கள் வீதிகளில் செல்லும் போது, தொலைபேசியில் உரையாடுவதால் ஆபத்துக்களை எதிர்கொள்ளும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே இந்த மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பொலிஸார் இதில் தலையிட்டு இவர்களை ஒழுங்குபடுத்தவேண்டுமென பலரும் கேட்டுக்கொண்டுள்ளனர். (க-500)

## ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர் கைவிரல் அடையாளப் பதிவு வவுனியாவுக்கு இயந்திரம்

**ஊழியர் சேமலாப நிதியில் இணைந்து கொள்ளும் அனைத்து ஊழியர்களினதும் பெருவிரல் கையடையாளம் எடுக்கும் பணி நாடெங்கிலும் இடம்பெற்று வருகின்றது.**

வவுனியா,ஏப்.9

வடமாகாணத்திலுள்ள இரண்டு மாவட்ட தொழில் திணைக்களங்களில் ஊழியர் சேமலாபநிதிக்கான அங்கத்தவர்கள் கைவிரல் அடையாளம் பதிக்கும் இயந்திரம் மிக விரைவில் பொருத்தப் படவுள்ளது.

இந்தத் தகவலைத் தெரிவித்தார் வவுனியா மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திருமதி லீலாவதி ஆனந்த நடேசன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழியர் சேமலாப நிதியில் இணைந்து கொள்ளும் அனைத்து ஊழியர்களினதும் பெருவிரல் கையடையாளம் எடுக்கும் பணி நாடெங்கிலும் இடம்பெற்று வருகின்றது. அதற்கென மாவட்ட அலுவலகங்களில் விசேட கைரேகை பதிக்கும் இயந்திரமும் பொருத்தப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டத் தொழில் திணைக்களங்களில் இன்னும் இருமாதங்களில் இந்த இயந்திரங்கள் பொருத்தப் படவுள்ளன.

வவுனியா மாவட்ட தொழிற் திணைக்கள அலுவலகப் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அவை நிறைவடைந்ததும் இந்த இயந்திரம் இங்கு பொருத்தப்படும்.

இதன் மூலம் வவுனியா மாவட்டத்திலுள்ளவர்கள் எதிர்காலத்தில் எதிர்நோக்கக் கூடிய அசௌகரியங்களிலிருந்து விடுபட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-400)

## கிளிநொச்சி ஜெயபுரத்தில் படகுத் தொழிற்சாலை

அக்கராயன்,ஏப்.9

கிளிநொச்சி ஜெயபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள படகுக் கட்டுமான தொழில் நிலையம் அடுத்த வாரம் தொடக்கம் இயங்கவுள்ளது.

ஐ.எல்.ஓ. நிறுவன உதவியுடன் பூநகரி கடல் தொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் இந்தப் படகுத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் நீர்கொழும்பில் பயிற்சி பெற்ற 10 பேர் படகு கட்டும் வேலைகளில் ஈடுபடவுள்ளனர். பூநகரியில் கடல்தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தப் படகுத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது.

இங்கு உற்பத்தியாகும் படகுகள் மிகக்குறைந்த விலையில் கடல்தொழிலாளர்களுக்கு எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## வீதிக் குழியில் புதைந்தது வாகனம்

அக்கராயன்,ஏப்.9

கிளிநொச்சி வன்னேரிக்குளத்துக்கும் ஜெயபுரத்துக்கும் இடையிலான 5 ஆம் மதகுப் பகுதியில் வீதியின் நடுவில் அமைந்துள்ள பெரும் குழியில் கனரக வாகனம் ஒன்று கடந்த 3 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் புதையுண்டதால் 3 மணித்தியாலங்களாகப் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது.

இந்தக் குழி தொடர்பாகக் கரைச்சிபிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

வன்னேரிக்குளத்தின் நீர் சிறுபோகத்திற்கெனத் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், இக்குழியில் நீர் நிரம்புவதால் வாகனம் புதையும் நிலை ஏற்பட்டது. பின்பு புதையுண்ட வாகனம் மீட்கப்பட்டு தற்காலிகமாக குழியில் கிரவல் இடப்பட்டுள்ளது.

வீதியின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்ட போது முழங்காவில் மருத்துவமனையின் அம்புலன்ஸ் இரு மணித்தியாலமாகக் காத்திருக்க வேண்டிய அவலம் நேர்ந்தது. (க-18)

## உதவிகள் இன்றி வாழும் முன்னாள் போராளிகள்

முல்லைத்தீவு,ஏப்.9

தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கு இதுவரையில் எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கு அரசினால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக தகவல் தெரிவிக்கின்ற நிலையில் இவர்கள் மட்டும் புறக்கணிக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது.

அரசினால் எந்த வித உதவிகளும் வழங்கப்படாததால் இவர்கள் தொழிலின்றி வறுமையில் வாடுவதை அவதானிக்க முடிகின்றது.

இவர்கள் தொழிலொன்றை மேற்கொள்வதற்கு நிதி வசதி இல்லாததால் வீண் பொழுதைக் கழிக்க வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

இவர்களின் குடும்பங்களும் எதுவுமற்ற நிலையில் வறுமையில் வாடுகின்றன.

எனவே அரசு இவர்களின் பரிதாபகரமான நிலையைக் கருத்திற் கொண்டு உதவ வேண்டும் என்பதே இங்குள்ளவர்களின் வேண்டுகோளாக உள்ளது. (க-500)

## தமிழறிவுப் போட்டியில் முதல் நிலை

கிளிநொச்சி,ஏப்.9

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட தமிழறிவுப் போட்டியில் திருவையாறு மகாவித்தியாலயம் முதல் நிலை பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிடையே, உலக தரிசனம் நிறுவனத்தால் தரம் 10 மற்றும் தரம் 11 மாணவர்களிடையே நடத்தப்பட்ட இந்த வினாவிடைப் போட்டியிலேயே கிளிநொச்சி திருவையாறு மகாவித்தியாலய மாணவிகள் முதலிடத்தைப் பெற்று வெற்றிபெற்றுள்ளனர். (க-6)

## வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 17,098 வாகன வரிப்பத்திரங்கள்

### மார்ச் மாதம் வரை விநியோகம்


வவுனியா,ஏப்.9

வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மார்ச் மாதம் வரை 17 ஆயிரத்து 98 வாகன வரிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று வவுனியா தெற்குப் பிரதேச செயலர் அ.சிவபாத சுந்தரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பிரதேசத்தில் கடந்த காலங்களில் மொத்தமாக 21 ஆயிரத்து 584 வாகனங்களே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தற்போது 17 ஆயிரத்து 98 வாகனங்களுக்கான வரிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் 2 பஸ்கள், ஆயிரத்து 32 உழவு இயந்திரங்கள், 929 லொறிகள், 278 கார், 11 ஆயிரத்து 587 மோட்டார் சைக்கிள்கள், 2ஆயிரத்து 248ஓட்டோக்கள், 34 ஒட்டோ வான்கள், 138 பஸ்கள், 58 தனியார் போக்குவரத்து பஸ்கள் 792 இரட்டைசில்லு உழவு இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு தற்போது வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதியாகவுள்ள வாகனங்களுக்கான வரி அனுமதிப்பத்திரங்கள் ஓரிரு தினங்களுக்குள் வழங்கப்பட்டு விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை வடமாகாணத்திலுள்ள வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் பிரதம செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த மாதம் 31 ஆம் திகதி வரை வாகன அனுமதிப் பத்திரங்களைப் பரிசோதிப்பதில் தளர்வைக் கடைப்பிடித்த போக்குவரத்து பொலிஸார் அக்காலப்பகுதி நிறைவடைந்ததை அடுத்து இரவு பகல் எனப் பாராது மூலை முடுக்குகள் எல்லாம் வாகன வரிப் பத்திரங்களின் பரிசீலனையைத் துரிதமாக மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-400)



கிளிநொச்சியில் துரிதமாக அமைக்கப்பட்டு வரும் மின்சார 'கிறிட்'. (405)

## இந்து ஆலய வளாகத்தில் வேறு மத சிலையமைக்க முயற்சி

வவுனியா,ஏப்.9

வவுனியாநொச்சிமோட்டை கிராமத்தில் இந்து ஆலயம் அமைந்துள்ள இடத்தில் கிறிஸ்தவ சிலை நிறுவப்பட்டு வருவதை எதிர்த்து அந்த ஊர் கிராமத்தினர் எழுத்து மூலமான ஆட்சேபம் ஒன்றை வவுனியா பிரதேச செயலரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டு போர் அச்சம் காரணமாக இந்த ஊர் மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். சுமார் 20 வருடங்களாக இந்த ஆலயத்தை பராமரிப்பதில் இடர்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

மீண்டும்2010ஆம்ஆண்டு இந்த ஆலயத்தில் வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வாறான நிலையில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலம் ஒன்றை நிறுவும் பொருட்டு அந்த மதம் சார் உருவச்சிலையை இங்கு அமைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்து கிராம வாசிகள் முறைப்பாட்டைப் பிரதேச செயலருக்கு அறிக்கை வடிவில் சமர்ப்பித்துள்ளனர். (க-402)

## பண்பாட்டையும் கலாசாரத்தையும் மாணவர்கள் காக்க வேண்டும்

### மாவை கூறுகிறார் அறிவுரை

கிளிநொச்சி, ஏப்.9

ஒழுக்கம் நிறைந்த எமது இனத்தினுடைய பெருமைகளையும் பண்பாட்டையும், கலாசாரத்தையும் கட்டிக் காக்க வேண்டிய மிக முக்கியமான பொறுப்பு மாணவர் சமுதாயத்திடமே உள்ளது- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துக்குப் பிரான்ஸ் நாட்டைச் சோந்த வட்டக்கச்சி- இராமநாதபுரம் மக்கள் ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்பின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஒழுங்குபடுத்தலின் ஊடாக நீர்த் தாங்கி அமைக்கப்பட்டு அதனைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி பாடசாலை அதிபர் எம்.சி.எல் [illegible] தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மாவை இதனைத் தெரிவித்தார்.


''நாம் பல்வேறு சாதனைகளையும் ஒழுக்கத்தையும் தன்னகத்தே கொண்ட வட்டக்கச்சி மக்களுடைய வாழ்க்கை முறை, கலாசாரம், பண்பாட்டை பேணி வாழ்கின்ற முறை, சாதனை படைக்கும் ஆற்றல் போன்றவற்றை அறிந்தும் பார்த்தும் மகிழ்ந்தது உண்டு.

வட்டக்கச்சி என்கின்ற இந்த மண் வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும் உருவாக்கியுள்ளது என்பதற்கு அப்பால் தமிழ்த் தேசியம் நிறைந்த தேசிய வாதிகளையும் தந்த பெருமைக்குரியதாக விளங்குகின்றது.

இப்போது எமது நாட்டிலே மாணவர்களது மோசமான பழக்கவழக்கங்கள், ஒழுக்க நெறிப்பிறழ்வுகள் போன்றன அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இது திருத்தப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-426)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனின் உடலில் இருந்து பெரியவெள்ளியில் குருதி கசிவு



கொழும்புத்துறை, ஏப்.9

இயேசுநாதர் மரணித்த பெரியவெள்ளி தினமான கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புத்துறை மணியந் தோட்டப் பகுதியில் இளைஞர் ஒருவரின் கைகள், கால்கள் மற்றும் விலாவில் இருந்து குருதி கசிந்த அற்புதச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

மணியந்தோட்டம் 10ஆம் குறுக்கு வீதியில் வசிக்கும் பபி றொசான் (வயது 26) என்பவருடைய உடற்பாகங்களில் இருந்தே குருதி கசிந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது:-

பெரிய வெள்ளிக்கிழமை இரவு படுக்கையில் இருந்த போது 11 மணியளவில் றொசான் "என்னைச் சிலுவையில் அறைகிறார்கள் சிலுவையில் அறைகிறார்கள்'' என்று துடிதுடித்துக் கத்தினார். வீட்டார் ஓடிச் சென்று பார்த்த போது கை, கால்களில் இருந்து குருதி கசிந்தது.

அப்போது அவர் தன்னை வெள்ளைத்துணியில் படுக்க வைக்குமாறு கூறியுள்ளார். அதன் பின் மயக்கமடைந்துள்ளார். சனிக்கிழமை காலை வரை அவர் மயக்கத்திலேயே இருந்தார். பெருமளவான மக்கள் இந்தச் சம்பவத்தை சென்று பார்வையிட்டனர், (10-135)

## நீர்வேலியில் சங்கிலி அபகரிப்பு

அச்சுவேலி, ஏப். 9

நீர்வேலி கரந்தன் பகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணின் மூன்று பவுண் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து நீர்வேலிக்கு உறவினரின் திருமணத்தில் கலந்து கொள்வதற்கு வந்திருந்த யுவதி கடந்த சனிக்கிழமை நண்பகல் குடை பிடித்துக் கொண்டு வீதியில் நடந்து சென்றுள்ளார். இந்தவேளையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் யுவதியைக் கடந்து சென்று திரும்பி வந்து சங்கிலியை அறுத்துள்ளனர். சங்கிலியை அறுக்கும் யுவதியின் முகத்தில் கீறல் காயங்களும் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-11)

## 810 மார்க்கத்துக்கான சேவையை ஆரம்பிக்குக

### இ.போ.ச. அதிகாரிகளிடம் கோரிக்கை

தென்மராட்சி,ஏப்.9

நீண்டகாலமாக இடைநிறுத்தப்பட்டுள்ள 810 மார்க்க சாவகச்சேரி கேரதீவு பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு தனங்கிளப்பு தொடக்கம் கேரதீவு வரையான பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இ.போ.ச. வட பிராந்திய கோண்டாவில் டிப்போ அதிகாரிகளிடம் கேட்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதால் மன்னாரிலிருந்து வரும் பஸ்களுக்காக நீண்ட நேரம் காத்திருக்கின்றோம். தற்போது கேரதீவுடன் பூநகரி பாலம் புனரமைக்கப்பட்டதால் 810 மார்க்க சேவையை சாவகச்சேரியிலிருந்து பூநகரி வரை நடத்துமாறும் அவர்கள் கோருகின்றனர்.

இந்தப் பஸ்சேவை நடத்தப்படுவதால் தென்மராட்சி தெற்கு, பூநகரி போன்ற பிரதேச மக்கள் சாவகச்சேரியில் வைத்தியசாலை உட்பட தமது பல்வேறு கருமங்களை மேற்கொள்ள வசதி கிடைப்பதுடன் பூநகரியில் உள்ள திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தரும் பயன் பெறுவர் எனவும் கூறப்பட்டது. (ம-9)

## அபகரிக்கப்படும் கால்நடைகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

வலி. தென்மேற்குப் பகுதிகளில் அடிக்கடி கால்நடைகள் அபகரித்துச் செல்லப்படுகின்றன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் ஆடு கொள்வனவு செய்ய வருபவர்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று கிராமப்புற மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நவாலி தெற்கு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் தனது ஆட்டைத் தேடிச் சென்ற போது அது ஆடுகளின் பட்டி ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளார்.

நீண்ட காலமாக கால்நடைகள் காணாமற் போகும் சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் இதனால் காணாமற் போகும் ஆடுகள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றன என்பது இதுவரை காலமும் தெரியாது இருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பஸ் தரிப்பிடம் இல்லாது விழிப்புலனிழந்தோர் அவதி



கைதடி, ஏப். 9

நவீல்ட் பாடசாலை மற்றும் பல அரச திணைக்களங்களை கொண்ட கைதடி ஏ-9 வீதியில் பஸ் தரிப்பிடம் இல்லாததால் இந்த இடத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகள் பெரும் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியை அண்டிய பிரதேசத்தில் விழிப்புலனிழந்தோர், செவிப் புலனிழந்தோர் தொழிற் பூங்கா, வடமாகாணத்தின் அரச திணைக்களங்களின் தலைமையக அலுவலகங்கள், அரச மத்திய மருந்தகம் உள்ளிட்ட பல முக்கிய நிறுவனங்கள் உள்ளன. இங்குள்ளோர் கடமை முடிந்து பஸ்ஸில் செல்வதற்காக பஸ்ஸை எதிர்பார்த்து வீதியில் வெயிலில் காத்திருக்க வேண்டியுள்ளது.

இதேவேளை விழிப்புலனிழந்த மாணவர்கள் பாடசாலை விட்டதும் மதிய வேளைகளில் கொடும் வெயிலுக்கு மத்தியில் பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடி கவனமெடுத்து பஸ் தரிப்பிடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(ம-288)

## குடிதண்ணீர் குழாய்கள் விஷமிகளால் சேதம்

யாழ்ப்பாணம், ஏப்.9

வலி. மேற்கு - அராலி வடக்கில் குடிதண்ணீர் குழாய்கள் விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. இதனால் பிரதேச சபையால் வழங்கப்படும் குடிதண்ணீர் சேவையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உலக தரிசன நிறுவன நிதிப் பங்களிப்புடன் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் குழாய்களே விஷமிகளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அராலி வடக்கில் உள்ள உப தபால் அலுவலக விளம்பரப் பலகையும் விஷமிகளால் கழற்றப்பட்டு பலசரக்குக் கடை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளோர் விவரம் கிடைத்துள்ளதாகவும் விரைவில் இவர்கள் மீதான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (ம)

## வீச்சு வலையால் மீன்பிடிப்போர் எண்ணிக்கை குறைந்துவிட்டது

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ். கரையோர பகுதியில் கரையோர வீச்சு வலை மூலம் மீன் பிடிப்போரின் எண்ணிக்கை தற்போது அருகிவிட்டதாக கடற்றொழிலாளி ஒருவர் தெரிவித்தார்.

குருநகர், பாஷையூர், நாவாந்துறை, பண்ணை போன்ற கடலோர பகுதிகளில் வீச்சு விலையை பயன்படுத்தி மீன்பிடிக்கும் பணிகள் தற்போது அருகிவிட்டன.

இந்தக் கடல் கரையோர பகுதியில் மீனின் வருகை மிகமிக குறைந்ததை அடுத்து இந்த வீச்சு கரையோர வலையைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் தொழில் முற்றாக அருகிவிட்டதாக மீனவர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள அனேகமான கடற்றொழிலாளர்கள் முன்னர் இந்த வீச்சு வலையை பயன்படுத்தி மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

கடலில் கடலுணவுகளின் பெருக்கம் தினமும் அருகி செல்வதால்தான் இந்த மீன்கள் கரைக்கு வருவது மிக குறைந்தும் காணப்படுகின்றன.

இவ்வாறாக மீன்களின் வருகை குறைவடைந்ததை அடுத்தே தாம் இந்த வீச்சு வலை மூலம் மீன் பிடிக்கும் தொழிலை கைவிட்டதாக் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ம-17)

## தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்க மக்கள் ஆலோசனையைப் பெற முடிவு

வலி.தென் மேற்கு, ஏப்.9

வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பது குறித்து பொது மக்களின் ஆலோசனையைப் பெறுவதற்கு பிரதேச சபை முன்வந்துள்ளது.

அதுவரை இதற்கான அனுமதி வழங்குவது பிற்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஆனைக்கோட்டையிலுள்ள பிரதேச சபையின் உப அலுவலகத்துக்கு அருகில் உள்ள தனியார் காணியில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு இந்திய நிறுவனம் ஒன்று வலி.தென் மேற்குப் பிரதேச சபையிடம் விண்ணப்பித்திருந்தது.

இந்தப் பிரதேசத்தில் சபைச் செயலாளரின் நிர்வாகத்தின் காலப் பகுதியில் பொது மக்களின் அபிப்பிராயம் கோரப்படாமல் பல தொலைத் தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தனியார் காணிகளிலும் கட்டடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள இந்த கோபுரங்கள் மூலம் பிரதேச சபைக்கு மட்டுமல்ல தனியாரும் அதிக வருமானத்தைப் பெற்று வருகின்றர். இந்த நிலையில் தற்பொழுது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் பிரதேச சபையிடம் ஆனைக்கோட்டையிலுள்ள தனியார் காணியில் தொலைத்தொடர்பு கோபுரத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு இந்திய நிறுவனம் ஒன்று விண்ணப்பித்துள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் இதுபற்றி விரிவாக ஆராயப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு சபை இதற்கான அனுமதியை வழங்கியிருந்த போதிலும் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களின் [illegible] கோபுரம் அமைப்பதற்கான அனுமதி வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. (ம-115)

## கூட்டுறவுப் பணியாளருக்கு சேவை மனப்பான்மை தேவை

### மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ். குடாநாட்டில் பணியாற்றும் கூட்டுறவுப் பணியாளர்கள் சேவை மனப்பான்மையுடனும் இதய சுத்தியுடனும் பணியாற்ற வேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்க கிளைகளில் ரொக்க வியாபாரத்தை அதிகரிப்பதுடன் சங்கங்களின் வளர்ச்சிக்கு தமது முழுமையான பங்களிப்பை மேற்கொள்வதற்கு முன்வர வேண்டும்.

> தற்போதைய சம்பள உயர்வை நடைமுறைப் படுத்துவதற்கு பணியாளர்கள் தமது சேவையை இதய சுத்தியுடன் மேற்கொள்வதே சிறந்ததாகும்.

சகல விற்பனை நிலையங்களிலும் போதியளவு பொருள்களை களஞ்சியப்படுத்தி நுகர்வோரை கவரும் வகையில் அதன் விற்பனையை அதிகரிக்க வேண்டும்.

தற்போதைய சம்பள உயர்வை நடைமுறைப் படுத்துவதற்கு பணியாளர்கள் தமது சேவையை இதய சுத்தியுடன் மேற்கொள்வதே சிறந்ததாகும்.

ஒவ்வொரு விற்பனை நிலையங்களும் மாதாந்தம் ரொக்க வியாபார நடவடிக்கையை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு கிளை நிலையங்களின் ரொக்க வியாபாரத்தை அதிகரிப்பதன் மூலமே பணியாளர்களுக்கான சகல கொடுப்பனவுகளையும் சீராக வழங்க முடியும்.

நுகர்வோரின் வசதி கருதி விற்பனை நிலையங்களின் கடமை நேரங்களையும் பார்க்காது பணியாளர்களின் சேவை அதிகரிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு வீடமைப்புத் திட்டத்தில் 99.5 வீத பணி யாழ். மாவட்டத்தில் பூர்த்தி

அச்சுவேலி, ஏப். 9

வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மானத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 13ஆயிரத்து 269 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வடக்கு, கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மானத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் விபரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு - 361 வீடுகள், நல்லூர் பிரதேச செயலர்-பிரிவு - 537 வீடுகள், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு - 1053 வீடுகள், சங்கானை பிரதேச செயலர் பிரிவு - 1589 வீடுகள், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு - 2557 வீடுகள், உடுவில் பிரதேச செயலர் பிரிவு - 1124 வீடுகள், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு - 955 வீடுகள், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு - 2396 வீடுகள், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு - 873 வீடுகள்.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு 364 வீடுகள், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு - 331 வீடுகள், வேலணை பிரதேச செயலர் பிரிவு - 443 வீடுகள், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு - 360 வீடுகள், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு - 301 வீடுகள், மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு - 25 வீடுகள்.

யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 342. கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 269.

காணி உறுதி பயனாளிகளின் பெயரில் இல்லாமை, உள்ளூர் இடப்பெயர்வு, குடும்பங்கள் பிரிந்தமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 73 வீடுகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

பிரதேசசெயலர் பிரிவு வாரியாக ஆகக் கூடியளவு வீடுகள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. குறைந்த எண்ணிக்கை அளவான வீடுகள் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் கட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் 99.5 வீதம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (ம-11)

# சனத்தொகையில் ஒரு லட்சம் பேரில் 66 பேருக்கு காச நோய்த் தாக்கம்

| | |
|---|---|
| 2005ஆம் ஆண்டு | – 361 |
| 2006, 2007 ஆம் ஆண்டு | – 481 |
| 2008ஆம் ஆண்டு | – 380 |
| 2009ஆம் ஆண்டு | – 348 |
| 2010ஆம் ஆண்டு | – 354 |

யாழ்ப்பாணம், ஏப். 9

இலங்கையின் சனத்தொகையில் ஒரு லட்சத்தில் 66 பேர் காசநோய்க்கு உட்படுகின்றனர். இந்த நோயாளர்களை தொடர்ச்சியான கிளினிக், நவீன மருந்துகள் உணவுப்பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை கையாளுவதன் மூலம் வருடா வருடம் 10 பேர் நோயிலிருந்து விடுபடுவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன என்று மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் சி. யமுனானந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் இந்த வருடம் 3 மாதங்களில் 83 பேர் காச நோய்க்கு உட்பட்டுள்ளனர்.

கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த வருடம் மட்டும் 2 ஆயிரத்து 707 பேர் காசநோய்க்கு உட்பட்டுள்ளனர்.

2005 ஆம் ஆண்டில் 361 பேரும், 2006 ஆம் ஆண்டு 2007 ஆம் ஆண்டு 481 பேரும், 2008 ஆம் ஆண்டு 380 பேரும், 2009 ஆம் ஆண்டு 348 பேரும், 2010 ஆம் ஆண்டு 354 பேரும் காசநோய்க்கு உட்பட்டுள்ளனர் என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் 45 வயதுக்கும் 543 வயதுக்கும் இடைப்பட்டவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். 2010 ஆம் ஆண்டு 24 பேரும், 2011 ஆம் ஆண்டு 26 பேரும் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர்- என்று அவர் மேலும் கூறினார். (ம-13)

## 10 சாரதிகள், நடத்துநர் அனுமதிப் பத்திரம் ரத்து

கொழும்பு, ஏப்.9

பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட 10 சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான அனுமதி பத்திரத்தை ரத்து செய்வதற்குத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரோஷான் குணவர்தன கூறியுள்ளார்.

இதேவேளை பஸ் ஊழியர்களின் நடவடிக்கைகள் குறித்து மாதமொன்றுக்குச் சுமார் 50 முறைப்பாடுகள் தமக்குக் கிடைப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# காக்கும் தெய்வம் பன்றித்தலைச்சி அம்மன்

அருணன், மட்டுவில்



மட்டுவில் பதியில் அமைந்திருந்து காத்தருளும் தெய்வமாகவும் மக்கள் துயர் தீர்க்கும் தெய்வமாகவும் விளங்குகிறாள் பன்றித்தலைச்சி அம்மன். மட்டுவிலில் பனை ஓலையால் வேயப்பட்ட குடிலில்இருந்து அருளாட்சி புரிந்த அம்மன் இன்று வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது.

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் ஆலயம் 1750 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்டது. ஆலயத்தில் குடில் வடிவில் அமைக்கப்பட்ட அம்பாளின் மூலஸ்தான இருப்பிடம் பிற்பட்ட காலத்திலேயே மாற்றம் செய்யப்பட்டது. அம்பாள் ஆலயத்தில் எப்போதுமே பழைமை பேணப்பட்டு வருவது சிறப்பம்சமாகக் கொள்ளப்படுகிறது. ஆலய வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துப் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தவர் அமரர் சிவகுரு ஆவார். அவரது திருப்பணி செயற்பாட்டால் 43 அடி உயரம் கொண்ட மூன்று தளங்களைக் கொண்ட கோபுரம் அமைக்கப்பட்டு வருகிறது. ஆலயத்தின் வடக்குப் பகுதியில் 125 அடிக்கு மேற்பட்ட நீளமுடைய தீர்த்தக் கேணியும் அமைந்து காணப்படுகிறது.


அம்பாள் ஆலயத்தில் தினமும் ஐந்து காலப் பூசைகள் இடம்பெற்று வருகின்றன. இங்கு சிறப்பான வழிபாட்டுக்கான காலமாக பங்குனித் திங்கள் காலம் விளங்குகிறது. இந்த நாள்களில் மட்டுவில் சூழலே விழாக்கோலம் பூண்டு காணப்படும். இந்த வீதிகள் தொடக்கம் வீதிகள் யாவும் துப்புரவு செய்யப்படும்.

இந்த நாள்களில் ஆலயத்தில் விசேட வழிபாடுகள், பூசைகள், திருவிழாக்கள் நடைபெறும். குடாநாடு உட்பட ஏனைய பாகங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆலயத்தில் ஒன்று திரண்டு பொங்கல், பூசைகளில் பங்கு பற்றுவர்.

பக்தர்கள் பொங்கல் நேர்த்திக்கடன்களை செய்வதுடன் காவடி எடுத்தல், பாற்செம்பு எடுத்தல் போன்ற வகையில் தமது நேர்த்திக்கடன்களையும் நிறைவு செய்வர். மட்டுவில் என்றால் நினைவில் தோன்றுவது மட்டுவில் கத்தரிக்காய். அம்பாளுக்கு வெண்பொங்கல் செய்து நிவேதிப்பவர்கள் கத்தரிக்காயையும் சமைத்து வைப்பர். இது அங்கு விசேடமாகக் கொள்ளப்படுகிறது.

இம்முறை பங்குனித் திங்கள் உற்சவம் 3 வாரங்கள் இடம்பெற்று நான்காவது வாரமான இன்றுடன் நிறைவு பெறுகிறது.

# கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபனத்தின் முகாமையாளராக இருந்து அதன் வளர்ச்சிக்கும் செயற்பாடுகளுக்கும், ஊக்கமளித்து ஒத்துழைப்பு நல்கி வந்த
ஆறுமுகம் தர்மலிங்கம்
அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாருக்கு எமது ஸ்தாபனம் தனது துயரக் கண்ணீரைக் காணிக்கையாக்கி இத் துன்ப நிகழ்வில் பங்கேற்றுக்கொள்கிறது. அன்னாரின் ஆத்மா அம்பிகையின் பாத கமலங்களிற் சாந்தி பெறவும், குடும்பத்தினர் மன ஆறுதல் பெறவும் எல்லாம் வல்ல ஸ்ரீநாகபூஷணி அம்பிகையைப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

## அமரர்
## ஆறுமுகம் தர்மலிங்கம்

(முகாமையாளர்-மக்மில்லன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்)

**குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா,**
**மக்மில்லன் புத்தகசாலை**

இல,3 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

195, ஓல்கொட்-மாவத்தை
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏற்றமிகு இளைஞரைப் போற்றி வாழ்த்துகின்றோம்

கொழும்பு கம்பன் கழகம் வழங்கிய ஏற்றமிகு இளைஞர் விருதினைப் பெற்ற நாதஸ்வர வித்துவான்
**திரு.கு.பாலமுருகன்** அவர்கள் இன்னும் இன்னும் பெரும் பெரும் விருதுகளைப் பெற்றுச் சாதனைகள் படைக்க வேண்டுமென்று நெஞ்சார வாழ்த்துகின்றோம்.


**திருநெல்வேலி பழங்கிணற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகராலயம்.**

(சீ/727) (2-6-7)

# மரண அறிவித்தல்

## இராமநாதன் அமுதசிங்கம்

(இ.போ.சபை சாரதி காரைநகர் சாலை)



பொன்னாவளை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் அமுதசிங்கம் நேற்று முன்தினம் (07.04.2012) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற காசிநாதர் குலசேகரத்தின் அன்பு மருமகனும் பத்மலீலாவின் (ஆசிரியை - யா/ தியாகராஜா மத்தியமகா வித்தியாலயம் காரைநகர்), அன்புக் கணவரும், பிரணவரூபன், றவீந்திரன், மஞ்சுளா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவராசா (நீர்கொழும்பு), கங்காதரன் (பிரான்ஸ்), சோமசேகரம் காலஞ்சென்ற சுசிலா தேவி மற்றும் தவமணி (பசறை), தவராசா (S.V.M) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.04.2012) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பொன்னாவளை
களபூமி, காரைநகர்.** (16665)

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

# DIGITAL ELECTRONICS

## புத்தாண்டை முன்னிட்டு சிறப்பு விலையில்

## SHARP *நிழற்படப்பிரதி இயந்திரம்*



- A3 கலர் ஸ்கானிங்
- நிமிடத்துக்கு 18 பிரதிகள்
- 01 வருடம் /6000 பிரதிகளுக்கான உத்தரவாதம்
- 01 வருட இலவச பராமரிப்புச் சேவை

**105,000/=
+ Vat**
மட்டுமே

**உடன்
விரையுங்கள்**

*கையிருப்பு உள்ளவரை மட்டுமே...*

***அழையுங்கள்:***


Brown & Company *ஆல் அங்கிகரிக்கப்பட்ட ஏக முகவர்கள்*

## டிஜிட்டல் எலக்ரோணிக்ஸ்

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லி வீதி, சம்பத் வங்கி முன்பாக)

**T.P.: 0212224040, 0776623824, 0772078636**

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை அன்பழகன்

(கிராம அலுவலர்)

நயினாதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை அன்பழகன் நேற்று (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (புகையிரத நிலைய அதிபர்) மற்றும் மங்களேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், அனலைதீவைச் சேர்ந்த சுந்தரலிங்கம்-பராசக்தி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சித்திராதேவியின் அன்புக் கணவரும், வராகி, லக்சி, பவிந்தன், ரஜிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலினி, பிரியதர்ஷினி, அன்பரசன், யசோதினி ஆகியோரின் பாசமிகு சகோதரும், அலெக்சாண்டர் பிளமிங், வைகுந்தவாசன், கோபாலசிவம், சசிகுமார், கேதீஸ்வரி, ஜெயந்தி, ரேவதி, பிரேமா, சுகந்தி, நந்தினி ஆகியோரின் மைத்துனரும், ரமேஸ், தனபதி, ராஜ்குமார், அலன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (11.04.2012) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதடி விநாயகர் ஆலயக் கூட்டம் கால வரையறை இன்றி ஒத்திவைப்பு

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது குறித்து கவலை தெரிவித்துள்ள அடியார்கள் காலக்கிரமத்தில் பொதுக் கூட்டத்தை நடத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென்று கோரியுள்ளனர். குடாநாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும்.

**வழிபடுவோர் சங்கத்தின் கூட்டம் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக இடம் பெறவில்லை.**

இந்த ஆலயம் முற்றாக இடிக்கப்பட்டு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பிகளால் கருங்கற்களால் சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்டு வருகின்றது. பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்த ஆலயத்தின் கட்டட வேலைகள் 50 வீதத்துக்கு மேல் பூர்த்தி அடைந்த நிலையில் உள்ளது. இந்த நிலையில் ஆலயத்தின் வழிபடுவோர் சங்கத்தின் கூட்டம் கடந்த 3 வருடங்களுக்கு மேலாக இடம் பெறவில்லை. இந்த நிலை குறித்து சங்க உறுப்பினர்கள் யாழ். அரச அதிபரின் கவனத்துக்குத் தெரியப்படுத்தினர். அத்துடன் பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்டிருந்தனர். அடியார்களின் கோரிக்கையைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம் பெறும் என்று அங்கத்தவர்களுக்கு சங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தற்போது காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

(ம-115)

## 31 ஆம் நாளில் நினைவுகூருகிறோம்

எமது பாடசாலையின் ஆசிரியை திருமதி வதனி சிவனேஸ்வரனின் பாசமிகு சகோதரி (10.03.2012) அன்று சிவபதம் எய்திய

செல்வி

**கந்தசாமி போகராணி**

அவர்களின் 31ஆம் நாளை நினைவுகூருவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கரம்பைக்குறிச்சி,
அ.த.க. பாடசாலைச் சமூகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



03.04.2012 செவ்வாய்க்கிழமை, கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கல்வி மாணிப் பட்டம் பெற்ற மானிப்பாய், சோதி வேம்படி வித்தியாலய அதிபர்

திருமதி

*சத்தியகுமாரி சிவகுமார்*

அவர்களை மேலும் பல பட்டம் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோம்.

'சத்திய வாசா'
ஆஸ்பத்திரி வீதி
சங்கானை

திருமதி.சி.நாகேஸ்வரி
(தாய்)
மற்றும் குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது சகதோழர் சிவசுப்பிரமணியம் சிவரூபன் (விற்பனையாளர், நல்லூர் ப.நோ.கூ. சங்கம்) அவர்களின் அன்புத் தாய்

திருமதி **சிவசுப்பிரமணியம் பாக்கியலட்சுமி**

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.


கூட்டுறவு ஊழியர்
தொழிற்சங்கம்,
கிளை - நல்லூர் ப.நோ.கூ. சங்கம்.

(16672)

## விழிநீர் சொரிய அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி அ.பத்மலீலா அவர்களின் அன்புக் கணவர்

*இராமநாதன் அமுதசிங்கம்*



அவர்களின் அகால மரணத்தால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கலாநிதி ஆ.தியாகராசா
மத்திய மகா வித்தியாலயம்,
காரைநகர்.

அதிபர்,
ஆசிரியர், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

O/L, A/L, B.A. மாணவர்களுக்கான ஆங்கில இலக்கண வகுப்புகள், By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை, கீரிமலை வீதி, சண்டிலிப்பாய்.

தொடர்பு: 077 6751649

**கணினி திருத்தம்**
(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம்.

அழையுங்கள் 0779086737

**காணி விற்பனைக்கு**

மீசாலை, புத்தூர்ச் சந்தியில் (சியாமளா மில் முன்பாக) A-9 வீதியில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
"குமரன் சில்க்"
சாவகச்சேரி.
T.P.: 0774147246

## தவறிவிட்டது

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் எனும் முகவரியுடைய சீவரத்தினம் கோபிநாத் என்பவரின் தேசிய அ.அ. (911551179V), தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய நீல நிற பேர்ஸ் கொக்குவில் சந்திக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0771795266/ 0215681278 எனும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**மோட்டார் சைக்கிள்கள் தேவை**

நல்ல நிலையிலுள்ள சகலவிதமான மோட்டார்சைக்கிள்களும் வாங்கப்படும். விற்கவிரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(15804)(6-7-8) T.P : 077 7705307

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள Hero Honda Hunk விற்பனைக்குண்டு.

T.P.: 0783 25 8808

# மெனிக்பாம் முகாமில் கொள்ளை சந்தேகத்தில் பெண்ணொருவர் கைது

வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் அமைந்துள்ள வீடொன்றில், தங்க நகைகள் மற்றும் பணம் என்பவற்றை கொள்ளையிட்டார் என்ற சந்தேகத்தில் பெண் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்து ஒரு லட்சத்து 34 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் இரண்டாயிரம் ரூபா பணமும் நேற்று இரவு 7 மணியளவில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இது குறித்து செட்டிக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், அப்பிரதேசத்தில் உள்ள பெண் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து, களவாடப்பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மரண அறிவித்தல்



திருமதி

**கமலாதேவி அருளம்பலம்**

கொக்குவில் கிழக்கு, நாமகள் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் கமலாதேவி நேற்றுமுன்தினம் (07.04.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருளம்பலத்தின் அன்பு மனைவியும் இந்திராதேவி, வாமதேவி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தி (யாழ். மாநகரசபை), உருத்திரானந்தன் (கொழும்பு மாநகரசபை) ஆகியோரின் பாசமிகு தாயும் காசிலிங்கம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், உதவிப்பதிவாளர் நாயகம் அலுவலகம், வடக்கு வலயம், யாழ்ப்பாணம்), அனுஷா ஆகியோரின் மாமியும் கஜானன், கஜனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2012) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாமகள் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(16620)

தகவல் :
உருத்திரானந்தன் (மகன்)
காசிலிங்கம் (மருமகன்)

## வேலணை பிரதேச சபையின் ஆழ்ந்த அனுதாபங்கள்

வேலணை பிரதேச சபையின் ஆயுள்வேத அலுவலர் பொ.அன்பரசனின் சகோதரன்

**பொன்னுத்துரை சித்திரா**

(முன்னாள் கிராம அதிகாரி G.S.-J/34)

அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதேச சபை,
வேலணை.

(சி/741)

தலைவர், செயலாளர்,
உறுப்பினர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

**சிவசுப்பிரமணியம் பாக்கியலட்சுமி**



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் பாக்கியலட்சுமி நேற்று (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரநாதன் - ருக்குமணி தம்பதியரின் அன்பு மகளும் சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் சிவரூபனின் அன்புத் தாயும் ஜெயரூபியின் அன்பு மாமியும் பரணிதாஸ், பரணிகா, பிரசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கேசலட்சுமி, மாணிக்கராசா, தனலட்சுமி, சிவராசா, பாலசரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2012) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சிவரூபன் (மகன்)
சிவசுப்பிரமணியம் (கணவர்)
உறவினர்

ஆனைக்கோட்டை,
(சந்தி)

(14586)

### திருமதி திரேசம்மா தேவதாஸ் (சறோ)

கரம்பன் தெற்கினைப் பிறப்பிடமாகவும் சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா தேவதாஸ் நேற்று (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை-லூட்ஸ்மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ம.யோ.அரசரட்ணம் - ஞானப்பு அரசரட்ணம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஜோசப் தேவதாஸின் (ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர் - யாழ். மத்தியகல்லூரி) அன்பு மனைவியும் T.டனியலா துஸ்யந்தி, A.J.கீதாஞ்சலி ஆகியோரின் அருமைத் தாயும் அன்ரன் ஜெயராஜ் இன் அன்பு மாமியும் கிறிஸ்ரிகாவின் அருமைப் பேர்த்தியும் M.F.சேவியர், டேய்சி அன்னமலர், Dr.ம.யேசுதாசன், M.கொன்சால்வே (பாலன்), மரிய ராஜேஸ்வரி (ராஜி), தோமஸ்றெஜி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளைமறுதினம் (11.04.2012) புதன்கிழமை அன்று இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

43, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.தேவதாஸ் (கணவர்),
கீதாஞ்சலி அன்ரன் ஜெயராஜ் (மகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 130 பொதுமக்கள் சாவு

## சிரியாவில் அதிகரிக்கிறது அரச பயங்கரவாதம்



லாதம்னா, ஏப்.9

சிரியாவில் பல இடங்களில் அரச படைகள் நடத்திய தொடர்ச்சியான தாக்குதல்களில் பொதுமக்கள் 130 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்நாட்டிலுள்ள அரச எதிர்ப்பு ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

ஹமா மாகாணத்திலுள்ள லாதம்னா நகரத்தில் முதலில் எறிகணைகளை வீசிய இராணுவத்தினர் பின்னர் அந்த ஊருக்குள் அதிரடியாக நுழைய முயன்றனர் என்று கூறப்படுகிறது.

ஹோம்ஸ் நகரிலும் பல பகுதிகளில் தாக்குதல் நடந்துள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

ஏராளமான சடலங்கள் சிறு டிரக் வண்டிகளில் குவித்து வைக்கப்பட்டிருப்பதையும் சிறுபிள்ளை ஒன்றின் சடலம் தூக்கிச் செல்லப்படுவதையும் காட்டும் காணொலி படம் ஒன்று இணைய தளத்தில் வலம் வருகின்றது.

ஹோம்ஸ் நகரில் ஏராளமானோர் ஒட்டுமொத்தமாக கொல்லப்பட்டதாகத் தெரியும் ஒரு சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் குறைந்தபட்சம் பதிமூன்று பேரின் சடலங்களை உறுதிசெய்யப்படாத இந்த காணொலி படம் காட்டுகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பு நிறுவனங்கள் போன்றவற்றை அனுமதிக்காத சிரிய அரசு, பொது மக்கள் மீது மோசமான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளமை சர்வதேச அளவில் எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்துள்ளது.

## யேமனில் விமான நிலையம் தகர்ப்பு



யேமன் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி மாதம் சலே பதவி விலகினார்.

தற்போது காபட்ரப்போ மன்சூர் ஹாடி புதிய ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார்.

இந்த நிலையில் தலைநகர் சனாவில் உள்ள விமான நிலையம் மீது டிரக்குகளில் வந்த சிலர் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

அதில் விமானப் போக்குவரத்து தகவல் கோபுரமும், கட்டிடங்களும் தகர்ந்ததால், அங்கு விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

## 30 ஆயிரம் கையெழுத்துக்கள் கிடைத்தால் போட்டியிடுவேன்

### எகிப்து முன்னாள் உப ஜனாதிபதி



எகிப்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளமை குறித்த தனது நிலைப்பாட்டை அந்த நாட்டின் முன்னாள் உப ஜனாதிபதி ஓமர் சுலைமான் வெளியிட்டுள்ளார்.

இந்தத் தேர்தலில் இருந்து விலகியிருக்கச் சுலைமான் தீர்மானத்திருந்த போதிலும், அவரைத் தேர்தலில் போட்டியிடுமாறு ஆர்ப்பாட்டகாரர்கள் வலியுறுத்தியதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவி கவிழ்க்கப்பட முன்னர், நாட்டின் உப ஜனாதிபதியாக ஓமர் சுலைமான் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஹொஸ்னி முபாரக் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் நடைபெறும் முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் இஸ்லாமிய சகோதரத்துவ கட்சி சார்பில் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

30 ஆயிரம் கையெழுத்துக்கள் இன்றைய தினத்திற்குள் பெறப்படும் பட்சத்தில் இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ஓமர் சுலைமான் குறிப்பிட்டுள்ளார்

## பத்து வயதுத் தாய்

கொலம்பியாவில் 10 வயது சிறுமி தாயாகி இருப்பது அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது. இவள்தான் உலகிலேயே மிகக் குறைந்த வயதில் தாயானவள் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

கொலம்பியாவின் வடக்கு பகுதியில் வயூ பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். இங்கு 10 வயதுச் சிறுமி ஒருத்தி திடீரென கர்ப்பமானாள். 39 வாரங்கள் தீவிர கண்காணிப்புக்கு பிறகு சிறுமிக்கு பெண் குழந்தை பிறந்தது.

குழந்தை ஆரோக்கியமாக உள்ளது. ஆனால், பிரசவம் சற்று சிக்கலாக இருந்ததால் சத்திரசிகிச்சை செய்து குழந்தை எடுக்கப்பட்டது. இத்தகவலை டெய்லி மெயில் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

சிறுமியுடன் உறவு வைத்த குற்றத்துக்காக, சம்பந்தப்பட்ட சிறுமியின் தந்தை மீது நடவடிக்கை எடுக்க முடியும். புகார் வந்தால் அவரை கைது செய்யவும் கொலம்பிய சட்டத்தில் இடம் உள்ளது. ஆனால், வயூ பழங்குடியின மக்களுக்கு சட்டத்தில் சில சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது தெரியவில்லை என்றும் அந்தப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

கொலம்பியப் பழங்குடியினச் சிறுமி குழந்தை பெற்றெடுத்ததன் மூலம், இவள் தான் உலகிலேயே மிகக் குறைந்த வயதுள்ள தாய் என்று கூறுகின்றனர்.

## செல் பேசிக்காக சிறுநீரகம் விற்ற இளைஞன்

சீனாவில் தனது சிறுநீரகங்களை விற்ற பதின்ம வயது இளைஞன் ஒருவரது உடலில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர் உட்பட ஐந்து பேர் மீது, அந்த இளைஞனின் உடலில் சட்டவிரோதமாக பாதிப்பை ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது என சீன அரசு ஊடகம் தெரிவிக்கிறது.

சிறுநீரகத்தை விற்ற பணத்தைக் கொண்டு இந்த இளைஞன் 'ஐஃபோன்' ஒன்றும் ஐபேட் ஒன்றும் வாங்கியிருந்தார்.

இணையவழி உரையாடல் சேவை ஒன்றின் வழியாக இந்த சட்டவிரோத சிறுநீரக விற்பனைக்கு இந்த பதினேழு வயது இளைஞன் சம்மதிக்கவைக்கப்பட்டிருந்தார் எனக் கூறப்படுகிறது.

ஒரு சிறுநீரகம் இல்லாத நிலையில் தனது மற்ற சிறுநீரகத்திலும் இந்த இளைஞனுக்கு கோளாறுகள் ஏற்பட்டுள்ளன என ஸின்ஹுவா செய்தி நிறுவனம் கூறுகிறது.

சீனாவில் மனித உறுப்புகளுக்கான கறுப்புச் சந்தை வர்த்தகம் பெருமளவில் நடக்கிறது.

அந்நாட்டில் மாற்று உடலுறுப்பு தேவைப்படுவோரில் மிகக் குறைவானவர்களாலேயே சட்டபூர்வமாக அவற்றைப் பெற முடிகிறது.

## பெயரைக் கேட்டாலே அஞ்சுகிறது அமெரிக்கா



லஷ்கர் இ தொய்பா தீவிரவாதி ஹபீஸ் சயீத், ஜமாத் உத்தவா என்ற புதிய இயக்கத்தை தொடங்கி, பாகிஸ்தானில் சுதந்திரமாக உலா வருகிறார். அவரது தலைக்கு விலையாக அமெரிக்கா 10 மில்லியன் டொலர் (ரூ.125 கோடி) பரிசு அறிவித்தது.

ஆனால், அதை பொருட்படுத்தாமல் சயீத் ஆவேசமாகப் பேசி வருகிறார்.

இந்த நிலையில், பாகிஸ்தானில் முசாராபாத்தில் நேற்று முன்தினம் ஒரு பொதுக் கூட்டத்தில் சயீத் கருத்து வெளியிடும் போது;

''அமெரிக்கா எனது பெயரை கேட்டாலே பயப்படுகிறது. அதனால்தான், எனக்கு ரூ.50 கோடி விலை அறிவிக்கிறது.

இப்போது, பாகிஸ்தானையும், இஸ்லாமையும் காப்பாற்ற அமெரிக்காவுக்கு எதிராகப் புனித போர் (ஜிகாத்) நடத்த வேண்டும். அதற்கான தேவை வந்து விட்டது. ஜிகாத் காரணமாக அமெரிக்காவின் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டது'' எனக் குறிப்பிட்டார்.



இந்தோனேசியாவில் மேற்கு கடற்கரை பகுதியில் உள்ள ஏக் மாகாணத்தில் ஏற்பட்ட நில அதிர்வின் பல கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. அதனை அண்டிய கடல் பகுதி 7.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு பதிவாகி உள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது.

## கண்மூடித்தனமாக வரவேற்கும் ஒபாமா

நாட்டின் புதிய தொழில் தரவுகளை வரவேற்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா சிறந்த முறையில் மேலும் பணியாற்ற வேண்டிய தேவை தற்போதும் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தொழில் வாய்ப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டதை விட கடந்த மாதம் வீழ்ச்சி கண்டுள்ளதாக அமெரிக்க தொழில் திணைக்கள தரவுகள் குறிப்பிடுகின்றன.

இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களே உருவாக்கப்பட்டுள்ளன.

எனினும் வேலைவாய்ப்பற்றோர் வீதம் 8.3 இல் இருந்து 8.2 ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களாக வேலைவாய்ப்பற்றோர் வீதம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்ற போதிலும், 2009 ஆம் ஆண்டு முதல் 8 வீதத்திற்கு அதிகமாக நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க நகரத்தை விலைக்கு வாங்கிய வியட்நாமியர்

அமெரிக்காவில் ஒருவர் மட்டுமே வாழ்ந்து வந்த குட்டி நகரம் ரூ.11.25 கோடிக்கு ஏலம் விடப்பட்டது. இதை வியட்நாமை சேர்ந்த கோடீஸ்வரர்கள் 2 பேர் விலைக்கு வாங்கி உள்ளனர். அமெரிக்காவின் கொலராடோ அருகில் லாராமி, செயெனி பகுதிக்கு இடையில் உள்ளது பபோர்ட். பத்து ஏக்கரில் அமைந்துள்ள இந்த குட்டி நகரத்தில் 3 படுக்கை அறை கொண்ட [illegible] வீடு, பெற்றோல் நிலையம், சில சிறிய வீடுகள் உள்ளன.

இங்கு வசித்தவர் டான் சம்மன்ஸ். இவர் ஒருவர் மட்டும்தான் இந்த நகரில் வசித்தார். அதனால் அமெரிக்காவிலேயே மிகமிக குறைந்த மக்கள் தொகை கொண்ட நகரம் என்று பெயர் பெற்றது. கடந்த 1980 ஆம் ஆண்டு இந்த நகரத்துக்கு மனைவி, மகனுடன் சம்மன்ஸ் குடியேறினார். 1990 இல் நகரத்தை விலைக்கே வாங்கி விட்டார். கடந்த 95ஆம் ஆண்டு இவரது மனைவி இறந்துவிட்டார். அதன்பின் 2007ஆம் ஆண்டு மகனும் வேறு இடத்துக்கு சென்று விட்டார். ஆனால், நகரை பிரிய மனமில்லாத சம்மன்ஸ் அங்கேயே வசித்தார். அதன்பின், நகருக்கு வருபவர்களுக்கு குடிபானம், உணவு, தங்கும் வசதிகள் செய்து கொடுத்து வருவாய் ஈட்டினார்.

இந்நிலையில், நகரை ஏலத்தில் விட சமீபத்தில் முடிவு செய்தார். இதற்கான ஏற்பாடுகளை செயெனி நகரை சேர்ந்த ரியல் எஸ்டேட் புரோக்கர் டான்ஜா ஆண்ட்ரூஸ் செய்தார். 2012,ம் ஆண்டு ஏப்ரல் 5ஆம் திகதியன்று நகரம் ஏலம் விடப்படும் என்று கடந்த ஆண்டு ஓகஸ்ட்டில் விளம்பரம் வெளியிடப்பட்டது.

அதன்படி பபோர்ட் நகரம் நேற்றுமுன்தினம் ஏலம் விடப்பட்டது. 12 பேர் பங்கேற்றனர். முதலில் ஒரு கோடி 25 ஆயிரம் ரூபா நிர்ணயிக்கப்பட்டது. அதன்பின் ஏலத் தொகை கிடுகிடுவென உயர்ந்தது. கடைசியில் ரூ.11.25 கோடிக்கு ஏலம் முடிந்தது. வியட்நாமை சேர்ந்த 2 கோடீஸ்வரர்கள் நகரை ஏலத்தில் எடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியிலிருந்து விலகுகின்றனர் இராணுவப் புரட்சியாளர்கள்

**தேர்தல் நடத்தப்படும்வரை நாடாளுமன்றத்திடம் அதிகாரத்தைக் கையளிக்க இராணுவ ஆட்சியாளர்கள் இணங்கியுள்ளனர்.**



மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில் புரட்சி மூலம் அரசாங்கத்தைக் கைப்பற்றிய இராணுவத்தினர் பதவியிலிருந்து விலகி மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மாலியின் வடபகுதியில், துவாரக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான யுத்தத்தை அரசாங்கம் சரியான முறையில் முன்னெடுக்கவில்லை எனக் கூறி, இரு வாரங்களுக்கு முன்னர் அந்நாட்டு இராணுவத்தினர் சிலர் புரட்சியில் ஈடுபட்டு அரசைக் கைப்பற்றினர்.

எனினும் துவாரக் கிளர்ச்சியார்கள் தொடர்ந்தும் பல தாக்குதல்களை மேற்கொண்டு பல நகரங்களைக் கைப்பற்றியதுடன் அஸாவத் என அழைக்கப்படும் பிராந்தியத்தில் சுயாட்சியையும் பிரகடனப்படுத்தினர்.

மாலியில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு மாலியின் அயல் நாடுகள் வலியிறுத்தியிருந்த நிலையில் 'மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம்' எனும் அமைப்புடனான உடன்படிக்கையில் புரட்சி இராணுவத்தலைவர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

இதன்படி புதிய தேர்தல் நடத்தப்படும்வரை நாடாளுமன்ற சபாநாயகரிடம் அதிகாரத்தைக் கையளிக்க இராணுவ ஆட்சியாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பதிலாக மாலியின் மீதான வர்த்தக, பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு 'மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம்' இணங்கியுள்ளது. அத்துடன் இராணுவ ஆட்சியாளர்களுக்கு மன்னிப்பு வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

# மலாவியின் அதிபர் மாரடைப்பால் மரணம்



மேற்கு ஆபிரிக்காவின் நாடான மலாவியின் அதிபர் முத்தாரிகா நேற்றுமுன்தினம் மாரடைப்பால் மரணம் அடைந்துள்ளார்.

குறித்த தின நள்ளிரவில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக அவர் அதிபர் மாளிகையில் இருந்து அருகில் உள்ள ராணுவ மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆனால், முத்தாரிகாவின் உயிர் ஏற்கனவே பிரிந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எனினும், நேற்று மாலை தான் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. தேவையற்ற உள்நாட்டு குழப்பங்களைத் தவிர்க்க அரசு தரப்பில் அதிபரின் மரணத்தை ரகசியமாக வைத்திருந்தனர். மலாவியின் அதிபராக 2 முறை இருந்தவர் பகிலி முலாசி. அரசியல் சட்டப்படி 3 ஆவது முறை பதவி வகிக்க முடியாது என்பதால், தனது வாரிசாக முத்தாரிகாவை அதிபர் தேர்தலில் கடந்த முறை பகிலி நிறுத்தினார்.

முத்தாரிகாவை எதிர்த்து ஜாய்ஸ் பாண்டா போட்டியிட்டார். எனினும், முத்தாரிகா வெற்றி பெற்று அதிபரானதும் ஜாய்ஸ் துணை அதிபர் ஆனார்.

இந்த நிலையில், முத்தாரிகாவின் திடீர் மறைவால் அதிபர் பொறுப்பை ஜாய்ஸ் பாண்டா ஏற்றுக் கொண்டார்.

# லண்டன் கலவரத்தில் காரியத்தில் கண்ணாய் இருந்தவள்

லண்டன், ஏப்.9

லண்டனில் கலவரம் நடந்த போது, இலத்திரனியல் பொருள்கள் கடைகளை சூறையாடியது தொடர்பான வழக்கில் கோடீஸ்வரரின் மகள் குற்றவாளி என்று நீதிமன்றம்அறிவித்துள்ளது.

லண்டனில் கடந்த ஆண்டு பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞன் ஒருவனுக்காக அந்த நகரத்து மக்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். அப்போது லண்டனில் உள்ள பல கடைகள் சூறையாடப்பட்டன. இதுதொடர்பாக 2,710 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 89 சதவீதம் பேர் ஆண்கள்.

இந்தக் கலவரத்தின் போது கொள்ளைக்காரர்களுக்கு கோடீஸ்வரரின் மகள் லாரா ஜான்சன் (20) என்பவர் உதவி செய்ததாக பொலிஸார் குற்றம் சாட்டினர். கலவரத்தின் போது இலத்திரனியல் கடைகளில் இருந்து ஏராளமானோர் பொருள்களைக் கொள்ளை அடித்துக் கொர்ண்டு தூக்க முடியாமல் தூக்கி வந்தனர். அந்த பொருள்களை தனது காரில் வைத்துக் கொள்ள லாரா உதவி செய்துள்ளார். அத்துடன் பொருள்களுடன் கொள்ளையர்களையும் காரில் அழைத்துச் சென்றுள்ளார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டி அதற்கான ஆதாரங்களையும் நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இதுதொடர்பான வழக்கில் லாரா குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்தது. ஆனால், இவர் மீதான கொள்ளை வழக்கை நீதிமன்றம் ரத்து செய்தது. கொள்ளைக்கு உதவிய குற்றத்துக்கு மே 3 ஆம் திகதி தண்டனை வெளியிடப்படவுள்ளது.

# 'சமரசத் தூதுவர்' கொலையுண்டார்

ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்த சமரச தூதுவராக செயல்பட்டு வந்தவர் தற்கொலைத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.

சமய கடமைகள் முடித்து விட்டு வீட்டுக்கு காரில் சென்றார் மௌலவி. அவருடைய மகன் மற்றும் பாதுகாவலரும் உடன் சென்றனர். அப்போது தற்கொலை படையை சேர்ந்த தீவிரவாதி ஒருவன் திடீரென கார் மீது தாக்குதல் நடத்தினான். அதில் கார் நொறுங்கி சம்பவ இடத்திலே 3 பேரும் பரிதாபமாக மரணமானார்.

''ஆப்கானில் அமைதியை ஏற்படுத்த முயற்சிக்கும் பெரியவர்கள் மீது தாக்குதல் நடத்தி, நாட்டின் வளர்ச்சியை தடுக்க நினைக்கின்றனர்'' என்று இந்தத் தாக்குதல் குறித்து அதிபர் ஹமித் கர்சாய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# அடுக்கு மாடி மீது மோதிச் சிதறியது அமெ. ஜெட்



கடந்த 2001 செப்ரெம்பர் 11 ஆம் திகதி அல் குவைதா தீவிரவாதிகள், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்த உலக புகழ்பெற்ற இரட்டை கோபுரங்கள் மீது விமானங்களை மோதி தகர்த்தனர். அதன்பின் அமெரிக்காவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இந்நிலையில் விர்ஜினியா மாநிலத்தில் கடற்கரையோரம் இருந்த அடுக்குமாடி கட்டடத்தின் மீது நேற்று ஜெட் விமானம் ஒன்று திடீரென மோதி நொருங்கியது.

அங்கிருந்தவர்கள் தீவிரவாதிகள் தாக்குதலாக இருக்குமோ என்ற பீதியில் அலறி ஓடினர். கட்டடத்தில் இருந்து கரும்புகை வெளியேறியது. உடனடியாக சம்பவ இடத்துக்கு பாதுகாப்புப் படை வீரர்கள் விரைந்து வந்து மீட்பு நடவடிக்கையில் இறங்கினர். விமானம் நொறுங்கிய இடத்தில் யாருக்கும் பாதிப்பில்லை. தீவிர விசாரணையில் அமெரிக்க கப்பற்படையை சேர்ந்த ஜெட் விமானம் என்பதும், அதில் வந்த 2 விமானிகள் பரசூட்டில் தப்பியதும் தெரிய வந்தது. விர்ஜினியாவில் அமெரிக்காவின் கப்பற்படை முகாம் உள்ளது. இங்கு பயிற்சியில் ஈடுபட்ட போது ஜெட் விமானம் விபத்தில் சிக்கிய தாகக் கூறப்படுகிறது.


CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
புத்தாண்டு சிறப்புக் கட்டணச்சலுகையுடன்
புதிய டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பம்
Advanced Diploma in Hardware & Networking
Tally financial Accounting Programme
Web Design & Development
Dip. in Computer Application
Advanced Java Programming
Adv. Diploma in Digital Pre-press
Diploma in Digital Video Production
18 வருட கல்விச்சேவையில்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற பயிற்சி, பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ்கள்
யாழ். நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677
நெல்லியடியில்
கொடிகாமம் வீதி,
T.P : 021-2262399
சாவகச்சேரியில்
230, கண்டி வீதி,
T.P : 021-2270267



பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் கடந்த பத்து வருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய திரு. அம்பலவாணர் இரங்கநாதன் அவர்கள் அதிபராக (2 - II) பதவி உயர்வு பெற்று யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்குச் சென்றதையிட்டு உளமாரப் பாராட்டுவதோடு, அவர் மேலும் பல உயர்வுகள் பெற்று வளமோடு வாழ வாழ்த்துகின்றோம்.
யா/அளவெட்டி வடக்கு,
அ.மி.த.க.பாடசாலை, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
(இ/733) (2-7-6)



தனா பியூட்டி பெஷன்
புது வருட அன்பளிப்பாக தனது சேவைகள் அனைத்தும் 50% விலைக்கழிவு, அனுமதிக் கட்டணம் 1600/= செலுத்தி 6 மாத வகுப்புக்கள். சான்றிதழ் உடன் இலவசம். கொழும்பு, யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை.
29.04.2012 வரை பதிவு தொடர்பு:-0775098103/0777316453



பிரத்தியேக வகுப்புகள்
தமிழ், ஆங்கில மொழிமூலம் கணிதம் (8 -11 வரை) இரசாயனவியல் A/L மாணவர்களுக்கு வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
M.A.N.Antony. T.P. 021 4901637



மணமகள் தேவை
லண்டனில் குடியுரிமை பெற்ற ஆயிலிய நட்சத்திரம், செவ்வாய் தோஷமற்ற கிரக பாவம் 38 3/4 கொண்ட, விவாகரத்துப் பெற்றவருக்கு உள்நாடு/ வெளிநாட்டில் மணமகளைத் தேடுகின்றோம்.
நேரடியாக, கடிதமூலம், தொலைபேசி 021 222 8708 மூலம் தொடர்பு கொள்க.
[illegible]
56, அம்மன் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.



50 GOLDEN WEDDING JUBILEE



Mr.&Mrs. A.S.AUGUSTINE
இன்று (09.04.2012) தமது யூபிலியைக் கொண்டாடும் தம்பதிகள் பணிபல புரிந்து பல்லாண்டு வாழ வாழ்த்து கின்றோம்.
கல்வியில் வளம்மிகு பெற்ற நன்றிசால் மாணவ, மாணவிகள்.
(65572) (2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலப்படுத்தப்படும் இந்தியக்கடற்படை

## அதி நவீன ஹெலிகளை வாங்க முடிவு



டில்லி, ஏப்.9

இந்திய அரசு கடற்படையை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா தனது கடற்படை பலத்தை அதிகரிப்பதில் தற்போது ஆர்வம் காட்டி வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் முதற்கட்டமாக இந்தியக் கடற்படை அதி நவீன ரக தாக்குதல் ஹெலிகொப்டர்களை வாங்குவதற்கு அமெரிக்க நிறுவனங்களுடன் தொடர்பில் இருப்பது குறித்து அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தியக் கடற்படைக்கு அதி நவீன ஹெலிகொப்டர்கள்தேவைப்படுவதால்புதிய கேள்விகோரல் ஒன்றை கோருவதற்கு கடற்படை முடிவு செய்துள்ளது.

தற்போது இந்திய கடற்படையில் சீகிங் ரக ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேசமயம் ஏற்கனவே, 16 ஹெலிகொப்டர்கள் வாங்குவதற்கு கேள்வி கோரல் விடுக்கப் பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளின் தயாரிப்பான என்.எச் 90 மற்றும் அமெரிக்காவின் சிகோர்ஷி எஸ் 70 பிராவோ ஹெலிகொப்டர் நிறுவனங்கள் நவீன ரக ஹெலிகளை விற்பனை செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், 20 ஆயிரம் கோடி மதிப்பில் 75 இற்கும் அதிகமான அதி நவீன தொழில் நுட்பம் வாய்ந்த ஹெலிகொப் டர்களை வாங்க கடற்படை திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக சர்வதேச ஹெலிகொப்டர் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து இந்தியக் கடற்படை விரிவான அறிக்கைகளைக் கேட்டுள்ளது. இந்த ஹெலிகொப்டர்கள், நீர் மூழ்கிக் கப்பல்களையும் தாக்கும் வல்லமை படைத்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அமெரிக்காவின் போர்க்கப்பல் மற்றும் விமான தயாரிப்பு நிறுவனமான லாக்கீட் மார்ட்டின் நிறுவனத்தின் துணைத் தலைவர் ஜோர்ஜ் பார்டன் தெரிவித்ததாவது:

75இற்கும் அதிகமான ஹெலிகொப்டர்களை வாங்க இந்திய கடற்படை திட்டமிட்டிருப்பது உலகின் மிகப் பெரிய கேள்வி கோரல் அமையும்.

அமெரிக்க கடற்படையில் 350 இற்கும் மேற்பட்ட எம்.எச் 60 ரக அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஹெலிகொப்டர்கள் தற்சமயம் உள்ளன - என்றார். (வ)

# 7 வருடங்களின் பின் இந்தியா வந்துள்ள பாக். ஜனாதிபதி



பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார். 7 வருடங்களில் பாகிஸ்தான் ஜனாதிபதி ஒருவர் வருகை தருவது இதுவே முதல் தடவையாகும்.

டில்லிக்குப் பயணம் செய்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி இந்திய நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் பவன் குமார் பன்சாலாவைச் சந்தித்துவிட்டு இராஜஸ்தான் செல்வதற்கு முன்னர் இந்தியப் பிரதமரை சந்தித்து அவருடன் மதிய உணவு விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதியின் இந்த பயணத்தின் மூலம் இந்திய - பாகிஸ்தானுக்கு இடையேயான பொருளாதார உறவுகள் வலுப் பெறும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியுடன் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மலிக், ஜனாதிபதியின் மகன் பூட்டோ சர்தாரி உள்ளிட்ட 25 பேர் அடங்கிய குழு இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பின்லேடனை கடலில் வீச பயன்படுத்திய கப்பலில் விருந்து

## விருந்தாளிகளில் ஜெயலலிதாவும்



ஒசாமா பின்லேடனை கடலில் புதைக்கப் பயன்படுத்தப்பட்ட அமெரிக்க அணு சக்தி கப்பல் சென்னை வந்துள்ளது. இதில் நடைபெறும் சிறப்பு விருந்தில் பங்கேற்க சம்மதம் தெரிவித்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா.

ஆளுநர் கே.ரோசய்யா உள்பட மேலும் 30 முக்கியஸ்தர்கள் இந்த விருந்தில் பங்கேற்க உள்ளனர்.

யு.எஸ்.எஸ். கார்ல் விஷன் என்ற பெயரில் சென்னை துறைமுகத்துக்கு வந்துள்ளது அமெரிக்காவின் அணு சக்திக் கப்பல். இந்தக் கப்பலைப் பயன் படுத்திதான் அல்குவைதா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடன் உடலை அமெரிக்க வீரர்கள் கடலில் தூக்கி எறிந்தனர் என்று அமெரிக்கா கூறுகிறது. அந்த வகையில் இந்தக் கப்பல் ஏக பிரபலமானது.

இந்த ஆண்டுக்கான இந்திய - அமெரிக்க கடற் பயிற்சிக்காக இப்போது சென்னை வந்துள்ள இந்த அணுசக்தி கப்பல் இன்னும் சில தினங்கள் இங்கேயே நங்கூரமிடுகிறது. நாளை இந்தக் கப்பலில் பெரும் விருந்து நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. (வ)

# குமரியில் கடல் சீற்றம்; தடுப்புச் சுவர் சேதம்



நாகர்கோவில், ஏப்.9

கன்னியாகுமரி, முக்கடல் சங்கமத்தில் ஏற்பட்ட கடல் சீற்றத்தில், கடற்கரையில் அமைக்கப் பட்டிருந்த, 'பொலிஸ் அவுட் போஸ்ட்'டை (தடுப்புச் சுவர்) அலை இழுத்துச் சென்றது. கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில், சுற்றுலாப் பயணிகள் கடலில் குளிப்பது அதிகம். இங்கு பாறைகள் உள்ளன. இந்த பாறை மீது, பயணிகள் ஏறி நிற்கும்போது பெரிய அலைகள், இவர்களை கடலுக்குள் இழுத்துச் செல்கின்றன.

இதனால், அதிகமான மரணங்கள் ஏற்பட் டுள்ளன. இதைத் தடுக்கும் வகையிலும், கடற்கரையில் பாதுகாப்புப் பணிகளை கண்காணிக்கவும், இங்கு ஒரு 'தடுப்புச் சுவர்' அமைக்கப்பட்டது. இந்த கட்டடத்தின் மேற்கூரை, சீற்றால் அமைக்கப் பட்டிருந்தது. கட்டுமானமும், நேர்த்தியாக அமையவில்லை. நேற்று முன்தினம் முக்கடல் சங்கமத்தில், பெரிய அலைகள் எழுந்தன. வழக்கத்தை விட அதிக தண்ணீர், கரையை நோக்கி வந்ததால் இந்த 'அவுட் போஸ்ட்'டை கடல் அலை அடித்துச் சென்றுள்ளது.

# பன்றிக் காய்ச்சல் கிலி புனேயில் 11 பேர் சாவு

## கர்நாடாவில் கூடுதல் பாதிப்பு

மகாராஷ்டிர மாநிலம் புனேயில் பன்றிக் காய்ச்சல் பாதித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்வடைந்துள்ளது.

தற்போது பல்வேறு வைத்தியசாலைகளில் பன்றிக் காய்ச்சல் நோய் பாதித்து 260இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

புனேயில் இருந்து அண்டை மாநிலங்களுக்கும் பன்றிக் காய்ச்சல் பரவியுள்ளது. தற்போது தமிழ்நாடு, ஆந்திராவிலும் பன்றிக் காய்ச்சல் பரவி வருகிறது. கர்நாடகத்தில் சுமார் 475 நோயாளிகளுக்கு பன்றிக் காய்ச்சலுக்கான அறிகுறி கண்டறியப்பட்டுள்ளது.

பின்னர் அவர்கள் தீவிர பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்டனர். பரி சோதனையின் முடிவில் 71 பேருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்பு பாதிக்கப்பட்டவர்களுக்கு வைத்தியசாலையில் தனி அறைகளில் வைத்து மருத்துவர்கள் தீவிரமாக சிகிச்சை அளித்து வந்தனர்.

இந்த நிலையில் பெங்களூர் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த 43, 22 வயது முறையே இரண்டு பெண்களும், ஒரு ஆண் நோயாளியும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர்.

இதனால் பெங்களூரில் பன்றிக் காய்ச்சல் அச்சம் அதிகரித்துள்ளது. பன்றிக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க உரிய நடவடிக்கையை கர்நாடக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சென்னையில் அமெ. கப்பல்கள் 'மலபார்' கூட்டுப் பயிற்சி

## இன்று முதல் 16 ஆம் திகதி வரை



சென்னை, ஏப்.9

'மலபார் 2012 ' பெயரிடப்பட்ட கூட்டுப்பயிற்சியில் ஈடுபட சென்னை துறைமுகம் வந்தடைந்த அமெரிக்க போர் கப்பல்களுக்கும் அமெரிக்கக் கடற்படையினருக்கும் பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தியா, அமெரிக்கா கடற் படைகள் 1992 ஆம் ஆண்டு முதல் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், இரு நாட்டு கடற்படை வீரர்களும் 15ஆவது கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

இந்த கூட்டுப்பயிற்சி இரு கட்டங்களாக இன்று தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை, சென்னை அருகே வங்கக்கடல் மற்றும் அந்தமான், நிக்கோபார் கடலில் நடைபெறவுள்ளது. இந்த கூட்டுப்பயிற்சிக்கு 'மலபார், 2012' என்று பெயரிடப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் ஊடுருவலை தடுத்தல், கடல் கொள்ளையர்கள் மீது தாக்குதல், ஏவுகணை தாக்குதல், நீர்மூழ்கி கப்பலை எதிர்கொள்ளுதல், என்கவுன்டர் தாக்குதல், போர் விமானம் மற்றும் ஹெலிகாப்டர் தாக்குதல் போன்ற பயிற்சியில் கடற்படையினர் ஈடுபட உள்ளனர். இதேபோல், கடலுக்கு வெளியேயும் பயிற்சிகள் நடைபெற உள்ளன.

இதற்காக, அமெரிக்காவில் இருந்து யு.எஸ்.எஸ். கார்ல் விஷன் (சிவிஎன்,70), எஸ்எஸ் ஹார்லே, எஸ்எஸ் பங்கர் ஹில் ஆகிய போர் கப்பல்களும் மற்றும் நீர்மூழ்கி கப்பலும் நேற்றுமுன்தினம் காலை சென்னை துறைமுகத்தை வந்தடைந்தன.

எஸ்.எஸ்.கார்ல் விஷன் (சிவிஎன்,70) கப்பல் துறைமுகத்தில் நிறுத்த இடவசதி இல்லாததால், துறைமுக [illegible] டுள்ளது. (வ)

# பஸ் – லொறி விபத்து: 9 பேர் சாவு

அகமதாபாத், ஏப்.9

குஜராத் மாநிலத்தில் பஸ்-லொறி மோதி விபத்துக் குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

மத்திய பிரதேச மாநிலம் டாகோத் என்ற இடத்திலிருந்து குஜராத் மாநிலம் அகமதாபாத்துக்கு தொழிலாளர்கள் ஒரு பஸ்ஸில் நேற்று தொழிலுக்குச் சென்றனர். அந்த பஸ், வீதியில் நின்று கொண்டிருந்த லொறி மீது மோதி விபத்துக்குள்ளானது. இதன் போது, பஸ்ஸில் இருந்த 8 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தார். மேலும் 10 பேர் காயமடைந்தனர்.

விபத்துச் சம்பவம் [illegible] பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் திடீர் தீ

## உரிமை கோருகிறது உல்பா

அசாம் அருகே, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அசாம் கோலாகாட் அருகே உள்ள நுமலிகர் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில், நேற்றுமுன்தினம் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு அதிகமான தீயணைப்பு வாகனங்கள் சென்று, கொழுந்து விட்டு எரிந்த தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டன. இதன் காரணமாக, 15 - 20 கிலோ மீற்றர் வரை, தீயின் ஜுவாலை தெரிந்ததாக அந்தப் பகுதியினர் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்துக்கு தாங்கள் தான் காரணம் என்று அசாம் உல்பா பயங்கரவாதிகள் தெரிவித்தனர். தங்களது எழுச்சி தினத்தை கொண்டாடும் வகையில், வெடிகுண்டு வீசி தாக்கியதாக, செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பிய ஈ-மெயிலில் தெரிவித்துள்ளனர்.

உயிர்ச்சேதமில்லை. இருப்பினும், இந்த சம்பவம் திட்டமிட்ட நாசவேலை, தொழில் நுட்ப ரீதியில் நடந்த கோளாறு காரணமாக, தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம். முழு விசாரணைக்குப் பின்னரே, சரியான -உறுதியான தகவலைக் கூறமுடியும் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நிறுவனத்தின் மூத்த அலுவலர் ஒருவர் தெரிவிக்கையில்,

விபத்தில் உயிர்ச் சேதமில்லை, முழுக்க முழுக்க தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதால், மிகக்குறைந்த அளவிலான பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர் - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்மா...



இல்லத்தில் அம்மாதான் ராணி
ஆயினும்
எல்லோருக்கும் அவள் சேவகி
வீட்டுக் கோட்டைக்குள்
அத்தனை ஆண்களும் ராஜா
அம்மாதான் வேலைக்காரி
அனைவருக்கும் பணிவிடை செய்து
படுத்துறங்க மணி
பத்தாகி விடும்

நித்தமும்
பின்தூங்குவாள் அம்மா
சேவல் கூவ
முன்னெழுவாள் அம்மா
அம்மாவைத் தேடாத
ஆத்மாவே இல்லை வீட்டில்
அம்மா இல்லா வீட்டால்
கடிகாரத்தின் முள்கள்
நின்று விடும்

எந்தப் பிள்ளைக்கும் அவள்
பந்தத் தாய்
பால் கொடுப்பாள்
பாப்பாவுக்கு
முதுகு தேய்ப்பாள்
அப்பாவுக்கு
சமையல் அறைதான்
அவளது ஆலயம்
இனிதாய் உணவு சமைத்துப்
பரிமாறி

எனக்கு மட்டும் வாயில்
ஊட்டுவாள்
வேலையில் மூழ்கி
வேர்வையில் குளிப்பாள்
எப்போதாவது அடி
வாங்குவான்
அப்பாவிடம்
தப்பாது மிதி வாங்குவாள்
மூத்த தமயனிடம்
காசு கேட்டுக்
கையை முறிப்பான்
கடைசித் தம்பி
கடன்காரன் வாசலில்
திட்டுவான்
கலங்கும்
கண்ணீரைத் துடைப்பது
கனலும் காற்றும்


ஒய்வைக் கொடுப்பது தாய்க்கு
நோயும் வலியும்
ஆயினும் சோறு பொங்கும்
அடுப்பினில்
ஆயுளை நீடிக்க வைப்பது
தாயுள்ளம்
வாழும் போது எவராலும்
வணங்கப்படாது,
செத்த பிறகு தெய்வ மாகிறாள்

இலக்கியா.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# பெண் பற்றிய சமுதாய நோக்கு

சுபா,
மானிப்பாய்



வீடுகளிலும், வீதிகளிலும், வேலைத்தளங்களிலும், கிராமங்களிலும், நகரங்களிலும் சிறுவர்கள் துஷ்பிரயோகம், பெண்ணடிமைத்தனம், பால் நிலைப் பாகுபாடு என இவ்வாறு பல்வேறு பிரச்சினைகள் நாளாந்தம் கூடிக் கொண்டு வருவதை நாம் பார்த்தும், கேட்டும், அனுபவித்தும் வருகிறோம். இது அனைவருக்கும் தெரிந்த விடயமே.

இவற்றைவிட எம் சமூகத்தில் ஒரு பெண் திருமணத்தின் முன் வேறு யாரையோ காதலித்திருந்தால் அந்தப் பழைய காதல் குற்றமாகக் கருதப்பட்டு நாளாந்தம் அந்தப் பெண் கணவனால் துன்புறுத்தப்பட்டு வருவதை ஒரு சில குடும்பங்களில் காணக் கூடியதாக உள்ளது. அத்தோடு எமது சமூகத்தவரும் இத் தகைய ஒரு நிலையை இழிவாகவே நோக்கும் ஒரு போக்கும் காணப்படுகின்றது.

தவிர பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை அடக்க ஒடுக்கமாய் வளர்த்து எந்தவித கஷ்டமும் இல்லாத ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கக் கூடிய நிலையை உருவாக்குகின்றோம் என நினைத்து அவர்களை ஒரு வரையறைக்குள்ளே வைத்திருப்பர்.

இந்த நிலையில் பெண்கள் தங்கள் உண்மையான படைப்புக்களை வெளிக்கொணரும் போது குடும்பத்தாரை மீற வேண்டும். பின்பு சமூகத்தவரை மீற வேண்டும். இவ்வாறான தடைகளைத் தாண்டுவதற்கு பெரும்பாலான பெண்களால் முடியாத காரியமாகி விடுகிறது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. சமூகத்திலிருந்து விலகி வாழ்தல் முடியாத காரியம். இவ்வாறான போக்குகளினாலும் பெண்களினது ஆற்றல்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்த முடியாத மோசமான நிலை ஏற்பட்டு வருவதைக் காணக் கூடியதாய் இருக்கின்றது.

அது மாத்திரமின்றி பெண் ஏதாவது ஒரு சோகப் பாட்டைப் பாடினாலோ, அல்லது வானொலியினூடாகக் கேட்டு ரசித்தாலோ சமுதாயம் உடனே வாழ்க்கையில் என்ன காதல் தோல்வியோ? அல்லது எவனாவது ஏமாற்றி விட்டானோ என்ற ஒரு ஏளனக் கேள்விகளை கேட்பதை நாம் கண்டும், உணர்ந்துமுள்ளோம்.

இவ்வாறாகக் கேட்பவர்கள் மத்தியில் உண்மையிலே பெண்கள் தங்களது உணர்வுகளையோ அல்லது, விருப்பங்களையோ சமூகத்தின் மத்தியில் வெளிப்படுத்தப் பயப்படுகின்றார்கள். சமூகத்தின் மத்தியில் நல்ல திறமைகளை வெளிப்படுத்துகின்ற பெண்கள் ஒடுங்கிய நிலையில் இன்றும் எமது சமூகத்தில் உள்ளனர். இப்படியான காரணங்களால் பெண்களது ஆக்கங்கள் தணிக்கைகளுடன்தான் வெளி வருகின்றன. ஆகவே இவ்வாறான நிலைமைகள், போக்குகள், இன்றைய சமூகத்திலிருந்து விடுபட வேண்டும். அப்போதுதான் எமது பெண்களின் உணர்வுகளின் வெளிப்பாடுகள் முழுமையாக வெளியில்வரும்.

# பெண் நசுக்கப்படுவதற்கான சுவடுகள்...

இந்தப் பரந்த உலகத்தில் ஒளி எவ்வளவு இன்றியமையாததோ அப்படித்தான் இந்த மனித சமுதாயத்துக்குப் பெண்மையும் முக்கியமானது. பெண்கள்தான் சமூகத்தின் ஒளி. இதை முழுமனதுடன் ஒத்துக்கொள்ளும் எத்தனை பேருண்டு நம்மில்? ஒத்துக்கொள்ளாவிட்டாலும் அது தான் மறுக்கமுடியாத உண்மை.

இன்றுவரைக்கும் இந்தச் சமுதாயம் கண்ணுக்குப் புலப்படாத ஒரு கற்பனை உலகத்தில் பெண்ணை வெகு உயரத்தில் தூக்கி வைத்துக்கொண்டாடி வந்திருக்கிறது. ஆனால் நடைமுறை வாழ்க்கையில், யதார்த்தத்தில் பெண்களைச் சமமாய் பாவிக்க முன்வரவில்லை. விண்ணைப் பெண் என்கிறார்கள். மண்ணையும் பெண் என்கிறார்கள். நதியையும், மதியையும், கடவுளையும் பெண் என்கிறார்கள். ஆனால் தன்னுடனே குடித்தனம் நடத்தும் பெண்ணை மட்டும் சக மனுஷியாகப் பார்க்கத் தெரிவதில்லை.

கி.மு வில் தொடங்கி கி.பி இருபத்தியோராம் நூற்றாண்டு வரைக்கும் ஓடிவந்துள்ள இந்த மனித சமுதாயத்தின் ஆரம்பத்தை ஆராய்ந்தோமேயானால், மனிதன் முதலாகக் கற்ற தொழில் வேட்டையாடல். அந்த வேட்டையாடித்திரிந்த காலத்திலேகூட பெண்ணின் கைதான் ஓங்கி இருந்திருக்கிறது. அன்றெல்லாம் பெண் இரண்டாவது பாலினமாகவோ, இரண்டாம் பட்சமாக இருந்திருக்கவில்லை. அதிதியும் அவளது வீரமுமே அதற்கு சான்று. அப்பொழுது முதலே பெண்ணின் பெருமையைச் சகிக்காத ஆண்கள் அடுத்த புராண இதிகாச கா[illegible] செய்ய [illegible] பூட்டி வைக்க ஆரம்பித்திருக்க வேண்டும்.



நித்தியா.

அன்று தொடங்கி இன்று வரைக்கும் சுயநலம் மிகுந்த தன் ஆதிக்கக் கொடியை பெண்ணினத்தின் மீது நிலைநாட்டிக்கொண்டிருக்கும் இந்தச் சமுதாயத்தின் திறமை மீது கொஞ்சம் ஆச்சரியம் ஏற்படுவது உண்மை தான்.

அன்று முதலே ஆண் எழுத்து உரிமையை தான் எடுத்துக்கொண்டான். அரசியல் உரிமையும் ஆண் வர்க்கத்துக்கு மட்டும் என்றான். அவனே சட்டங்கள் இயற்றினான். தன் சுயநலத்துக்கெனவே அவற்றில் பெண்களை அடக்கி வைத்தான். பிள்ளை பெற்றெடுப்பதும் அடுப்பூதுவதும் மட்டுமே பெண்களின் பணியாக நேற்று வரை இருந்திருக்கிறது. இன்றும் கூட அனைவரும் அந்த நிலையிலிருந்து மீண்டபாடில்லை.

இராவணனின் தவறால், இராமனின் சந்தேகத்தால் தீக்குளிக்க கட்டாயப்படுத்தப்பட்ட சீதைமுதல், பிரம்மனின் தவறால், இந்திரனின் மோகத்தால், கௌதமனின் சாபத்தால் கல்லாய் சபிக்கப்பட்ட அகலிகை முதல், ஆண்களின் இச்சைக்காய் பெண் வம்சங்களே இரையாக்கப்பட்டது வரை, கணவனின் சடலத்துடன் உயிருடன் கொளுத்தப்பட்ட உடன் கட்டை முறையின் கடைசிப்பெண் வரைக்கும் பெண்ணினம் நசுக்கப்பட்டதற்கான சுவடுகள் தான்.

இன்றும் கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒன்றான கற்பிலக்கணத்தை அதிகம் காப்பாற்றி வருபவர்கள் பெண்கள் என்றால் யாரும் மறுப்பதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுய மதிப்பீடல்

⑥

மூன்று பேர் ஒரு கோயில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். மூன்றுபேரும் பெரிய பாறாங்கற்களைத் தான் உடைத்துக் கொண்டிருந்தார்கள்.

வழிப்போக்கர் ஒருவர் முதலாமவரிடம் கேட்டார், 'நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?' என்று.

அதற்கு அவர் பதில் சொன்னார், 'நான் கற்களை உடைத்துக் கொண்டிருக்கிறேன்.'

வழிப்போக்கர் இரண்டாம் நபரிடம் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவர் சொன்ன பதில்; 'நான் என் குடும்பத்துக்காக உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

வழிப்போக்கர் மூன்றாம் நபரிடமும் அதே கேள்வியைக் கேட்டார். அதற்கு அவர் பதில் சொன்னார்; 'இறைவனுக்கு ஆலயம் கட்டும் புனிதப் பணியில் ஈடுபட்டிருக்கிறேன்'

மூன்று பேரும் ஒரே வேலையைத்தான் செய்தார்கள். ஆனால் ஒவ்வொருவரும் அந்த வேலையின் மீது வைத்திருந்த மனோநிலை அந்த வேலையை எளிமையாகவும் கடினமானதாகவும் மாற்றிவிட்டது.

நிச்சயமாக அந்த மூன்று பேரில் மூன்றாவது மனிதர் அந்த வேலையை எளிதாகவும் மனநிறைவோடும் தன்னம்பிக்கையோடும் புத்துணர்ச்சியோடும் செய்து இருப்பார் என்று சொல்லத் தேவையில்லை.

உங்கள் துறையில் உங்களை எப்போதும் புதுப்பித்துக் (update) கொண்டே வாருங்கள். புதிய சூழலை எதிர்கொள்ளத் தயாராகுங்கள். விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் சூழ்நிலையில் காலத்துக்குத் தகுந்த மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்.

### சுயகட்டுப்பாடு

தன்னம்பிக்கை என்பது எவரையும் மதிக்காமல், தான்தோன்றித் தனமாகத் திரிவது என்று பலரும் தவறான அபிப்பிராயம் கொண்டுவிடுகிறார்கள். அவர்கள் முக்கியமாக அறிந்து கொள்ள வேண்டியது சுயகட்டுப்பாடு.

சுயகட்டுப்பாடு தன்னம்பிக்கைக்கு எதிரானது அல்ல! **அது தன்னம்பிக்கையோடு இணைந்து பயணிப்பது; தன்னம்பிக்கையை அடையாளம் காட்டுவது; தன்னம்பிக்கையை வளர்ப்பது!**

### ஒழுக்கம் - நேர்மை

சுய ஒழுக்கம் கொண்டவர்களுக்கு தன்னம்பிக்கை தானாகவே வந்துவிடுகிறது.

மது அருந்திவிட்டு வருகிறவன் தன் உறவினரை எதிரில் பார்த்தால், ஓடி ஒளிந்து கொள்கிறான்.

லஞ்ச வழக்கில் மாட்டிக் கொண்டு பொலிஸாரால் அழைத்துச் செல்லப்படுகிறவர்கள் தங்கள் முகத்தை மறைத்துக் கொண்டு போவதை நாம் அடிக்கடி தொலைக்காட்சியில் பார்க்கிறோம்.

இதெல்லாம் எதைக் காட்டுகிறது?

ஒழுக்கம் தவறும்போதெல்லாம் நம் தன்னம்பிக்கை சிதைகிறது. பிறருக்கு முன்னால் நிமிர்ந்து நடக்க இயலாமல் போகிறது.

தன்னம்பிக்கை நம் மனதில் நாம் விதைக்கும் எண்ணங்களால் வளரும் பயிர்! அதைவிட்டுவிட்டு மது அருந்திவிட்டு மேடையில் பேசினால் தைரியமாகப் பேச முடியும் என்று சொல்வதோ, மது அருந்திவிட்டுச் சென்றால் வீரம் பொங்கி வழியும் என்று சொல்வதோ தன்மீது நம்பிக்கை இல்லாதவர்கள் கூறும் வறட்டு வாதமன்றி வேறொன்றுமில்லை.

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

'நேர்மையாக நடந்து கொள்கிறவர்களுக்கு தன்னம்பிக்கையும் கம்பீரமும் தன்னால் வந்து விடுகிறது;

சிங்கத்துக்கும் நரிக்கும் உள்ள வேறுபாட்டைப் பார்த்தால் இது புரியும்!'

சிங்கம் தான் வேட்டையாடிய உணவைத் தான் உண்ணும். ஆனால் நரியோ மற்ற விலங்குகள் வேட்டையாடிய உணவைத் திருடித் தின்னும் வழக்கம் உள்ளது. அதனால் நரி எப்போதும் தலையைத் தாழ்த்தி அவநம்பிக்கையோடு செல்கிறது. ஆனால் சிங்கம் தன்னம்பிக்கையோடு நடைபோடுகிறது.

***எப்போதும் உண்மையைப் பேசுபவன் தான் என்ன பேசினோம் என்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை!***

இது ஓர் அற்புதமான பொன்மொழி!

நீங்கள் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இயலவில்லை. அதற்கான உண்மைக் காரணத்தைச் சொல்லுங்கள்!

விற்பனைப் பிரதிநிதிகள் தங்கள் நிறுவனத் தயாரிப்பை விற்பதாக பொய்தானே சொல்கிறார்கள் என்று பலரும் கூறுவார்கள். ஆனால், அந்தமாதிரி சொல்கிற பொய் எப்போதும் பயனைத் தராது! என்றேனும் ஒரு வாடிக்கையாளர் அந்த நிறுவனத் தயாரிப்பைப் பற்றி நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துவிட்டால், அந்த நிறுவனத்தின் பெயர் சந்தி சிரிக்கவே செய்யும். இனி கூடுமானவரை கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள். உண்மையைப் பேச முயற்சியுங்கள்.

வாக்குக் கொடுக்கிறோம் என்ற பெயரில் உங்களால் முடியாத ஒன்றைச் செய்து தருவதாக வாக்களித்துவிட்டு தடுமாறாதீர்கள். இன்று தன்னம்பிக்கை பயிற்சியாளர்கள் முக்கியமாக அறிவுறுத்துவது, 'உங்களால் முடியாது என்ற நிலையை நீங்கள் உணர்ந்திருக்கும்போது, முடியும் என்று சொல்லாதீர்கள்''.

உங்கள் உரிமையை அறிந்திருக்கும் வேளையில், நீங்கள் உங்களால் முடியாத ஒன்றை உங்கள் தலையில் ஏற்றிக் கொண்டு அவதிப்படமாட்டீர்கள்.

(தொடரும்)

-ஷிவேந்த்ரா

# சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் விகடகவியின் கவிதைகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

தமிழ்த்தாய் ஐந்து வகையான அணிகளை அணிந்து கொண்டு மட்டற்ற மகிழ்ச்சி தருவதுதான் அவருக்குப் புகழ் தருகின்றது. அதேபோன்று நம்பிக்கை, நகைச்சுவை, கிண்டலூடாக சமூகத்தை சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் ஆற்றல் படைத்த ஆக்கங்களாக வெளிவந்த இவரது கவிதைகள் இவருக்குப் பெருமை சேர்க்கின்றன என்று பேராசிரியர் தி.வேல்நம்பி தெரிவித்தார்.

விகடகவி கவிதை நூல் வெளியீட்டு விழா கலட்டி சரஸ்வதி மண்டபத்தில் தென்மராட்சி பிராந்திய கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமையில் கடந்த முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வேல்நம்பி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

பாரம்பரிய மரபுக் கவிதை தவிர்ந்த புதுக்கவிதைகளை நல்ல இனிய சந்தத்தில் எழுத முடியும் என்பதை நிலாவாணன் போன்ற கவிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். கடவுளை தமிழ்த்தாயை வாழ்த்திய பின் தாயைக் குறிப்பிடுவார்கள். ஆனால் கவிஞர் திருநாவுக்கரசு ஐயா தந்தையை முதலில் குறிப்பிட்டு பின்னர் தாயைக் குறிப்பிடுகின்றார். நல்லபடிப்பு ஒழுக்கத்துடனான வாழ்வு என்ற செய்திகளை அதனூடாகத் தந்துள்ளார். அதேபோன்று இன்று நாட்டில் காணக்கூடிய அதிர்ச்சியூட்டும் தகவல்களைச் செய்திகளாக எமக்கு முன்வைத்துள்ளார்.

சமூகம் வளர ஒவ்வொருவரும் தமது செயற்பாடுகளை கலாசார விழுமியங்களைக் கைக் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை பிறரது மனம் புண்படாதவாறு நகைச்சுவையாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இன்றைய சூழலில் நமது சமூகம் தனது அடையாளத்தை நிலைநிறுத்தக் கைக்கொள்ளக் கூடியதான சிந்தனைகளைத் தூண்டும் ஆற்றல் கொண்ட படைப்புக்களாக அவரது படைப்புக்கள் எமக்குக் கிடைத்துள்ளன. மக்கள் இவற்றைப் படித்துப் பயன் பெறவும் நல்ல மனிதர்களாக வாழவும் நிறைந்த அறிவையும் வழங்குகிறது- என்றார்.

நூலாசிரியர் மு.திருநாவுக்கரசு தெரிவித்ததாவது:-

வல்வெட்டியில் நான் கோயில் ஒன்றில் பேசச் சென்றபோது விகடகவி என அறிமுகப்படுத்தினார்கள். அங்கிருந்த முதியவர் ஒருவர் வந்து உனது கவிதைகளை ஏன் புத்தகமாகப் போடவில்லை என்று கேட்டார். நான், சில கவிதைகள் தொலைந்து விட்டதாகக் கூறியபோது ஓடிச் சென்று ஒரு சீ.ஆர் கொப்பியுடன் வந்த அவர் இதில் எல்லாம் இருக்கிறது எனக் கூறித் தந்தார். அவரின் விருப்பத்தை நிறைவேற்ற இந்த நூலை வெளியிட்டேன்.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவேண்டியவர்கள். ஐயர் கோவிலுக்குச் செல்ல வேண்டியவர் இருவரும் தமது கடமைகளை மறந்து தியேட்டருக்குள் புகுந்தால் எப்படி இருக்கும். இந்தக் கருத்தை முன்வைத்து நான் எழுதிய முதல் பாடல் வெளியானதும் ஆளைத் தெரியாதவர்களும் அந்தக் கவிதையைப் பற்றிப் பேசத்தவறவில்லை. அந்த முதல் கவிதை வெளியானதைத் தொடர்ந்து எழுதத் தொடங்கினேன்.

ஆட்டை ஆடோ, மாட்டை மாடோ விசாரித்துக் கொள்வதில்லை. மனிதன் தான் ஒருவரையொருவர் விசாரிக்கிறான். சிரித்துப் பேசி மகிழ்கிறான். ஒவ்வொருவரும் சிரித்து வாழ வேண்டும் என்பதற்காகவே எழுத வேண்டும். அது சிரிப்புடன் நில்லாது சிந்திக்கவும் தூண்ட வேண்டும். ஒரு நல்ல சமுதாயமாக மக்கள் மாற வேண்டும் என்பதற்காக நிறையவே எழுத விரும்புகின்றேன்.

'பார்த்தும் படித்தும்' என்று ஒரு நூலை வெளியிடலாம் என்றும் இருக்கிறேன் - என்றார் நூலாசிரியர் திருநாவுக்கரசு. (எ-7)

### பேராசிரியர் வேல்நம்பி புகழாரம்

கடவுளை தமிழ்த்தாயை வாழ்த்திய பின் தாயைக் குறிப்பிடுவார்கள். ஆனால் கவிஞர் திருநாவுக்கரசு ஐயா அவர்கள் தந்தையை முதலில் குறிப்பிட்டுப் பின்னர் தாயைக் குறிப்பிடுகின்றார். நல்லபடிப்பு ஒழுக்கத்துடனான வாழ்வு என்ற செய்திகளை அதனூடாகத் தந்துள்ளார். அதேபோன்று இன்று நாட்டில் காணக்கூடிய அதிர்ச்சியூட்டும் தகவல்களைச் செய்திகளாக எமக்கு முன்வைத்துள்ளார்.

# எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஏப்.9

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டிகளின் வலய மட்ட எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி முடிவுகளின் பிரகாரம் முதலிடம் பெற்ற மாணவர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. பெயர் விவரம் வருமாறு:-

**ஆக்கம்**

முதலாம் இடம்- இ.கிருபிகா- மிருசுவில் அ.த.க.பாடசாலை, இரண்டாமிடம்- உ.பிரதீஸா- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. மூன்றாமிடம்- த.கபில்ஷா - கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி.

**கட்டுரை வரைதல் - பிரிவு -1**

முதலாம் இடம்- க.சர்மினி - மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி, இரண்டாமிடம்- சி.டனுஜன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- சி.தாரங்கினி - கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.

**பிரிவு- 2**

முதலாம் இடம்- இ.தசானன் -மந்துவில் றோ.க.த.க. பாடசாலை, இரண்டாமிடம்- சி.சோபனா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- சி.டினிஷன் - மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி.

**பிரிவு - 3**

முதலாம் இடம்- இ.சிந்துஷா - மீசாலை வீரசிங்கம் ம. கல்லூரி, இரண்டாமிடம்- ஸ்ரீ தனுஷா - உசன் இராமநாதன் ம.வி, மூன்றாமிடம்- ஆ.அஜித்தா- சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**பிரிவு -4**

முதலாம் இடம்- க.கஜனா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- ஜெ.விஜிதா- உசன் இராமநாதன் ம.வி., மூன்றாமிடம்- யோ.லனோஜா- மீசாலை வீரசிங்கம் ம.கல்லூரி.

**இலக்கணம் பிரிவு- 1**

முதலாம் இடம்- கி.கார்த்திகா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம்- ம.அனுஷா - மீசாலை வீரசிங்கம் ம. கல்லூரி, மூன்றாமிடம்- ந.துவாரகா - விடத்தற்பளை கமலாசனி வித்தி.

**பிரிவு 2**

முதலாம் இடம்- நா.சுஜீவன்- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, இரண்டாமிடம்- கி.தேனுகா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம்- சி.லோஜிதா- வரணி ம.வி.

(தொடரும்) (எ-9)



[illegible] சுகாதாரப் பகுதியின் ஜே/101 நீராவியடி குடும்ப நல உத்தியோகத்தர்களினால் காசநோய் தினம் சைவ பரிபாலனசபை மண்டபத்தில் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வைத்திய அதிகாரி ஞானசோதி, சுகாதாரப் பரிசோதகர் எஸ்.முகுந்தன் குடும்பநல உத்தியோகத்தர் திருமதி வி.சுமதி ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## அழுத்தங்கள் சரிவராது அதிரடிதான் அரசுக்குப் புரியும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தம்மை ஒருபோதும் கட்டுப்படுத்தாது என்றும் சர்வதேச அழுத்தங்களுக்குத் தாம் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை என்றும் நாடாளுமன்றத்தில் அரசு தெரிவித்திருந்தது.

தான் சொன்னபடியே அரசு செயற்படுகிறது. மனித உரிமை மீறல்களுக்காகவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இழுத்தடித்து வருவதற்காகவுமே ஐ.நாவில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மஹிந்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே சர்வதேச சமூகம் விரும்பியது.

அப்படி அழுத்தம் கொடுப்பதன் மூலம் இனிவரும் காலங்களிலாவது மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் அரசு அக்கறை காட்டும் என்பதும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் அரசு விரைந்து செயற்படும் என்றும் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் எதிர்பார்த்தன. ஆனால், அரசு சொன்னது போலவே ஜெனிவா தீர்மானத்துக்குத் தான் கட்டுப்படப்போவதில்லை என்பதைச் செயலில் காட்டியுள்ளது.

அதற்கான முதலாவது செயல், ஜே.வி.பி. கிளர்ச்சிக் குழுவின் தலைவரான பிரேமகுமார் குணரட்னம் மற்றும் அந்தக் குழுவின் மகளிர் அணித் தலைவி திமுது ஆட்டிகல ஆகியோர் கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்டிருக்கிறார்கள்.

வலிந்து காணாமல்போகச் செய்யப்படல் சம்பவங்கள் அநேகம் இலங்கையில் நடைபெற்றுள்ளன என்பதும் அவை பற்றி விசாரணை செய்து எந்தக் குற்றவாளியையும் தண்டித்தது கிடையாது என்பதும் மோசமான மனித உரிமை மீறல் என்று சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் நீண்ட காலமாகக் குற்றஞ் சாட்டி வருகின்றன. அவையெல்லாம் சேர்ந்துதான் ஐ.நாவில் இலங்கை தொடர்பில் தீர்மானம் கொண்டு வர வைத்தன.

கடத்தல்கள் தொடர்வதற்கு அனுமதிப்பதன் மூலம் இலங்கை அரசு மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை துளியளவேனும் மதிக்கவில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

மற்றைய செயல், வரலாற்றுப் புகழ் பெற்ற திருக்கேதீச்சரத்தில் புத்தர் சிலையை நிறுவ அனுமதித்ததன் மூலம் வடக்கு – கிழக்கு தமிழர்களின் தாயக பூமி என்ற எண்ணக் கருவைச் சிதைக்கும் தனது நோக்கத்தை அரசு வெளிப்படுத்தியிருக்கிறது.

வடக்கு – கிழக்கில் தமிழர்களின் இனப் பரம்பலையும் இந்து கிறிஸ்தவ மதங்களின் தனியாதிக்கத்தையும் சிதைத்து புத்தர் சிலைகளின் மூலமாக இந்த நாடு பௌத்த சிங்களவர்களுடையது என்பதை நிலைநிறுத்தும் அரசின் உள்நோக்கம் கொண்ட செயல்களில் முதன்மையானது இது.

கதிர்காமத்தில் விகாரை அமைத்து அதனை புனிதப் பிரதேசம் ஆக்கியதன் மூலம் அரசு செய்ததையே இப்போது வடக்குக் கிழக்கிலும் அரசு செய்ய முனைகிறது.

மனித உரிமைகள் மற்றும் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகள் ஆகிய இரு முக்கிய விடயங்களிலும் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்குத் தான் ஒருபோதும் துணை போகப் போவதில்லை என்பதை இந்த இரு செயல்களின் மூலமாகவும் அரசு மிக திடமாக வெளிப்படுத்தி நிற்கிறது. எனவே இந்த அரசு தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வு ஒன்றைத் தரும் என்று நம்புவதை சர்வதேசம் இனியாவது கைவிட வேண்டும். இலங்கை அரசைப் பொறுத்தவரையில் அழுத்தங்கள் சரிவராது; அதிரடிகள்தான் சரிவரும்.

# ஜெனிவாவில் பிரச்சினை முடிந்தாலும் வொஷிங்டனில் தொடரவே செய்யும்

■ தொகுப்பு : கோகுலன்

நேற்று 08.04.2012 அன்று 'சண்டே ரைம்ஸ்' எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி.

இலங்கை தரப்பில் ராஜதந்திர மட்டத்தில் இழைக்கப்பட்ட தொடர் தவறுகளின் விளைவாக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாகத் தீர்மானம் ஒன்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டதைப் பார்த்தோம்.

இலங்கை மீதான சர்வதேசப் பார்வை முதன்முதலில் நிலைபெற ஆரம்பித்தது ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் பொறுப்புக்கூறும் விடயம் தொடர்பாக மூவர் கொண்ட நிபுணர் குழுவை நியமித்தபோதுதான் எனலாம். குறித்த நிபுணர் குழு அரச படைகளாலும் புலிகள் இயக்கத்தாலும் இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆராய்ந்தது. பின்னர் குற்றங்கள் பற்றிய அறிக்கையை வெளியிட்டது. அவை சரியானவையா இல்லையா? என்பது வேறு விடயம்.

அதிகாரபூர்வமாக ஐ.நா.நிபுணர் குழுவைத் தாங்கள் அங்கீகரிக்கவில்லை என்ற நிலைப்பாட்டை அரசு எடுத்தது. வெளிநாட்டமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகையில் அது செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டதோர் ஆலோசனைக் குழு மாத்திரம்தான். அதனால் அந்தக் குழு பொதுச் சபையின் ஒப்புதலைப் பெற்றிருக்கவில்லையென்றார்.

எதுவானாலும் அரசின் பிரதிநிதிகள் அடங்கிய பிரதிநிதிகள் குழுவொன்று அப்போதைய சட்டமா அதிபர் (இப்பொழுது அமைச்சரவை ஆலோசகர்) மோகான் பீரிஸ் தலைமையில் சென்று ஆணைக் குழுவின் முன் இரகசியமாக சாட்சியமளித்தது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை பகிரங்கமாக வெளிவந்தபோதுதான் இந்த விடயம் பூர்வாங்கமாக அம்பலமாயிற்று.

நிபுணர் குழுவின் அறிக்கையானது இலங்கை உள்நாட்டிலும் உலக மட்டத்திலும் விவாதத்துக்கு வந்தபோது அந்த விடயங்கள் செயற்படுத்தப்படுவதான ஒரு நிலைப்பாட்டை அரசு அறிவித்தது. கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு அதனைக் கவனிப்பதாகக் கூறப்பட்டது.

இந்த ஆணைக்குழுவானது சர்வதேச பொறிமுறையேதும் அமைக்கப்பட்டு அதன் மூலம் போர்க் குற்றங்கள் ஆராயப்படகூடிய சாத்தியக் கூறுகளைத் தவிர்ப்பதற்காக அவசர அவசரமாக அரசால் நியமிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக நிபுணர் குழு மிக முக்கியமான ஆவணம் ஒன்றைக் கொண்டுள்ளது. அதாவது வெளியுறவு அமைச்சர் பீரிஸால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று.

நிபுணர் குழு செய்யும் பணிகளுக்கும் எல்.எல்.ஆர்.சி. மேற் [illegible]
[illegible]
தொடர்பு (Seamless connectivity)

“ நாஸ்பி பிரபு மிக நாசுக்காக “எங்கள் நாட்டில் எதைபாவது பிற்போட வேண்டுமானால் நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடம் விட்டுவிடுவோம்” என்றார். அதற்கு ராஜபக்ஷ பெரிதாகச் சிரித்துவிட்டு “இல்லை, இல்லை நான் அப்படிச் செய்யமாட்டேன்” என்று கூறினார்.

இருக்க வேண்டும் என்று அமைச்சர் தம் கடிதத்தில் தெரிவித்திருந்தார். இந்தக் கடிதத்தில் இரு முக்கிய குறிப்புகள் அடங்கியுள்ளன. ஒன்று ஐ.நா. நிபுணர் குழுவை இலங்கை அரசு அங்கீகரிக்கின்றது. அது எவ்வாறு எனின் நிபுணர் குழுவும் எல்.எல்.ஆர்.சியும் மேற்கொள்ளும் பணிகளில் ஒரு தொடர்பு இருக்க வேண்டும் என்று அமைச்சரே குறிப்பிடுவதாகும். அடுத்து முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைகளைக் கையாளுவதற்காக அரசினாலேயே நியமிக்கப்பட்டுள்ள பொறிமுறையாக எல்.எல்ஆர்.சியை ஏற்றுக்கொண்டிருப்பதாகும்.

எல்.எல்.ஆர்.சியின் தலைவர் சி.ஆர்.பிசில்வா கடந்த டிசெம்பரில் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் குழுவின் அறிக்கையைக் கையளித்தார்.

ஆனால் இப்பொழுது சில அமைச்சர்கள் எல்.எல்.ஆர்.சி. அறிக்கையின் செல்லுபடியாகும் தன்மை பற்றிக் கேள்வி எழுப்புகிறார்கள். ஆணைக்குழுவானது அதற்கு அளிக்கப்பட்ட ஆணைக்கு அப்பால் சென்று செயற்பட்டிருக்கிறது என்று சில நிபுணர்கள் தெரிவிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இம்மாதிரியான முரண்பாடான கருத்துக்கள் பல அமைச்சர்களிடமிருந்து வந்துள்ளன. இவ்வாறான முரண்பாடுகள் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் அமைச்சர்களிடமிருந்து வெளிவருவதானது அரசின் அடையாளமாக மாறிவருகின்றது. இருந்தபோதும் எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை அரசு செயற்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார். அது முழுமையாக செய்யப்படமாட்டாது, உலகில் எங்குமே அப்படிச் செய்யப்பட்டது கிடையாது என்று அவர் கூறினார். இந்த நாட்டிலோ வேறு வெளியில் எங்கிருந்துமோ எவரும் அதனை முழுமையாகச் செயற்படுத்தும்படி கோரவில்லை. அவர்கள் அறிய விரும்புவதெல்லாம் எல்.எல்.ஆர்.சி. அறிக்கையின் எந்தப் பகுதியை எப்பொழுது அரசு செயற்படுத்துவதற்கு ஒப்புக் கொள்கிறது என்பதையே.

இதேகருத்தைத்தான் அமெரிக்கா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானமும் கூறுகின்றது. அதே நிலைப்பாட்டைத்தான் இலங்கைக் குழுவின் தலைவர் மஹிந்த சமரசிங்கவும் பேரவையில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டிருந்தார். இப்பொழுது பல்வேறு விதமான முரண்பாட்டுக் கருத்துக்களால் அரசு கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது. அதுவே அரசின் சொந்த எதிரியாக மாறியிருப்பது கவலையளிப்பதாகும். அதன் நம்பகத்தன்மை இப்பொழுது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் மாநாடு ஜெனிவாவில் முடிவடைந்துவிட்டது. ஆனால் இலங்கை அரசுக்குப் பிரச்சினை இன்னமும் தீர்ந்துவிடவில்லை. பிரச்சினை மீதான பார்வை இப்பொழுது அமெரிக்க தலைவரான வாஷிங்டனுக்குத் திரும்பியுள்ளது. அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உலக குற்ற நீதித்துறை பணியகத்தின் உலக நாடுகளுக்கான தூதுவர் ஸ்டீபன் ராப் கடந்த பெப்ரவரியில் இலங்கைக்கு வந்திருந்தார்.

கடந்த புதன்கிழமை அமெரிக்க காங்கிரஸ் சபைக்குத் தமது அறிக்கையொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அதன் சில பகுதிகள் வருமாறு:

இலங்கை அரசு தனது எல்.எல்.ஆர்.சி. அறிக்கையை 2011 டிசெம்பர் 16 ஆம் திகதி பகிரங்கப்படுத்தியது. பின்வரும் விடயங்களில் புலனாய்வுகளை மேற்கொள்ளவும் சாத்தியமான விடயங்களில் குற்ற விசாரணைகளை நடத்தவும் அறிக்கை பரிந்துரைத்திருந்தது. இலங்கை படைகளினால் பொதுமக்கள் மீது வேண்டுமென்றே தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட முக்கிய சம்பவங்கள், பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவங்கள், தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் மோசமாக நடத்தப்பட்டமை தொடர்பான சம்பவங்கள், எல்.எல்.ஆர்.சி. அறிக்கை தெரிவித்திருக்கும் இராணுவத்தை விலக்கிக் கொள்வது, கருத்து சுதந்திரம், காணி சீர்திருத்தங்கள் மற்றும் சட்டச் செயற்பாடுகள் தொடர்பான பரிந்துரைகளும் குறிப்பாக முக்கியத்துவமானவை. இவை முழுமையாக செயற்படுத்தப்படுமானால் தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஒன்று இலங்கை அரசுக்குக் கிடைப்பதாய் இருக்கும். அதே போல் இலங்கையில் பல்வேறு ஜனநாயக நிறுவனங்களையும் மீளவும் செயற்படச் செய்யமுடியும். எதுவானாலும் போரின் இறுதிக் கட்ட நிகழ்வுகளின் போது எல்.ரி.ரி.ஈ. போராளிகளும் இலங்கை பாதுகாப்புப் படைகளும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறி செயற்பட்டிருப்பது குறித்து அறிக்கை போதுமான அளவில் கவனம் செலுத்தத் தவறியுள்ளது.

ஆணைக்குழு ஏற்கனவே வழங்கிய இடைக்கால பரிந்துரைகள் நிறைவேற்றப்படாமையைச் சுட்டிக்காட்டியுள்ள அறிக்கை இந்த அறிக்கையும் கூட செயற்படுத்தப்படுமா என்பதில் கவலை தெரிவித்துள்ளது. எல்.எல்.ஆர்.சி. அறிக்கை வெளியானதன் பின்னர் குற்றம் புரிந்திருக்கக் கூடிய நபர்கள் எவரும் ஒரு நம்பகமான பொறிமுறை மூலம் அடையாளம் காணப்படவில்லை. பொறுப்புக் கூறுவதற்கு எவரும் அடையாளம் காணப்படவில்லை. இலங்கை அரசு ஒரு அமைச்சரவை உபகுழுவை நியமிக்கப் போவதாகவும் எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை நிறைவேற்ற திட்டம் ஒன்றை உருவாக்கப் போவதாகவும் ராஜாங்க அமைச்சுக்கு அறிவித்திருந்தது. இவைகள் இதுவரைக்கும் ஒன்றுமே தெரியவரவில்லை.

ஆணைக்குழு பொதுமக்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக எட்டு சம்பவங்களை அடையாளம் கண்டுள்ளது. ஆனால் அவைகளில்

(பார்க்க பக்கம் 22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய இலங்கையா? தனி ஈழமா?

- இலங்கை அரசு ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத காரணத்தால் அரச தலைவர்கள் மீது சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் வழக்குத் தொடுக்க முடியாது.
- ஐ.நாவில் நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுகளாக இருக்கும் சீனாவும் ரஷ்யாவும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச் செய்துவிடும்.
- சேர்பியாவிலிருந்து கொசோவோ உருவானதும், சூடானிலிருந்து தென் சூடான் உதயமானதும் இதற்கு எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

புலோலி ஜெயம்




இலங்கையை வழிக்குக் கொண்டுவர போர் முடிவுற்ற காலத்திலிருந்து சர்வதேசம் முயற்சித்து வந்தது. அதற்காக தமிழர்களின் பிரச்சினையை உரிய முறையில் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தியது.

அந்த வற்புறுத்தல்களை காலங்கடத்தும் கைங்கரியங்களுக்காக இலங்கையரசு பயன்படுத்துகிறது என்பதை உணர்ந்த சர்வதேசம் அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தது.

அதுதான் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஜெனிவாத் தீர்மானம். ஒரு வகையில் இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் மறுவடிவம்தான் இந்தத் தீர்மானம்.

எனவே, இந்தத் தீர்மானம் தமிழர்களுக்கு முழுமையான தீர்வைப் பெற்றுத் தராது என்றாலும், தீர்வைப் பெறுவதற்கான முதற்படியாக அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட முன்னர் இலங்கை அரசு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப் படுத்துவோம் - நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறோம். என்றவாறு பல நம்பிக்கைகளைக் கொடுத்து வந்தது.

யுத்தம் முடிவடைந்து 3 வருடங்களாகியும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாத இலங்கையின் இந்தக் கோரிக்கையை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை என்பதை நேரடியாகவே அமெரிக்கா தெரிவித்தது. இலங்கைக்கு எதிரான பிரேரணையையும் ஜெனிவாவில் சமர்ப்பித்து வெற்றிபெற்றது அமெரிக்கா.

இதையடுத்து, இலங்கை அரசு வரிந்து கட்டிக் கொண்டு சர்வதேசத்துடன் முரண்டுபிடித்து வருகிறது. ஆனால், இந்தப் பிரேரணை இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் படுத்துமாறே வலியுறுத்தி நிற்கிறது. மாறாக, போர்க் குற்ற விசாரணையையோ அல்லது அரச தலைவர்களைத் தூக்குமேடையில் ஏற்றவேண்டும் என்றோ அது வலியுறுத்தவில்லை.

ஆனால், இலங்கை அரசு ஜெனிவாத் தீர்மானம் மேற்கு நாடுகளின் பிரயத்தனங்களுக்கு அமைவாக இலங்கையில் அமுல்படுத்த முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்து வருகின்றது.

"எமது நாட்டுப்பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்வோம். வெளியார்களின் தலையீடு தேவையில்லை" என அரசும் அமைச்சர்களும் மேடைகளில் முழங்கி வருகின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் பார்க்கப்போனால் இந்தத் தீர்மானத்திற்குப் பின்னர் சிங்களப் பேரினவாதம் மீண்டும் புத்துயிர் பெற்று - தலைவிரித்து ஆடுகிறது. சிங்களப் பேரினவாத அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டி வருகின்றனர்.

இவர்கள் தங்கள் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கும் தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் இந்தத் தீர்மானத்தைத் துப்புச் சீட்டாக பயன்படுத்துகின்றனர்.

அமெரிக்கப் பொருட்களை தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மக்களை வீதியில் இறக்கிப் போராட்டங் களையும் இவர்கள் நடத்துகின்றனர்.

மேலும், "நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை நாம் தயாரித்தோம். ஆனால் அதன் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவோம் என நாம் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடவில்லை" என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

பிரேரணையில் ஈழத் தமிழருக்குப் பெரிதாக ஒன்றும் இல்லை என்றாலும், அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானம் இலங்கை அரசைச் சற்று பயத்தில் ஆழ்த்தியுள்ளது என்பது மட்டும் உண்மை.

பொருளாதார வளர்ச்சியில் சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் பனிப்போர் நடந்துகொண்டிருப்பதால், ஆசியாவில் சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவே அமெரிக்கா, ஈழத் தமிழர் பிரச்சினையைக் கையிலெடுத்துள்ளதே தவிர தமிழர் மீதான அக்கறையில் அல்ல என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, அமெரிக்கா இதைத் தனது கௌரவப் பிரச்சினையாகக் கருதுகிறது. இதனால் ஈழத் தமிழர்கள் மேல் அமெரிக்காவுக்கு அக்கறை இருக்கிறதோ, இல்லையோ, தான் முன்வைத்த தீர்மானத்திற்கமைய - ஒருவருட கால அவகாசத்திற்குள் இலங்கை தனது பொறுப்புக்கூறும் நடவடிக்கையை மேற்கொள்ளாவிட்டால் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்காவிட்டால் - அந்நாடு தனது மறுமுகத்தை காண்பிக்கத் தொடங்கும்.

இதனால்தான் அமைச்சர்கள் என்ன பேசுவதென்று தெரியாமலேயே உளறுகின்றனர். பின்னர் ஒருவரை ஒருவர் மாறி, மாறி அவரின் கருத்து அரசின் கருத்தல்ல. இவரின் கருத்தும் அரசின் கருத்தல்ல. அது அவர்களின் தனிப்பட்ட கருத்து என்று பூசிமெழுகுகின்றனர். அமைச்சர்கள்தான் பொறுப்பற்ற விதத்தில் அமெரிக்காவை விமர்சிக்கிறார்கள் என்று பார்த்தால் ஜனாதிபதிகூட அமெரிக்காவுடன் நேரடியாக மோதுகிறார்.

"நாம் என்ன செய்ய வேண்டும் என்று எமக்கு யாரும் புத்தி சொல்லத் தேவை யில்லை. உண்மையான பயங்கரவாதி அமெரிக்காவே என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் ஒன்று மட்டும் தெட்டத்தெளிவாக விளங்குகிறது. அதாவது, ஈழத் தமிழர்களுக்கு எந்தவொரு தீர்வையும் வழங்க சிங்கள அரசு தயாரில்லை என்பதே அது.

தமிழர்கள் சிங்களவர் உரிமைகளைத் தட்டிப் பறிக்கவில்லை. தமக்குரிய உரிமைகளைத்தான் கேட்கின்றனர். அதுவும் மிகக் குறைந்த பொலிஸ், காணி அதிகாரங்கள் உட்பட மாகாணசபை அதிகாரங்களையே கோருகின்றனர். இதைக் கூட வழங்குவதற்கு சிங்கள அரசு தயாராக இல்லை.

இதனால் நாட்டு மக்களிடையே மீண்டும் பிளவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்து நாடு மேலும் பின்நோக்கித் தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் மக்களிடம் இருந்த அச்ச உணர்விலும் பார்க்கதற்போது தமிழ் மக்களிடையே பெரும் பீதியும், அச்சமும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக தமிழர் தயாகமான வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தற்போது இராணுவ நிர்வாகமே காணப்படுகிறது.

ஜெனிவாத் தீர்மானத்தின் பின்னரேயே நாட்டு மக்களிடையே அச்ச உணர்வு அதிகரித்துள்ளது.

சீனா, ரஷ்யாவின் பின்புல ஆதரவாலேயே ஜனாதிபதி மஹிந்த சர்வதேசத்தை மதிக்காது - துணிச்சலாகப் பேசி வருகிறார். ஜெனிவாத் தீர்மானத்தையும் அவர் ஒரு பொருட்டாக எடுக்காது வீரம் பேசி வருகிறார்.

ஆனால், ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவளித்த நாடுகள், நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறியே இலங்கையை ஆதரித்து வாக்களித்தன.

எனவே, இந்த ஒருவருடத்திற்குள் மஹிந்த அரசு நல்லிணக்க ஆணைக்குழுவை அமுல்படுத்தாவிடின் அடுத்த ஜெனிவா அமர்வில் இலங்கைக்கு எதிராக இன்னுமொரு தீர்மானம் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்படும்போது, ரஷ்யாவும் ஆதரவளித்த ஏனைய நாடுகளும் நிச்சயம் மஹிந்த அரசுக்கு எதிராகத் திரும்பும் என்பதில் சந்தேகமில்லை.

அதேபோல், புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு ஆயுத உதவிகளை வழங்கிய அமெரிக்காவும், இந்தியாவுமே இந்தத் தீர்மானத்தை முன்நின்று நிறைவேற்றியுள்ளன.

மஹிந்த அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதமையாலேயே ஜெனிவாவில் இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்தது என இந்திய பாதுகாப்பு ஆலோசகர்களில் ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனவே, இந்த வரிசையில் சீனாவும், ரஷ்யாவும் இலங்கைக்கு எதிராகத் திரும்புவதற்கு இன்னும் நீண்ட காலம் எடுக்காது என்பதை மஹிந்த அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்தது என்ற ஒரே காரணத்துக்காகவே சீனாவும் ரஷ்யாவும் கண்ணை மூடிக் கொண்டு இலங்கைக்கு எதிரான பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன.

இதையுணர்ந்து மஹிந்த அரசு ஜெனிவாத் தீர்மானத்தின் படி நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையேல் அடுத்த கட்டமாக சர்வதேச போர்க் குற்ற விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிடும் என எச்சரிக்கப்படுகின்றது.

தற்போது நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலான ஆதரவைப் பெற்றுள்ள மஹிந்த அரசால், தமிழர்களுக்கு தீர்வு வழங்கப்படவில்லை என்றால் இனிவரும் அரசுகளால் தீர்வை முன்வைக்கக் கூடிய சாத்தியம் இல்லை என்றே கூறலாம்.

இலங்கை அரசு ஜெனிவாத் தீர்மானத்திற்கேற்ப தம்மால் செயற்பட முடியாது என தட்டிக்கழிக்குமானால், சர்வதேச சுயாதீன போர்க்குற்ற விசாரணையை எதிர்கொள்ள நேரிடும் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால், இலங்கை அரசு ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத காரணத்தால் அரச தலைவர்கள் மீது சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் வழக்குத் தொடுக்க முடியாது எனக் கூறப்படுகிறது.

இதனால்தான் இலங்கைத் தலைவர்கள் தாம் எவருக்கும் அடிபணிய மாட்டோம் - அஞ்ச மாட்டோம் என வீறாப்புப் பேசி வருகின்றனர்.

இருந்தும், இலங்கைத் தலைவர்கள் மீது போர்க் குற்ற விசாரணை நடத்துவதற்கும் ஒரு வழி இருக்கிறது.

அதாவது, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைத் தலைவர்கள் மீது சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் வழக்குத்தொடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி அதன் மூலம் வழக்குத் தொடுக்கலாம்.

ஆனால், இந்தத் தீர்மானத்தை ஐ.நாவில் நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுகளாக இருக்கும் சீனாவும் ரஷ்யாவும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச் செய்துவிடும் நிலை ஏற்படும்.

எனவே, ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான கண்டனத் தீர்மானம், பொருளாதாரத்தடை போன்றவற்றை நிறைவேற்றினால், அடுத்த கட்டமாக இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றில் வழக்குத்தொடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றமுடியும்.

அப்போது சீனா, ரஷ்யா மாத்திரமல்ல, எந்த வல்லரசு நாடுகளின் அதிகாரமும் அங்கு தமது அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது போய்விடும்.

எனவே, மஹிந்த அரசு மமதை கொண்டு செயற்படாமல் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகளை உதாசீனம் செய்யக் கூடாது.

அதைவிடுத்து, இனவெறி பிடித்து மஹிந்த அரசு செயற்படுமாயின் அது, தனித் தமிழீழக் கோரிக்கைக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும் விதமாகவே அமையும். உரிமை மறுக்கப்பட்ட சந்தரப்பங்களில் தான் தமிழர்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர் என்பதற்கு பல ஆதாரங்கள் இலங்கை அரசியல் வரலாற்றில் உண்டு.

விடுதலைப்போராட்டங்கள் நடைபெற்ற நாடுகளில் ஐ.நா. தலையிட்டதன் பின்னர் அந்த நாடுகள் இரண்டாகப் பிளவுபட்டதுதான் சரித்திரம், பிளவுபடாத வரலாறு இல்லை என்றே கூறலாம்.

இஸ்ரேலிலிருந்து பாலஸ்தீனம் பிரிந்ததும், சேர்பியாவிலிருந்து கொசோவோ உருவான்தும், சூடானிலிருந்து தென் சூடான் உதயமான்தும் இதற்கு எடுத்துக் காட்டுகளாக உள்ளன. இதை மஹிந்த அரசு புரிந்து கொண்டு செயற்பட்டால் நாடு பிளவுபடுவதைத் தவிர்க்க முடியும். இல்லையேல் இதற்கு இலங்கையும் விதி விலக்கல்ல என்பதே [illegible]னம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை

ஒரு ஞானி இருந்தார். அவருக்கு கோபமே வருவதில்லை. அந்த நிலையெல்லாம் கடந்தவர் அவர் என்று எல்லோரும் கூறினார்கள். எப்படிக் கோபம் வராமல் இருக்க முடியும் எ ன்று ஒருத்தருக்கு சந்தேகம். எப்படியாவது அவருக்கு கோபத்தை ஏற்படுத்தி பார்த்து விடவேண்டும். என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது. உடனே அவரைத் தேடிச் சென்று கண்டபடி திட்டினார். அவருக்கு கோபம் ஏற்படவில்லை. அதுமட்டுமல்ல அவர் முகத்தில் எந்த வித்தியாசமும் தெரிய வில்லை. இவருக்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டது. நேராகவே அதை அவரிடம் கேட்டுவிடுவோம் என்று முடிவு எடுத்தார்.

''நான் இவ்வளவு தூரம் உங்களைக் கண்டபடி திட்டியிருக்கிறேன். உங்களுக்குக் கொஞ்சம் கூடக் கோபம் வரவில்லையே. உங்களால் எப்படி இந்த அளவுக்குப் பொறுமையாக இருக்க முடிகிறது என்று கேட்டார். அந்த ஞானி முகத்தில் புன்னகையுடன் ''உங்களிடம் பணம் இருக்கிறதா?'' என்று கேட்டார். இவருக்கு ஆச்சரியம் அதிகரித்தது. ''இவருக்குக் கோபம் தான் வரவில்லை. ஆனால் பணத்தின் மீது ஆசை இருக்கின்றது போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டார். உடனே தங்கக் காசை எடுத்து அவரிடம் கொடுத்தார். அவர் அதை வாங்கிப் பார்த்து விட்டு மறுபடியும் திருப்பிக் கொடுத்தார். ''இந்தக் காசு போதவில்லை இன்னும் வேண்டுமா? என்று கேட்டார்.

அதற்கு ஞானி கூறினார் ''இந்தத் தங்க நாணயம் உனக்கு முக்கியமாகத் தெரியலாம். இதனால் எனக்கு ஒன்றும் பயனில்லை. அதனால் அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோன்று இவ்வளவு நேரமாக நீ திட்டிய வார்த்தைகள் எதுவுமே எனக்குப் பொருந்தாது. மிகவும் சிரமப்பட்டு அந்த வார்த்தைகளை எல்லாம் நீ சேகரித்து வைத்திருக்கிறாய். அது வீணாகிவிடக் கூடாது. அதனால் அவற்றை எல்லாம் நீயே வைத்துக் கொள்'' என்று கூறிவிட்டு சிரித்துக் கொண்டு போய்விட்டார். பெரியவர்களால் தான் இப்படி நடந்துகொள்ள முடியும். அந்த நிலைமைக்குப் போய்ச் சேர முடியவில்லை என்றாலும் முயற்சியாவது செய்யலாம் அல்லவா? நபிகள் நாயகம் ஒருநாள் தவறாமல் பள்ளிவாசலுக்குப் போய் வருவது வழக்கம். அவர்போகும் வழியில் ஒரு அம்மா அவர் தலையில் குப்பைகளைக் கொட்டிக் கொண்டே இருப்பார். இதற்காக நபிகள் நாயகம் கொஞ்சம் கூட முகம் சுளிக்கவில்லை. பொறுமையாக திரும்பி வந்து வேறு ஆடைகள் அணிந்து கொண்டு தொழுகைக்குப் போவார். ஒரு நாள் போகும் வேளையில் தலையில் விழவில்லை. தொழுது கொண்டு திரும்பி வரும் போதும் குப்பை விழவில்லை.

அன்றைக்குத்தான் அவர் அந்த வீட்டைத்திருப்பப் பார்த்திருக்கிறார். ''நீங்கள் போங்கள், அந்த அம்மா ஏதோ புரியாமல் இப்படி நடந்து விட்டார்'' என்றார்களாம். அதற்கு நபி ஒவ்வொருநாளும் தவறாமல் நடக்குமே; இன்றைக்கு ஏன் அப்படி நடக்கவில்லை என்று தெரிந்து கொண்டு போகலாம் என்று பார்த்தேன்'' என்றவர், அந்த வீட்டுக் கதவைத் தட்டினார். கோஷம் எச்சரிக்கை செய்துகொண்டு உள்ளே சென்றார். அந்த அம்மா குணமடைய வேண்டிய பிரார்த்தனையும் சிகிச்சையும் செய்தார். ஒவ்வொரு நாளும் என்னுடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த இவர்க ளுக்கா இந்த நோய்? என்று கேட்டு வேண்டுதல் செய்தார். அவரது உடல் மட்டுமல்ல மனமும் குணமாகி விட்டது. கருணை என்று கூறினால் அதற்கு இதுதான் உதாரணம்.

இந்தக் காலத்தில் எல்லாம் அந்தளவுக்கு கருணையையும் சகிப்புத் தன்மையையும் இரக்கத்தன்மையையும் பார்க்க முடிகிறதா? மிகக் கஷ்டம். கடவுளுக்கு அப்படி ஒரு சந்தேகம் வந்து அதை சோதித்துப் பார்ப்பதற்காக உலகத்துக்கு வந்தாராமா?

அதாவது கடவுள் திடீரென்று பூமிக்கு வந்து ஒருத்தன் வீட்டுக் கதவைத் தட்டினார். வீட்டுக்காரன் கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான். சுவாமியைப் பார்த்ததும் ஒரு கும்பிடு போட்டான். கடவுள் அவனைப் பார்த்து ''உனக்கு விரோதி யார்? என்று கேட்டார். ''அடுத்த வீட்டுக்காரன்தான் எனக்கு விரோதி என்றான் அவன். ''ஏன் எப்படி?'' என்று கேட்டார். ''அவன் இப்போதும் சந்தோஷ மாக இருக்கிறான். என்னால் அப்படி முடியவில்லை'' என்றான்.

கடவுள் ''உனக்கு என்ன வேண்டுமோ என்னிடம் கேள். நான் உனக்கு வரம் கொடுக்கிறேன். நீ கேட்டது எதுவாக இருந்தாலும் உடனே கிடைக்கும். ஆனால் ஒரு கட்டுப்பாடு உனக்கு என்ன பலன் கிடைக்கின்றதோ அதைப் போன்று இரண்டு பங்கு உனது பக்கத்து வீட்டுக் காரனுக்கு கிடைக்கும்'' என்றார். அவன் சிறிது நேரம் யோசித்து விட்டு ''சுவாமி என்னுடைய ஒரு கண் தெரியாமல் போக வேண்டும்'' -என்றான்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் ம.வி. மாகாண மட்டத்தில் வெற்றி




சோபனா

(கடந்தவாரத் தொடர்ச்சி)

மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு அனைத்து வளங்களும் சீராகக் கிடைக்கப் பெறுவதால் அதிபர், ஆசிரியர்களின் வழி காட்டலில் கல்வி மற்றும், விளையாட்டு ஆகிய துறைகளில் மாண விகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகிறார்கள்.

கோட்டம், வலயம், மாவட்டம், தேசியம் என மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதுடன் கல்லூரியின் பெயரும் நிலை நாட்டப்பட்டு வருகின்றது. சண்டிலிப்பாய் கோட்ட மட்டத்தில் இடம்பெறும் அனைத்து விதமான போட்டிகளிலும் பங்கு பற்றி முன்னணியில் உள்ளது மானிப்பாய் மகளிர் கல்லூரி.

கல்வித் துறையில் மாணவிகள், வருடாந்தம் இடம் பெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.சாதாரணதரம், க.பொ.த உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் பெற்றுக் கொள்ளும் பெறுபேறுகள் கற்றலின் அபிவிருத்தியை எடுத்துக் காட்டுகின்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 2005, 2006, 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் சண்டிலிப்பாய்க் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும், 2010 ஆம் ஆண்டு மூன்றாம் இடத்தையும் 2011 ஆம் ஆண்டு முதலாம் இடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பக் கல்வியின் வளர்ச்சி ஆண்டு தோறும் சித்தியடையும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிப்பால் மேன்மையடைந்து வருகின்றது. இதனால் மானிப்பாய் பிரதேச மக்கள் தமது பிள்ளைகளை ஆரம்பக் கல்வியை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் தொடர்வதற்கு ஆர்வம் காட்டிவருகின்றனர்.

கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டத்திலேயே அதிகூடிய புள்ளிகளைப் பெற்று 17 மாணவிகள் சித்தியடைந்தனர் எனும் பெருமையை கல்லூரிச் சமூகம் பெற்றுக் கொண்டது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு இந்தக் கல்லூரியில் தோற்றும் மாணவிகள் உயர்தரக் கல்வியைத் தொடர்வதற்கு தகுதி பெறுவதுடன் ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் பரீட்சைக்குத் தோற்றி வருகின்றார்.

2005 ஆம் ஆண்டு 61 வீதமானவர்களும், 2006 ஆம் ஆண்டு 61.4 வீதமானவர்களும், 2007 ஆம் ஆண்டு 83.3 வீதமானவர்களும் 2008 ஆம் ஆண்டு 80 வீதமானவர்களும், 2009ஆம் ஆண்டு 77 வீத மானவர்களும், 2010 ஆம் ஆண்டு 79.5 வீதமானவர்களும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி உயர்தரத்துக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 2005 ஆம் ஆண்டு 52.3 வீதமானவர்களும், 2006 ஆம் ஆண்டு 70.8 வீதமான வர்களும், 2007 ஆம் ஆண்டு 84 வீதமானவர்களும், 2008 ஆம் ஆண்டு 91 வீதமான வர்களும், 2009 ஆம் ஆண்டு 88.3 வீத மானவர்களும் 2010 ஆம் ஆண்டு 89.5 வீத மானவர்களும் சித்தியடைந்து பல்கலைக் கழகம், கல்வியற்கல்லூரி ஆகியவற்றுக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றனர்.

2008 ஆம் ஆண்டு 24 மாணவிகளும் 2009 ஆம் ஆண்டு 20 மாணவர்களும் 2010 ஆம் ஆண்டு 20 மாணவிகளும் பட்ட மேற் கல்வியைத் தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கீது.

இவ்வாறு பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளை வருடாந்தம் அதிகரித்து வருவது பாடசாலைக்குரிய சிறப்பம்சமாக உள்ளது.

கல்வித்துறையில் மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் இந்தக் கல்லூரி மாணவிகள் வெற்றியீட்டுவதற்குத் தயங்கவில்லை.

கல்லூரியின் உடற்பயிற்சிப் பிரிவின் 19 வயதுப் பிரிவினர் தேசிய மட்டத்தில் 2007 ஆம் ஆண்டு முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்ததுடன் 30 தங்கப்பதக்கங்களையும் பெற்றனர். அதனைத் தொடர்ந்து 2008,2009ஆம் ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றனர். 2011 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் 30 தங்கப் பதக்கங்களைப் பெற்றனர்.

தேசிய மட்டத்தில் 4 தடவைகள் தங்கப் பதக்கங்களைப் பெற்ற வடமாகாணத்தின் பெண்கள் பாடசாலை எனும் பெருமை மானிப்பாய் மகளிர் கல்லூரியையே சாரும்.

> தேசிய மட்டத்தில் 4 தடவைகள் தங்கப் பதக்கங்களைப் பெற்ற வடமாகாணத்தின் பெண்கள் பாடசாலை எனும் பெருமை மானிப்பாய் மகளிர் கல்லூரியையே சாரும்.

2006 ஆம் ஆண்டு பெண்களுக்கான கரப் பந்தாட்ட அணி உருவாக்கப்பட்டு அனைத்துப் பிரிவினரும் கோட்ட, வலய, மாவட்ட, மட்டங்களில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர். இதனை விட பெண்களுக்கான கிரிக்கெட் அணி 2009 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு கோட்ட, வலய மட்டப் போட்டிகளிலும் பங்கு பற்றி கல்லூரி மாணவிகள் வெற்றியீட்டியுள்ளனர்.

பெண்களுக்கான உதைபந்தாட்ட அணி 2010 ஆண்டு முதல் முதலாக உருவாக்கப்பட்டு வலய, மாவட்ட, மாகாண மட்டம்களில் முதலாம் இடத்தைப் பெற்றதுடன், தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி சாதனை படைத் துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பெண்களுக்கான உதை பந்தாட்டப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றியீட்டியது எனும் பெருமை மானிப்பாய் மகளிர் கல்லூரியையே சாரும்.

அதனைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சம்பியனையும் பெற்றுக் கொண்டுள்ளது.

கல்வி, விளையாட்டு ஆகிய துறைகளில் பெரும் அபிவிருத்தியைக் கண்டு வரும் இந்தக் கல்லூரியில் சிறந்த முகாமைத்துவம் பேணப்படுவதுடன் மாணவர்கள் ஒழுக்கமுடைய பண்புகளை, தம்முடன் வளர்த்துக் கொள்வதற்கு பாடசாலையால் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு செயற்பாடும் ஏதுவாக அமைந்துள்ளது.

குறிப்பாக பாடசாலை பதின்ம வயது மாணவர்களுக்கான சூழல் மற்றும் சமூக இசைவாக்கம் தொடர்பான விழிப்பூட்டல் கருத் தரங்குகளை நடத்துதல், பாடசாலையின் விஞ்ஞான மன்றத்தின் ஊடாக வருடாந்தம் சஞ்சிகை ஒன்றை வெளியீடு செய்தல், நூலகம், கற்றல் வள நிலையம் ஆகியவற்றை வினைத்திறன் மிக்கதாக மாற்றுதல் போன்ற மீள் ஒழுங்குச் செயற்பாடுகளை மேற் கொண்டு வருகின்றது.

கல்லூரிக்கான செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றி வரும் மானிப்பாய் மகளிர் கல்லூரி மேலும் உயர்வடைந்து வர வேண்டும் என்பதே கல்லூரிச் சமூகத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வெவ்வேறு வாகன விபத்தில் இருவர் சாவு

கொழும்பு,ஏப்.9

குருநாகல் - புத்தளம் பிரதான வீதியில் லொறியொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். குருநாகலில் இருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த லொறியுடன் எதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் நேற்று அதிகாலை 5 மணிக்கு மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துனர் குருநாகல் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த நிலையில், மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து சென்றவர் குருநாகல் வைத்திய சாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

லொறியின் சாரதியை கைது செய்துள்ள குருநாகல் பொலிஸார் அவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளனர்.

இதேவேளை, மின்னேரியா, மட்டக்களப்பு - மரதன் கடவல பிரதான வீதியில் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு வாகனம் ஒன்று சைக்கிளுடன் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதோடு மற்றையவர் ஹிங்குராக்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காகப் பொலநறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மின்னேரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## கொட்டாஞ்சேனையில் தாலிக்கொடி அறுப்பு


கொழும்பு,ஏப்.9

கொழும்பு விவேகானந்தா மேட்டில் ஒரு பெண்ணின் ஐந்து பவுண் எடையுள்ள தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்களால் அபகரித்துச் செல்லப்பட்டதாக கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு, பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்ற தாயும் மகளும் விவேகானந்தா மேடு வழியாகத் திரும்பிக் கொண்டிருந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்ணிடமிருந்த தாலிக் கொடியை அறுத்துச் சென்றுள்ளதாகப் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் அடிக்கடி இதுபோன்ற கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கொட்டாஞ்சேனையில் வங்கியில் பணம் மீளப் பெற்றுக்கொண்டு சென்ற முதியவரிடம் 10 லட்சம் ரூபாவை வெள்ளை வானில் வந்த கொள்ளையர்கள் பறித்துச் சென்றிருந்த சம்பவமும் அண்மையில் நடைபெற்றுள்ளது. (ச)



முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயின் நான்காவது நினைவு தினத்தை முன்னிட்டு, நீர்கொழும்பு ஹீனடியன பொத்குல் விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தானம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## சட்டவிரோத செயல்களை தடுக்க நடவடிக்கை

கொழும்பு,ஏப்.9

களனி பிரதேசத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயல்களைத் தடுக்க விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் பொலிஸார் விசேட நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

பொலிஸார் நடத்திய தேடுதல் வேட்டைகளில் சூதாட்ட இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சூதாட்டத்தை நடத்திய நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

# 13ஆவது திருத்தம் குறித்த அரசின் நிலைப்பாடு என்ன?

### சஜித் பிரேமதாச எம்.பி கேள்வி



**13ஆம் திருத்தச் சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்துள்ளது. ஆனால் இதுவரை நிறைவேற்றப்பட்வில்லை.**

கொழும்பு,ஏப்.9

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் அல்லது அதற்கு அப்பாலான தீர்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதனை அரசு தெளிவாக விளக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

13 ஆம் திருத்தச் சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப் படும் என்று அரசு இந்தியாவுக்கு வாக்குறுதி அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசு எவ்வித முனைப்புக்களையும் வெளிப்படுத்தவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அரசின் இவ்வாறான நடவடிக்கைகளினால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் முரண்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ச)

# தொழிலாளர்களுக்கு தரமற்ற தேயிலை

### தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் விசனம்

கொழும்பு,ஏப்.9

தரமான தேயிலைத் தூளை உற்பத்தி செய்து வருகின்ற தோட்டத் தொழிலாளர்களுக்குத் தோட்ட நிர்வாகங்களால் தொடர்ந்து தரமற்ற தேயிலைத் தூளே வழங்கப்படுவதாகத் தோட்டத் தொழிலாளர் பிரதி நிதிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் கொட்டகலை மற்றும் பத்தனைப் பிரதேச தோட்டத் தலைவர்களுக்காக கொட்டகலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கூட்டமொன்றிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் தொழிலாளர் பிரதிநிதிகளின் கருத்துக்கள் குறித்தும் ஆராயப்பட்டன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்தம் தோட்ட நிர்வாகங்களினால் வழங்கப்படுகின்ற தேயிலைத் தூள் தரமற்றது. எதிர்காலத்தில் தரமான தேயிலைத் தூளினையும் அதன் நிறையையும் அதிகரிப்பதற்குத் தோட்ட நிரவாகங்கள் முன்வரவேண்டும் என்று தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தவிடயம் தொடர்பாகத் தோட்டக்கம்பனிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் மத்திய மாகாணசபை உறுப்பினர் சிங்பொன்னையா தெரிவித்தார். (ச)

# நம்பிக்கை இல்லாவிட்டால் கட்சியிலிருந்து விலகுவேன்

### மேர்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.9

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு தன்மீது நம்பிக்கை இல்லாவிட்டால் ஒரு நொடிப்பொழுதேனும் கட்சியில் இருக்கதான் விரும்பவில்லை என்று பொது மக்கள் தொடர்பு மற்றும் பொதுசன விவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை களனிப் பகுதியில் இடம் பெற்ற புதுவருட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குறித்து தான் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அண்மையில் ஜெனிவா சென்ற மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களின் கை, கால்களை உடைப்பேன் என்று மேர்வின் கருத்துத் தெரிவித்திருந்தமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்க கட்சி விசாரணை செய்து ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆணைக்குழு அறிக்கை குறித்து மக்களுக்கு தெளிவில்லையாம்

### கொழும்பு ஊடகம் தகவல்

கொழும்பு,ஏப்.9

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு போதியளவு தெளிவு இல்லை என்று கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் ஆணைக்குழு அறிக்கை தயாரிக்கப்பட்டது. எனினும் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் அம்பாறை போன்ற பிரதேசங்களில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

சாதாரண பொதுமக்கள் முதல் சிவில் செயல்பாட்டாளர்கள் வரையில் பலரிடம் ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

இதில் பெரும்பான்மையானவர்கள் நல்லிணக்க ஆணைக்குவின் இறுதி அறிக்கை பற்றியும், அதன் பரிந்துரைகள் பற்றியும் போதியளவு தெளிவின்றி காணப்படுகின்றமை தெரிய வந்துள்ளது.

ஆணைக்குழு அறிக்கையில் என்ன விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது பற்றி தமக்குத் தெரியாது என்று அம்பாறையைச் சேர்ந்த பலர் தெரிவித்துள்ளனர்.

தமது பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்க எவரும் முன்வருவதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ச)

# கோரிக்கை நிறைவேறாவிட்டால் எரிபொருள் போக்குரத்து நிறுத்தம்

### பவுஸர் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.9

எரிபொருள் கொண்டு செல்வதற்கான கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்ற தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் இன்றும், நாளையும் எரிபொருள் கொண்டு செல்லும் நடவடிக்கைகளை இடைநிறுத்தப்போவதாக இலங்கைத் தனியார் பெற்றோலிய பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.


எரிபொருள்களின் விலைகள் அண்மையில் அதிகரிக்கப்பட்டதையடுத்து. தமது கட்டணங்களை அதிகரிக்குமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தமது சங்கம் கோரிக்கை விடுத்ததாக இலங்கைத் தனியார் பெற்றோலிய பவுஸர் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் சாந்த சில்வா தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரிப்புக் காரணமாகப் போக்குவரத்துடன் தொடர்பான அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளன. எமக்குரிய கட்டணங்களை 35 சதவீதத்தால் அதிகரிக்குமாறு நாம் கோரினோம். இக் கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் இரண்டு நாள்களுக்குப் போக்குவரத்தை நிறுத்துவதற்கு எமது சங்கத்தின் நிறைவேற்றுக்குழு தீர்மானித்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரணி, இயற்றாலை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர்கள் செ.உதயகுமார் மங்கல விளக்கேற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தார். (ம-11)



நான்கு மில்லியன் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டத்தில் ''நாம் இன்று பயிரிடுவோம் நாளை பயன்பெறுவோம்'' என்னும் நிகழ்வு யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இதில் பாடசாலையின் உப அதிபர்கள், விவசாய ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (ம-14)



மல்லாகம் மக்கள் மன்றத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்ற சிறுவர் விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட சிறுவர்கள். (ம-14)



முல்லைத்தீவு மாவட்ட வற்றாப்பளை உதய சூரியன் முன்பள்ளி புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட போது பிரதம விருந்தினராக முல்லைத்தீவு விமானப் படைக் கட்டளைத் தளபதி பி.பி.எச். பின்னகொடவை முன்பள்ளி மாணவர்கள் மலர்மாலை அணிவித்து வரவேற்றனர். (ம-8)




கைதடி கலைமகள் வளர்மதி முன்பள்ளியின் விளையாட்டு விழா பெற்றோர் சங்கத் தலைவர் திருமதி ஜீ.சசிகலா தலைமையில் நடைபெற்றபோது விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் அ.சாந்தசீலன், கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுச் சங்கத் தலைவர் ப.செல்லத்துரை, தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி சு.தனபாலசிங்கம் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ம-288)



தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிகச் சஞ்சிகை நடத்திய வாசகர் போட்டியில் வெற்றியீட்டிய வாசகி ஒருவருக்கு பிரபல எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் பரிசில் வழங்குகிறார். (ம-8)



மீசாலை பொதுநூலகத்தில் அண்மையில் நடைபெற்ற முன்பள்ளி சிறுவர்களுக்கான கதை சொல்லும் நேரம் நிகழ்வில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் சிறுமி ஒருவருக்குப் பரிசில் வழங்குகிறார். இந்த நிகழ்வில் மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்துகொண்டனர். (ம-9)



அச்சுவேலி மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியின் போது பாடசாலை அதிபர் வி.அரசகேசரி, கோப்பாய் பிரதேச கல்வி அதிகாரி [illegible], பாடசாலையின் பழைய மாணவன் எஸ்.சந்திரலிங்கம் ஆகியோர் [illegible] கலந்துகொண்டனர். மாணவர்கள் அணிநடை மரியாதை செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவிப்பு இன்றி பூங்கா அமைக்க அனுமதி

### அக்கரைப்பற்று மாநகர சபை அமர்வில் தேசிய காங்கிரஸ் உறுப்பினர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஏப்.9

நெல்சிப் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட நிதியின் மூலம் அக்கரைப்பற்று மாநகர சபையால் 2 பூங்காக்கள் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா அமைப்பதற்கு கேள்வி அறிவிப்பு இல்லாது குறித்த ஒரு நபருக்கு ஒப்பந்தம் வழங்கியமையானது சட்டத்துக்கு முரணானதொரு செயற்பாடாகும் என்று மாநகர சபையின் தேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எல். தவம் குற்றம் சாட்டியுள்ளார்.

அக்கரைப்பற்று மாநகர சபையின் மாதாந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பூங்காவை அமைக்கும் வேலையை இங்குள்ள ஒருவர் பெற்றுள்ளார். விலைமனு அறிவிப்பு ஒன்றின் மூலமே இவ்வாறான வேலைகளை வழங்க வேண்டும். அவ்வாறானதொரு விலைமனுக் கோரப்பட்டமை தொடர்பிலோ, இந்த வேலையைக் கொடுத்தமை தொடர்பிலோ இந்தச் சபைக்கு அறிவிக்கப்படவில்லை. சபையின் அங்கீகாரம் பெறப்படவுமில்லை.

> மின்சாரம், கல்வி, நீர் பாசனம் என பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை நிறைவு செய்து கொடுத்த பின்னர் தான் பூங்காக்கள் அமைப்பது பற்றி யோசிக்க வேண்டும்.

வெளிப்படைத் தன்மையும், நல்லாட்சிக்கான பண்பும் அக்கரைப்பற்று மாநகர சபையின் நிர்வாகத்தில் எப்போதும் இருக்கும் என்று இந்தச் சபை பொறுப்பேற்கப்பட்ட நிகழ்வில் கூறப்பட்டது. ஆனால் 1 கோடியே 25 லட்சம் ரூபா பெறுமதியான பூங்கா அமைக்கும் வேலையானது திரை மறைவில் வழங்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாநகர சபையின் வெளிப்படைத் தன்மையும், நல்லாட்சியும் இவைகள் தானா? உலக வங்கியின் பணத்தை நெல்சிப் திட்டத்தினூடாகப் பெற்று அக்கரைப்பற்று மாநகர சபையினர் இந்த வேலைத் திட்டங்களைச் செய்கின்றனர். அக்கரைப்பற்று மக்களுக்கு இப்போதைய அவசர தேவை பூங்காக்கள் அல்ல.

மின்சாரம், கல்வி, நீர்ப் பாசனம் என பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை நிறைவு செய்து கொடுத்த பின்னர் தான் பூங்காக்கள் அமைப்பது பற்றி யோசிக்க வேண்டும்- என்றார். (ச)



அட்டாளைச்சேனை பிரதேச சபை நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மானிக்கப்பட்ட கடற்கரை வீதியை அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் ஏ.எல். எம்.நஸீர் மற்றும் உதவி தவிசாளர் எம்.ஏ.அன்ஸீல் ஆகியோர் இணைந்து திறந்துவைக்கின்றனர். (31)

# டிக்கோயாவில் கடும் மழை; வெள்ளத்தால் பயிர்கள் சேதம்

டிக்கோயா,ஏப்.9

டிக்கோயா பிரதேசத்திலுள்ள சாஞ்சிமலை, மேற்பிரிவு தோட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையால் விவசாயப் பயிர் நிலங்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

கடும் மழையால் ஆறு பெருக்கெடுத்துள்ளது. இதனால் வெள்ள நீர் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகளுக்கு 20 லட்சத்துக்கும் அதிகமாக நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாதிப்புக் குறித்து அம்பகமுவ பிரதேச செயலர் பிரிவுக்கும் நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று சேத விவரங்களை ஆராய்ந்துள்ளனர்.

சாஞ்சிமலைப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் குடிதண்ணீர் குழாய்களும் சேதத்துக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

**தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்**

(எழுத்தாளர், ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (10.04.2012) செவ்வாய்க் கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் பொலிகண்டி இல்லத்தில் நடை பெற்று கந்தவனம் சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து அன்னாரின் ஆத்ம சாந்திவேண்டி நடைபெறும் வீட்டுக்கிருத் திய நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொத்தன்தறை
பொலிகண்டி கிழக்கு.

**குடும்பத்தினர்**


# துப்பாக்கிகளுடன் மூவர் கைது

அங்கும்புற,ஏப்.9

அங்கும்புற - அலவத்த சந்தியில் கைத் துப்பாக்கிகளுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அங்கும்புற பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் இரண்டு மற்றும் அதற்கான ரவைகள் 10 என்பனவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து அங்கும்புற பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# தோட்டப் பகுதிகளில் புற்றுநோய்

நுவரெலியா,ஏப்.9

மலைநாட்டு தோட்டப் பிரதேசங்களில் அதிகளவில் புற்றுநோய் பரவி வருவதாக நாவலப்பிட்டி மாவட்ட மத்திய மருத்துவமனையின் ஆலோசகர் ட்பிள்யூ. பீ.ஜயவிக்கிரம தெரிவித்தார்.

இந்தப் பிரதேசங்களில் உள்ள மக்களிடம் தொண்டைநாளம் மற்றும் இரைப்பை புற்றுநோய் காணப்படுகின்றன என்று அவர் கூறினார்.

இந்த நிலைப்பாட்டுக்கு மனிதர்களின் முறையற்ற செயற்பாடுகளே காரணம் என்றும் மருத்துவ நிபுணர் சுட்டிக் காட்டுகிறார்.

நாவலப்பிட்டி மாவட்டம் மருத்துவமனைக்கு மாதம் ஒன்றுக்கு இருபதுக்கு மேற்பட்ட மக்கள் சிகிச்சைக்கு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

வெற்றிலை போடுதல், போதைவஸ்து பொருள்களைப் பாவிப்பது போன்றவற்றால் தோட்டப் பகுதித் தொழிலாளர்கள் இந்தப் புற்றுநோய்க்கு உட்படுகின்றனர் என்றும் இந்தப் புற்றுநோய்த் தாக்கத்துக்கு குறைவான போஷாக்கும் காரணம் என்றும் அவர் கூறினார்.

மலையக மக்கள் இன்னமும் பாரம்பரிய வைத்தியமுறைகளையே தொடர்ந்தும் நம்பியிருப்பதால் புற்றுநோய் தொடர்பான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முன்வருவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ச-22)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



உதயம்
15★03★1921

அஸ்தமனம்
10★03★2012

**கணபதிப்பிள்ளை இராசலட்சுமி**

அம்மா என்றழைக்க அன்புடனே எமை அரவணைத்தீர்!
மாமி என்றழைக்க அன்புமொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்தீர்!
அம்மம்மா என்றழைக்க இனியில்லை இப்பிறவியில்!
பேர்த்திகள் கேட்பதனை வகைவகையாய் செய்தளிப்பீர்!
பாட்டியைக்காணாது தேடுகின்றனர் பிஞ்சுப்பாலகர் அறை அறையாய்
எத்தனை உறவுகள் இருந்தாலும் ஈடாகுமோ உங்கள் அன்பிற்கு!
உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல சங்கரத்தை
பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள்
திருப்பாதங்களை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் நினைவுகளை நெஞ்சில் சுமக்கும்
மக்கள், மருமக்கள், பூட்டர், பேரப்பிள்ளைகள்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

(45.6.7)



## ஏழாம் ஆண்டு நினைவலைகள்



**ஞானசேகரம் ஜயந்தன்**

மலர்வு
16★07★1981

உதிர்வு
09★04★2005

எம் இரத்தத்தின் இரத்தமே!
நீர் எம்மை விட்டு சென்றாலும்
உந்தன் நினைவுகளை
எங்கள் உறக்கத்திலும்
மறக்க முடியாது.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா,
ஜயந்தினி, நிஷாந்தினி.

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர்.



## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்
## 22 ஆம் நினைவு தினம் ஏப்ரல் - 09.2012

மலர்வு
18 ★ 06 ★ 1918



உதிர்வு
09 ★ 04 ★ 1990

**உ. வில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா**

(முன்னாள் அதிபர்- செயலாளர் - நவாலிதிருச்சபை, ஞாயிறுபாடசாலை, முன்னைநாள் அதிபர் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, முன்னைநாள் தலைவர் - மானிப்பாய் மற்றும் நவாலி YMCA)

இயேசு சொன்னார் : 'உயிர்த்தெழச் செய்பவரும் வாழ்வு தருபவரும் நானே என்னிடம் நம்பிக்கை வைப்பவர் இறப்பினும் வாழ்வார்' - (பரி - யோவான் 11: 25)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், மைத்துனர்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

யாழ்வீதி, மானிப்பாய்.

(18425)(45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதக் கலவரத்தை ஏற்படுத்தவே உருவச்சிலைகள் உடைப்பு

### பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.9

மதங்களுக்கு இடையில் குழப்பத்தை ஏற்படுத்தவே தீய சக்திகள் மட்டக்களப்பிலுள்ள உருவச்சிலைகளை உடைத்துள்ளனர். இந்தச் சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்படல் வேண்டும் என்று சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு நகர் மத்தியில் இந்த உருவச்சிலைகள் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளன. இது ஒரு வேண்டத்தகாத செயலாகும். இதைச் செய்தவர்களை பாதுகாப்புத் தரப்பினர் கண்டுபிடித்து அவர்களை சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும்.

கடந்த மாதம் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலையினுள் திடீரென வைக்கப்பட்ட சரஸ்வதியின் உருவச்சிலையினால் குழப்ப நிலையும் முரண்பாடும் ஏற்பட்டது. அந்தப் பாடசாலையில் நடைபெற்ற கட்டட திறப்பு விழாவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்து கொள்ள இருந்த போது இந்தச் சிலை அந்தப் பாடசாலையில் வைக்கப்பட்டது.

கிறிஸ்தவ மிஸனறியின்

> சேதப்படுத்தப்பட்டுள்ள அனைத்து உருவச்சிலைகளுமே நீண்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்டன.

பாடசாலை என்பதால் இந்தப் பாடசாலையிலிருந்து சரஸ்வதியின் உருவச்சிலையை அகற்ற வேண்டும் என்று கிறிஸ்தவ மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபையினர் தெரிவித்தனர்.

இவ்வாறான நாசகார வேலைகளை சந்தர்ப்பமாக சிலர் பயன்படுத்த முனைகின்றனர். மட்டக்களப்பு நகரின் மத்தியில் நாற்பது வருடங்களுக்கு மேலாக மகாத்மா காந்தியின் உருவச்சிலை இருந்து வருகின்றது. அதேபோன்று சேதப்படுத்தப்பட்டுள்ள அனைத்து உருவச்சிலைகளுமே நீண்ட வரலாற்றுப்பின்னணிகளைக் கொண்ட பெரியோர்களின் உருவச்சிலைகளாகும்.

மகாத்மா காந்தி அனைத்து சமூகங்களினாலும் சமயங்களாலும் மதிக்கப் படும் மனிதராவார். இவரின் உருவச்சிலை உட்பட ஏனையவர்களின் உருவச்சிலைகளை உடைத்து சேதப்படுத்தப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்-என்றார்.

# கரும்புச் செய்கைக்கு விவசாயிகள் எதிர்ப்பு

### இறக்காமத்தில் ஆர்ப்பாட்டம்



எருவில், ஏப்.9

இறக்காமத்திலுள்ள வெள்ளங்காடு, வாழக்கால் விவசாய நிலங்களில் கரும்புச் செய்கையை மேற்கொள்ளுமாறு அம்பாறை மாவட்ட அரச அதிபர் விடுத்த உத்தரவை அடுத்து இறக்காமம் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் விவசாயிகள் மேலும் தெரிவித்ததாவது:-

இறக்காமம் பிரதேசத்திலுள்ள கரும்புக் காணிகளில் கடந்த 16 வருடங்களாக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளோம். தற்போது கரும்புச் செய்கையை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசங்களில் 1996ஆம் ஆண்டுக்கு முன்னர் கரும்புச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்ட போதிலும் அவர்கள் நஷ்டத்தையே எதிர்நோக்குகின்றனர்.

1996ஆம் ஆண்டின் பின்னர் ஹிங்குரானை சீனித் தொழிற்சாலை ஒழுங்காக இயங்காத காரணத்தினால் விவசாயிகள் தமது காணிகளில் நெற்செய்கையில் ஈடுபட்டார்கள்.

அதிக செலவில் கரும்புச் செய்கைக்கு பயன்படுத்திய எமது காணிகளை விவசாயத்துக்கு ஏற்றவாறு மாற்றி அமைத்தோம். தற்போது ஹிங்குரானை சீனித் தொழிற்சாலையை தனியார் நிறுவனம் ஒன்று பொறுப்பேற்றுள்ளதை அடுத்து இந்தக் காணிகளில் கரும்புச் செய்கையை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நாங்கள் கரும்புச் செய்கையில் ஈடுபட வேண்டுமாக இருந்தால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிறந்த கரும்பு நாற்றுக்கள் வழங்கப்பட வேண்டும்.

ஒரு தொன் கரும்புக்கு 5000ரூபா வழங்க வேண்டும். நஷ்டம் ஏற்படும் போது அதற்கான பொறுப்பை அரச அதிபர் ஏற்க வேண்டும். யானைகளின் தொல்லை இருப்பதனால் காப்புறுதி வழங் கப்பட வேண்டும். மாதாந்த சம்பளமாக 15 ஆயிரம் ரூபா வழங்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் கரும்புச் செய்கையில் ஈடுபடுவோம். இல்லையாயின் விவசாயச் செய்கையில் ஈடுபடுவோம்- என்றனர். (ச-31)

## மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு திறப்பு

நுவரெலியா,ஏப்.9

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஹேரந்தன ஹேமரத்ன தெரிவித்தார்.

மேல் கொத்மலைப் பிரதேசத்தில் பெய்த அடை மழையினால் மேல்கொத்மலை நீர்த் தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்ததை அடுத்தே வான் கதவு திறக்கப்பட்டது.

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான் கதவு திறக்கப்பட்டுள்ளதால் சென்கிளயார் தோட்டத்தை அண்மித்த மக்கள் அவதானமாக செயற்படுமாறு நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## நீர் தடை அணைக்கட்டு திறப்பு

மட்டக்களப்பு,ஏப்.9

கிழக்கு மாகாண நீர்ப்பாசன அமைச்சின் 36 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அட்டாளைச்சேனை மர்குளம் விவசாய பிரதேசத்தில் கட்டப்பட்ட நீர் தடை அணைக்கட்டு திறந்து வைக்கப்பட்டது. 350 ஏக்கர் விவசாயக் காணிகளின் பிரச்சினைகளுக்கு இந்த அணைக்கட்டின் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 ★ 04 ★ 1932

மறைவு 01 ★ 04 ★ 2010



### அமரர் சின்னத்தம்பி பாலசிங்கம்

திதி : திருதியை 09.04. 2012

மாறாத உங்கள் அன்பும்
மறக்காத நினைவுகளும் - எமைச்
சீராக்கி வைத்த
சிறப்புகளும் நினைந்துருகி
நீரால் விழி நனைய
நெஞ்சம் துயர் சுமக்க
ஆறாக்கவலை இன்னும்
ஆறாது நிற்கின்றோம்.
தங்கள் ஆத்ம சாந்தி வேண்டி எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றோம்.

36/11, பீ.ஏ.தம்பிலேன்,
வண்ணார்பண்ணை

குடும்பத்தினர்

(16603)(45.6.7)




அதிகூடிய பணத்தைப் பெற்று வருடப்பிறப்பை கொண்டாடுங்கள்

இப்புதுவருடப்பிறப்பு காலத்தில் மணிகிராம் ஊடாக பணத்தை பெறும் அனைவருக்கும் கொமர்ஷல் வங்கியில் பெறுமதிமிக்க பரிசில்.

ஏப்ரல் 01ம் திகதி தொடக்கம் 13ம் திகதி வரை

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

MoneyGram. Money Transfer

COMMERCIAL BANK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

### விளையாட்டு விழா

தென்மராட்சி, ஏப்.9

இலங்கை அமெரிக்கன் மிஷன் திருச்சபையின் சாவகச்சேரி தூய தோமஸ் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரச பைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை கலந்து கொள்வார்.(வ-9)

# தென் சீனக் கடல் பகுதி சீனாவுக்கு மட்டுமானதல்ல

## பீஜிங்கின் எச்சரிக்கைக்கு இந்தியா 'சூடு'

டில்லி, ஏப்.9

தென் சீனக் கடல் பகுதி சீனாவுக்கு மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்துக்குமே சொந்தமானது என்று இந்தியா சீனாவுக்கு பதிலடி கொடுத்துள்ளது.

தென் சீனக் கடல் பகுதி தங்களுக்குச் சொந்தமானது என்றும் அந்தப் பகுதியில் இந்தியா ஆய்வு மேற் கொள்ளக் கூடாது என்றும் சீனா இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் தென் சீனக் கடல் பகுதிக்கு, மலேசியா, தைவான், புருனே, வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன.

இந்த நிலையில் சீனா, தனக்கு மட்டுமே என்று சொல்லி சூளுரைத்து வருவது ஏனைய நாடுகளிடையே சீனா வெறுப்பை சம்பாதிப்பதற்கு வழிவகுக்கும்.

**தென் சீனக் கடல் பகுதி தங்களுக்குச் சொந்த மானது என்றும் அந்தப் பகுதியில் இந்தியா ஆய்வு மேற் கொள் ளக் கூடாது என்றும் சீனா இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.**

கம்போடியாவில் நடைபெற்ற ஆசியான் உச்சி மாநாட்டில் தென் சீனக்கடல் பகுதி குறித்து விவாதிக்கப்பட்டது. அப்போது இந்தியா, அந்தக்கடல் பகுதியில் கச்சா எண்ணெய் குறித்து ஆய்வு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டும் சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போது இது குறித்த எதிர்ப்புக்கு இந்தியா பதிலடி கொடுத்துள்ளது. இந்திய வெளி விவகாரத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, தென் சீனக் கடல் பகுதி என்பது உலக நாடுகள் அனைத்துக்கும் சொந்தமானது என்று தெரிவித்தார்.

வர்த்தக வழித்தடமான அந்தப் பகுதியில் எந்த நாட்டின்(சீனா) தலையீடும் இருக்கக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். (வ)

# பாடசாலைகளுக்கு இடையிலான புதிர்ப்போட்டி நாளை

அச்சுவேலி, ஏப்.9

வடக்கு மாகாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான புதிர்ப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்கள் இடையேயும் தரம் 10-11, தரம் 12-13 மாணவர்கள் மத்தியில் நடைபெற்ற தெரிவுப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகள் கல்வி வலய ரீதியாக இறுதிப் போட்டியில் கலந்து கொள்கின்றன.

தரம் 10-11 மாணவர் பிரிவுக்கான புதிர்ப் போட்டியில் வவுனியா தெற்கு வலயம், யாழ்ப்பாண வலயம், வலிகாமம் வலயம், தென்மராட்சி வலயம் நான்கும் கலந்து கொள்கின்றன.

தரம் 12-13 மாணவர் பிரிவுக்கான புதிர்ப் போட்டியில் யாழ்ப்பாண வலயம், வவுனியா தெற்கு வலயம், வலிகாமம் வலயம், வடமராட்சி வலயம் ஆகிய நான்கும் கலந்து கொள்கின்றன.(வ-11)

# கத்தரிக்காய் கறியில் தங்க மோதிரம்

தென்மராட்சி, ஏப்.9

புதுவீட்டுச் சாப்பாடு அருந்திய பெண்ணுக்கு போடப்பட்ட கத்தரிக்காய் கறிக்குள்ளிருந்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க மோதிரம் கிடைத்தது. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை வரணியில் இடம்பெற்றது.

புதுமனை புகுவிழா நிகழ்வுக்குச் சென்றோருக்கு சாப்பாடு பரிமாறிக்கொண்டிருந்த வேளையிலேயே கத்தரிக்காய் கறிக்குள்ளிலிருந்து தங்கமோதிரம் பெறப்பட்டது.

தங்க மோதிரம் கிடைத்த தகவலை அருகில் இருந்து உணவருந்தியவர்களுக்கு தெரிவித்த அதேசமயத்தில் கத்தரிக்காய் கழுவிக் கொடுத்தவர் அலறியடித்தவாறு மோத்திரத்தைத் தேடி பரபரத்துக்கொண்டிருந்தார். அவரிடம் அந்த மோதிரம் கொடுக்கப்பட்டது. பதற்றம் அடைந்திருந்த அவர் மகிழ்வுடன் பெற்றுக்கொண்டார். (வ-9)

# பளை நகர்ப் பகுதியில் வேகத்தடை குறியீடுகளை வைக்கக் கோரிக்கை

பளை, ஏப்.9

வாகனங்களின் போக்குவரத்து அதிகரித்துள்ளதையடுத்து பளை நகர்ப் பகுதியில் வேகத்தடை குறியீடுகளை வைக்குமாறு பச்சிலைப்பள்ளி பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளைக்கோரியுள்ளனர்

ஏ-9 வீதி அகலிப்பு திட்டத்தில் பளை நகர்ப் பகுதியில் வீதி புனரமைக்கப்பட்டு காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது. அதையடுத்து வாகனங்கள் பறக்கின்றன. இதனால் எந்த நேரத்திலும் விபத்து ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

இதைக்கருத்திற் கொண்டே இந்தக் கோரிக்கையை மக்கள் முன் வைத்துள்ளனர்.

பளை நகர்ப் பகுதியில் வர்த்தக நிலையங்களுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, நகர்ப் பகுதியில் அரச திணைக்கள அலுவலகங்கள், மத்திய கல்லூரி போன்றவை அமைந்துள்ளன.

ஆதலால் பளை வைத்தியசாலையிலிருந்து பழைய சாராயத் தவறணை வரையிலான ஏ-9 வீதியை வேகக் கட்டுப்பாட்டு வீதியாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பளை பிரதேச செயலர், பளை பிரதேச சபைத் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர், பளை நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோரைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

MMBL Money Master
Company Regidtration No: P.V 986

வன்னி மக்களுக்கான வெளிநாட்டு பணப்பரிமாற்ற சேவ்வை வன்னி மண்ணில்......

WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

வேகமாகவும் | இலகுவாகவும் | பாதுகாப்பாகவும்

வெஸ்டர்ன் யூனியன் மூலம் உலகெங்கும் இருந்து அனுப்பும் பணத்தினை ஒருசில நிமிடங்களில் கோபி ஏஜென்சியில் பெற்றுக்கொள்ளலாம்.

வெஸ்டர்ன் யூனியனால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமானது புதுக்குடியிருப்பு மற்றும் அதனை அண்மித்த பகுதி மக்களுக்காக!

கோபி ஏஜென்சி
பரந்தன் வீதி, புதுக்குடியிருப்பு சந்தி, புதுக்குடியிருப்பு

- பல வருடங்களாக வெஸ்டர்ன் யூனியன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பணப்பரிமாற்ற சேவையினை வழங்கி வருகின்றோம்.
- வெளிநாட்டிலிருந்து 10 இலக்கங்கள் கிடைத்த உடனேயே கோபி ஏஜென்சியை நாடுங்கள்
- ஒரு சில நிமிடங்களில் பணத்தினைப் பெற்று வீடு செல்லலாம்
- விடுமுறை நாள்களிலும் திறந்திருக்கும் (ஞாயிறு தவிர்ந்த)

நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்: 024 3248979, 0777 - 343300

அலுவலக நேரம்: திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை

தலைமைக்காரியாலயம்:
கோபி ஏஜென்சி,
33, மில் வீதி, வவுனியா. 024 2225888/024 2222411

வெஸ்டர்ன் யூனியனின் பிரதான முகவர் MMBL மணி டிரான்ஸ்பர்
பிரைவேட் லிமிடட் 7ஆம் மாடி ஏட்கென் ஸ்பென்ஸ் டவர் - II
இல.315, வொக்சோல் வீதி, கொழும்பு - 02 உடனடி அழைப்பிற்கு - 011 5529999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் பிரச்சினை...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று சம்பவங்கள் பற்றி மட்டுமே மேல் விசாரணைக்கு அது பரிந்துரைத்துள்ளது. இது நிபுணர் குழுவின் அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஏராளமான குற்றச்சாட்டுகளுக்குப் பெரும் முரண்பாட்டை கொண்டிருக்கிறது. அத்துடன் 2009 ஆம் ஆண்டு ராஜாங்க அமைச்சால் காங்கிரஸ் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொது மக்கள் தாக்கப்பட்ட 208 சம்பவங்களுக்கும் முரண்பாடாகக் காணப்படுகிறது. இலங்கை அரசு பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக 'பூஜ்ய' நிலைப்பாடு ஒன்றைக் கொள் கையாக வெளிப்படுத்தியிருப்பதுடன் போரின் இடையில் சிக்கியே பொதுமக்கள் மரணம் அடைந் ததாகவும் கூறுகின்றது. ஆனால் நிபுணர் குழு அறிக் கையானது போரின் கடைசிக் காலத்தில் 10 ஆயிரத் திலிருந்து 40 ஆயிரம் பேர் வரை பொது மக்கள் கொல்லப்பட்டதாக கணிக்கப்பட்டுள்ளது.

மேற்கொண்டும் புலன் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்பதை மேலும் வலி யுறுத்துகின்றது. இந்த வாரம் வாஷிங்டனில் நிகழ்ந்த சம்பவங்களின்படி பார்த்தால் இலங்கை தொடர்பான விவகாரம் இப்போதைக்கு மறைந்து போகாது. அது தொடரவே செய்யும் என்று தோன்றுகின்றது. அரசு பிரச்சினைகளை விரிவாக ஆராய்ந்து எதிர் கொள்ளப் புதிய நிலைப்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

**உள்வீட்டு குத்துவெட்டுக்கள்**

வெளியுறவு அமைச்சக்குள் உள்வீட்டு குத்து வெட்டுக்கள் இடம்பெற்று வருவது இப் பொழுது பகிரங்கமாகியுள்ளது. ஜெனிவாவில் அமைச்சர்கள் பீரிஸும் சமரசிங்கவும் ஒருவருக் கொருவர் இரகசியக் குத்துவெட்டுகளில் இறங்கியிருந்த அதேவேளை அதிகாரிகளும் சிண்டுபிடிகளில் இறங்கியிருந்ததாகக் கூறப்படுகின்றது. நாய்ச்சண்டை, பூனைச்சண்டைகளுக்கு குறைவிருக்கவில்லையாம். பலம் வாய்ந்த அமெரிக்க நாட்டினால் கொண்டு வரப்பட்டிருந்த தீர்மானத்தை முறியடிக்க வேண்டியிருந்த நிலையில் தான் இவை அனைத்தும் நடந்துள்ளன.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற குழுவின் தலைவரும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினருமான நாஸ்பி பிரபுவின் இலங்கை வருகையால் இலங்கை சற்று மகிழ்ச்சியடைந்திருக்கலாம். நாஸ்பி பிரபு நீண்டகால இலங்கையின் நண்பர் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுற்றதின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்திருந்தார். நல்லிணக்கம் மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் குறித்து அவர் திருப்தி தெரிவித்திருந்தார். போர் மோதல்கள் முடிவுறுவதற்கு முன்னர் அவர் இலங்கைக்கு வந்திருந்தார். இந்த முறை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பூநகரி ஆகிய இடங்களுக்கும் சென்றிருந்தார். நிலைமைகளை அவரே நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டார்.

பிரிட்டிஷ் திரும்பிய பின் தமது பயணம் தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சுக்கு வழங்குவார் என்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் பரப்புவார் என்றும் கூறியுள்ளார். போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் மரணங்கள் தொடர்பாகப் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையைத் தம்மால் மறுதலிக்கக் கூடுமாகவிருக்கும் என்பதில் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார். மரணமானவர்களின் எண்ணிக்கை மிகச் சிறியதாகவே இருக்கும் என்றும் அவர் கருதியுள்ளார்.

ஆனால், எல்.எல்.ஆர்.சி. அறிக்கையை செயற்படுத்துவதில் இலங்கை அரசு கவனம் எடுக்க வேண்டும் என்பதை அவர் தெரிவிக்க மறக்க வில்லை. ஜெனிவாத் தீர்மானம் நிறைவேறியுள்ள நிலையில் குறிப்பாக அரசு இதில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போது 13 ஆவது திருத்தத்தைச் செயற்படுத்துவது பற்றி நாஸ்பி பிரபு அவரிடம் கேட்டார். 13 ஆவது திருத்தத்தின் எந்தப் பகுதி செயல்படுத்தப் படலாம் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் பொறுப்பில் தாம் விட்டு விட்டதாக ராஜபக்ஷ அவரிடம் கூறியுள்ளார். நாஸ்பி பிரபு மிக நாசுக்காக "எங்கள் நாட்டில் எதையாவது பிற்போட வேண்டுமானால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் விட்டுவிடுவோம்" என்றார். அதற்கு ராஜபக்ஷ பெரிதாகச் சிரித்து விட்டு "இல்லை, இல்லை நான் அப்படிச் செய்ய மாட்டேன்" என்று கூறினார். ✱

# ஹரியட் உவின்ஸ்லோ அம்மையார்

ஷிராணி மில்ஸ்

## உடுவிலின் முதலாவது அதிபர்

உவின்ஸ்லோ அம்மையார் உடுவில் மகளிர் கல்லூரியின் முதலாவது அதிபர். 1819 ஆம் ஆண்டு எம் மத்தியில் வந்திறங்கிய மிஷனரிமாரில் இருவரே உவின்ஸ்லோ தம்பதிகளாவர்.

ஹரியட் உவின்ஸ்லோ அம்மையார் அமெரிக்காவிலுள்ள கொனடிக்கட் என்னும் இடத்தைச் சேர்ந்தவர். மதிப்புக்குரிய குடும்பத்தைச் சார்ந்தவர்; தனது கணவரோடு, தெல்லிப்பழையில் தமது ஊழியத்தைத் தொடங்கி பின் 1822 இல் வேறோர் இடத்தில் வந்து வசித்து வேலை செய்ய ஏவப்பட்டார்.

இந்த நோக்கத்துடன் அவர்கள் ஓர் அழகிய ஏப்ரல்மாத காலைப்பொழுதில் தமது வண்டியில் பிரயாணத்தைத் தெல்லிப்பழையினின்றும் தொடங்கினர். வண்டி மெதுவாக உடுவில் வந்து அடைந்தது. தற்செயலாக அவர்கள் கண் முன் இந்தப் பாழடைந்த வீடு காணப்பட்டது. உடனே இங்கேயே தமது ஊழியத்தைச் செய்யத் தீர்மானித்தனர்.

இந்த நிலையில் பாழடைந்து கிடந்த கட்டடமே ஹரியட் உவின்ஸ்லோ அம்மையாரின் ஒல்லாந்த பிரான்சிஸ்கன் குருமாருடைய கைவிடப்பட்ட குருமனையாகும். தற்போது ஓர் அழகிய பூந்தோட்டத்தைக் கொண்டதும் எமது பாடசாலையின் பெருமைக்குரியதுமான கல்லூரி (mission house) இன் தொடக்கம் இதுவேயாகும்.

நீளமான கறுப்பு coat ஐயும், வெள்ளை நிறமான shirt ஐயும் அணிந்த உயரமான தோற்றமுடையோர் வணக்கத்துக்குரிய மைரன் உவின் ஸ்லோ, பல மிஷனரிகளால் புரட்டப்பட்டு, பாவனை பண்ணப்பட்ட ஆங்கில - தமிழ் அகராதியை எழுதியவர் இவரே.

கறுத்த முடியுடைய, சாந்தமான முகச்சாயலையும், மெல்லிய உடலமைப்பையும் கொண்டவர் உவின்ஸ்லோ அம்மையாராவார்.

உவின்ஸ்லோ அம்மையார் பெண்பிள்ளைகளைப் படிப்பிக்க mis-sion house இற்கு அவர்களை அனுப்பும்படி உடுவிலிலுள்ள பெற்றோரிடம் கெஞ் சிக் கேட்டார். முதலில் மறுத்த பெற்றோர் இவர்கள் மேலும் வருந்திக் கேட் கவே 'நீங்கள் எங்கள் பெண் பிள்ளையைத் தனியே திரும்பி வீட்டே அனுப்பாமலும், அவர்களுக்குப் பசிக்கும் போது நீங்கள் உண்ணும் இறைச்சியை அல்ல, பழத்தைக் கொடுத் தீர்களானால் எனது மகளை நான் அனுப்புவேன்' என்றாராம் ஓர் தகப்பன்.



நாளடைவில் ஹரியட் அம்மையாருடைய அன்பான வார்த்தைகளும், நேர்மையான நோக்கங்களும் மக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இவர்களிடம் நம்பிக்கை வைக்க ஏவிற்று. காலப்போக்கில் 3 பிள்ளைகள் தமது உணவை இம்மிஷனரிமாருடனேயே எடுக்கவுந் தொடங்கினர். இது ஓர் பெரிய மாற்றம்.

இவ்வாறு சிறிது சிறிதாக பெண்கள் இங்கு வந்து சேரவே, 1823 இல் இங்கு பாடசாலையைத் தொடக்கத் தீர்மானித்தது அமெரிக்கன் மிஷன் சங்கம். இவர்களின் அனுமதி கிடைத்து விடை வரவே உவின்ஸ்லோ அம்மையார் ஆனந்தம் அடைந்தார். 1825 இல் திருமதி உவின்ஸ்லோ சுகவீனங் காரணமாகத் தமது கணவருடன் கல்கத்தாவுக்குச் சென்று தங்கவேண்டியிருந்தது. 1828 இல் அவர் மறுபடியும் தமது பாடசாலையைப் பொறுப்பேற்றார்.

1833 இல் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தார். உடுவில் தேவாலயத்தில் அடக்கம் பண்ணப்பட்டார். உடுவிலை மலரச்செய்த பெண்மணி இவர்; உடுவிலை உயரச்செய்த அம்மையார் இவர். காலங்கள் கடந்தாலும் எத்தனை நூற்றாண்டுகள் புரண்டோடினாலும் ஹரியட் உவின்ஸ்லோ அம்மையார் உடுவிலோடு பின்னிப் பிணைக்கப்பட்டவராய்த் திகழ்வார்.


ஜெய் குருதேவ்



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்ஜி
அவர்களின்
வாழும்கலை பயிற்சி
மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம்,
யோகா, தியானம், சுதர்சன கிரியா
அறிமுக உரை 09. 04.2012
மாலை 5மணிக்கு

இடம்: மகேஸ்வரன் மணி மண்டபம் (நல்லூர்)
பயிற்சி: 09.04. 2012 - 15.04.2012
காலம்: காலை 6.00 - 08.30, 10.00 - 12.30
மாலை 2.00 - 04.30, 05.00 - 07.30
முற்பதிவு அவசியம்
077 0474 757
077 7740 593


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



பிறப்பு
08★ 11★ 1939

இறப்பு
10★ 03★ 2012

கடந்த சனிக்கிழமை (10.03.2012) இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

**சின்னத்துரை ஈஸ்வரி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (09.04.2012) திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் கொடிக்காடு மருத மரத்தடியிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகளும் நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந் நிகழ்வுகளுக்கு வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

:- சி.தவேந்திரன் (இ.போ.ச பருத்தித்துறைசாலை),
சி.கோகுலநாதன் (யா/இணையானை அ.த.க.வித்தியாலயம்),
சி.தேவேந்திரன் - பிரான்ஸ் (தேவா ஸ்ரூடியோ),
மருமகள்கள்:- த.இராஜேஸ்வரி, கோ.யோகமலர்,
பேரப்பிள்ளைகள்.

போதராமடம்,
துன்னாலை.வடக்கு,
கரவெட்டி. (12736) (2-6-7)

## தவறிவிட்டது

கல்வயல், 1 ஆம் கட்டை, சாவகச்சேரியைச் சேர்ந்த தில்லைநாதன் சுகந்தன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (No. 741952548V) வாகன அனுமதிப்பத்திரம் என்பவை நுணாவிலுக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "நியூசிவாசினி பான்சி", கண்டி வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 3614 590


பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாக மாற்றும்
சிறுவர்களுக்கான கொம்ப்யூட்டர் பயிற்சி



- Junior Diploma in Computer Science
- Junior Dip. in Computer Programming
- Junior Diploma in Graphics & Animation
- Junior Diploma in Digital Creativity
- Diploma in Digital Pre Press
- Diploma in Cartoon Animation

இப்பயிற்சியின் சிறப்பம்சங்கள்
- 7 வயது முதல் 14 வயதுள்ள சிறுவர்கள் மேற்குறிப்பிட்ட பயிற்சிகளில் இணைந்து கொள்ளலாம்
- கணனி உலகில் தடம்பதிக்க இதுவே சரியான தருணம்
- குழந்தைகளின் கணனி அறிவையும், கலை உணர்வையும் கொம்ப்யூட்டரில் வெளிப்படுத்தும் கிராபிக்ஸ் கோர்ஸ்
- கொம்ப்யூட்டரில் ஓவியம் வரைதல், வண்ணங்களை அளித்து அசைய வைத்தல் ஆகியன கற்கலாம்
- ஒலி-ஒளி ஸ்பெஷல் எபெட்ஸம் கற்றுக்கொள்ளலாம்
- சிறு வயதிலேயே கிராபிக்ஸ் அறிவை ஊட்டி வருங்காலத்தில் பெரிய வல்லுனராக்கலாம்

Admissions are in progress - Register Now

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
9, குமார வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம் T.P-021 2229191


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

அன்னைமடி
28★05★ 1965

ஆண்டவன் அடி
08★03★ 2012



**சூசைப்பிள்ளை அகஸ்ரின்**

(அதிபர்- கிளி/ கிளாலி றோ.க.த.க. பாடசாலை)

"கல்லறையில் உன்னை வைத்து
கண்ணீரால் மூடிவிட்டோம்"

நீங்காத நினைவுகளால் நிதமும் கண்ணீரில் நாம்......
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (09.04.2012) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கோட்டுக்கொள்கின்றோம்.

இவரின் பிரிவால்துயருறும்
மனைவி, பிள்ளைகள்.
077 620 4537

கண்டி வீதி,
மிருசுவில்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



செல்வி கந்தசாமி யோகராணி
(ஆசிரியை - B.A.Dip. In Education)

தோற்றம்
20★ 03★ 1969

மறைவு
10★ 03★ 2012

என்றும் எம்மை அன்புடனும் பண்புடனும்
அரவணைக்கும் புதல்வியே! உங்கள் இனிய
முகத்தைக் காண ஏங்கித் துடிக்கின்றோம்.

கடந்த (10.03.2012) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் செல்வி கந்தசாமி யோகராணி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (09. 04.2012) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 6 மணியளவில் இடம்பெற்று மதியம் 11.30 மணியளவில் சபிண்டீகரணக் கிரியையும் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

யோக வாசா
கரவெட்டி வடக்கு, கரவெட்டி. (சி:737) (45-6-7) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டார் இளைஞன்

தென்மராட்சி, ஏப்.9

தொலைத் தொடர்பு கம்பிகள்பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டதில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது.

புத்தளகம, அம்பகா ஜெனவைச் சேர்ந்த அஜித் றோகான் குமார (வயது-29) என்பவர் கம்பத்திலிருந்து தூக்கி வீசப்பட்டு படு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தொலைத் தொடர்பு கம்பத்திலிருந்து வயர்கள் பொருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் அருகில் இருந்த மின்சார வயரில் கம்பிகள் தட்டுப்பட்டதால் மின்சாரம் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# இலங்கைப் பணிப்பெண்களின் கொடுப்பனவு குறித்துப் பேச்சு

## வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தலைவர் கருத்து

**பணிப்பெண் ஒருவருக்கு மாதாந்த சம்பளமாக 60 தொடக்கம் 65 குவைத் டினார்கள் கிடைக்கின்றன. இதனை 85 குவைத் டினாராக அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.**

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டு வேலைக்காகச் செல்லும் இலங்கைப் பணியாளர்களுக்கான கொடுப்பனவை அதிகரிப்பது தொடர்பாக வெளிநாட்டு வேலை வாயப்புப் பணியகம் கவனம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பாக சவூதி அரேபிய மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் அமல் சேனாதிலங்கார தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது குவைத்தில் பணியாற்றும் இலங்கைப் பணிப்பெண் ஒருவருக்கு மாதாந்த சம்பளமாக 60 தொடக்கம் 65 குவைத் டினார்கள் கிடைக்கின்றன. இதனை 85 குவைத் டினாராக அதிகரிப்பதற்கு எண்ணியுள்ளது.

இதுதொடர்பாக இறுதி இணக்கப்பாட்டை எட்டும் வகையில் அடுத்த மாதம் மத்திய கிழக்கு நாடுகளின் தூதர்களுடன் ஜோர்தானில் பேச்சு இடம்பெறவுள்ளது.

கொடுப்பனவை அதிகரிக்கும்போது பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷிய வீட்டுப் பணிப்பெண்கள் பெற்றுக் கொள்ளும் கொடுப்பனவு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்-என்றார் அவர். (வ)

## புளியம் பொக்கணை ஆலய திருவிழாவில் திருடர் கைவரிசை

பளை, ஏப்.9

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழாவில் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சனநெரிசலைப் பயன்படுத்தி இரவு வேளையில் பெருமளவு திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இளம் பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓட முயன்ற திருடனைப் பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆலயத் திருவிழா முடியும்வரை சேலையால் மூடிப் பாதுகாத்த 7¼ பவுண் நிறையுடைய தாலிக்கொடி இரவு பஸ் ஏறி வரும் வேளையில் திருட்டுப் போயுள்ளது.

இயக்கச்சி, மாசாரைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சரஸ்வதிப்பிள்ளை என்னும் மூதாட்டியின் 4 லட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியே திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## பச்சிலைப்பள்ளி முன்பள்ளி சிறாருக்கு சத்துணவு

பளை, ஏப்.9

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள 22 முன்பள்ளிகளைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட சிறார்களுக்கு தினமும் சத்துணவு வழங்கும் திட்டத்தை எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளனர்.

லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் தினம் ஒரு சத்துணவு என்னும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்தத் திட்டத்தைச் சிறந்த முறையில் மேற்கொள்ளவென இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் தலைமையில், 9 பேர் கொண்ட மத்திய கண்காணிப்பு ஆலோசனைக் குழுவும், சிறப்பு சத்துணவுகளைக் கொள்வனவு செய்து விநியோகிக்க பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் செ.மார்க்கண்டு தலைமையிலான 6 பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளதாக பேரவைச் செயலாளர் க.சண்முகதாஸ் தெரிவித்தார். (வ-9)

## சமய சந்நிதிகளில்

'ஈழத்து இராமேஸ்வரம்' என்றழைக்கப்படும் புங்குடுதீவு, பாணாவிடை சிவன் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங் கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (வ)

* * *

யாழப்பாணம்,ஏப்.9

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பங்குனித் திங்கள் பொங்கல் விழாவும் குளிர்ச்சியும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. (வ-14)

## கரவெட்டி மத்தியஸ்தர் சபையில் கிடப்பில் போடப்பட்ட 98 பிணக்குகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

கரவெட்டி மத்தியஸ்தர் சபையில் கடந்த 3 மாத காலப் பகுதியில் பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பிணக்குகளில் 98 பிணக்குகள் இதுவரை தீர்க்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன என கரவெட்டி மத்தியஸ்தர் சபைத் தலைவர் சி.நற்குணலிங்கம் தெரிவித்தார்.

கரவெட்டி மத்தியஸ்தர் சபையில் முறையீடு செய்யப்படும் பிணக்குகளில் குற்றஞ்சாட்டப்படுபவர்கள் கலந்துரையாடல்களுக்கு சமூகம் தராமையே இதற்கு முக்கிய காரணம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கடந்த 3 மாத காலப் பகுதியில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்டவர்களால் காணிப் பிரச்சினை, வீட்டு வன்முறை, சிறுகாயம் விளைவித்தல் போன்றவை தொடர்பாக பிணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் மாதா மாதம் கிடைக்கப்பெறும் பிணக்குகள் தீர்க்கப்பட்டாலும் ஏற்கனவே கையிருப்பில் இருந்து 93 பிணக்குகள் கிடப்பில் போடப்பட்டுள்ளதாகவும் 98 பிணக்குகள் இதுவரை தீர்க்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-253)

## கரவெட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெறா

வடமராட்சி, ஏப்.9

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி நாளை நடைபெறாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (வ-8)

## யாழ்.நகர் வீதிகளுக்கு தார்க்கலவையிடும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.9

யாழ்.நகரில் சேதமடைந்த வீதிகளை தார்க்கலவை மூலம் புனரமைப்புச் செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ். வீதியில் சத்திரச் சந்திப் பகுதி, பலாலி வீதியில் ஆஸ்பத்திரி வீதிச் சந்திப் பகுதி போன்ற பிரதான வீதியில் ஏற்பட்ட சேதங்கள் இவ்வாறு தார்க்கலவை மூலம் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படும் இந்த வீதிகள் அண்மைக்காலமாக இவ்வாறு தார்க்கலவை மூலம் செப்பனிடப்பட்டு வருகின்றன.

இதேவேளை முன்னர் தார்க் கலவையிட்டு செப்பனிடப்பட்டபோதும் அவை விரைவாக மீண்டும் பழைய நிலையில் சேதமடைந்தே காணப்படுகின்றன. (வ-17)




வலி.கிழக்கு
சைவ சமய அருள் நெறி மன்றம்
மூன்றாவது ஆண்டு நிறைவு விழா
நூல் வெளியீடு - பேராளர் கௌரவிப்பு - பரிசில் வழங்கல்
இடம்:- கோப்பாய் வீரபத்திரர் கோயிலடி
காலம்:- 10.04.2012 செவ்வாய்க்கிழமை
நேரம்:- மாலை 5 மணி
தலைவர்
சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள் (மன்றத் தலைவர்)
பிரதம விருந்தினர்:
பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்
(வாழ்நாள் பேராசிரியர், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்
திரு.இ.இளங்கோவன் அவர்கள்
(வடமாகாண ஆளுநரின் செயலாளர் - யாழ்ப்பாணம்)
வரவேற்பு நடனம்
- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய மாணவர்கள்
வரவேற்புரை
- சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் MA அவர்கள்
ஆசியுரை
- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
- நல்லை ஆதீன குரு மஹா சன்னிதானம்
வாழ்த்துரை
- திருமதி மா.அனந்தலெட்சுமி அவர்கள்
(இந்து சமய அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து சமய திணைக்களம்)
நூல் வெளியீடு "வழிபாட்டுக் கோலங்கள்"
ஆசிரியர்
- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள்
நூல் வெளியீட்டுரை
- பேராசிரியர் மா.வேதநாதன் அவர்கள்
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
ஆய்வுரை
- திரு.ச.லலீசன் (M.A, M.ED) அவர்கள்
(விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)
ஏற்புரை - நூலாசிரியர்.
முதற் பிரதி பெறுநர்
- திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்
(முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர்)
பேராளர் கௌரவிப்பு
சிவாச்சார்ய பெருந்தகை - சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள்
(ஈழத்து சிதம்பரம் - காரைநகர்)
பொன்மனச் செம்மல் - திரு.இ.ச.பே.நாகரத்தினம் (யாழ்ப்பாணம்)
திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் (கோப்பாய்)
விஸ்வப் பிரம்மஸ்ரீ கலாபூஷணம் திரு.இராசையா ஸ்ரீதரன் (யாழ்ப்பாணம்)
சிற்பாசிரியர் திரு.க.இராசலிங்கம் (கோப்பாய்)
கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வலி.கிழக்கு
சைவசமய அருள் நெறி மன்றம், கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைகளுக்கு விரைவில் இருதரப்பு பேச்சு

## இந்திய மத்திய அமைச்சர் கருத்து



இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரைவில் இரு நாட்டு மீனவர்களுடன் பேச்சு ஆரம்பிக்கப்படும் என்று இந்திய மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

கூடங்குளம் அணுமின் நிலைய பிரச்சினை முடிவுக்கு வந்ததை அடுத்து, மத்திய நாடாளுமன்ற விவகாரத்துறை இணை அமைச்சர் நாராயணசாமி, மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் நேர்த்திக்கடன் செலுத்தி அன்னதானம் வழங்கினார்.

அதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணுமின் நிலையத் தில், 2 உலைகள் தயார் நிலையில் உள்ளன. அதில் ஒன்று 99 சதவீதம் பணிகள் முடிந்து விட்டன. முதல் உலையில் யுரேனியத்தைப் போட்டால், ஆயிரம் மெகாவாற் மின் உற்பத்தி இன்னும் 2 மாதங்களில் கிடைத்து விடும். மற்றொரு உலை 95 சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டு அதற்கடுத்த 2 மாதங்களில் ஆயிரம் மெகாவாற் மின் உற்பத்தி செய்யும் வகையில் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

தமிழகத் தில் 7 - 8 மணி நேரம் வரை மின்வெட்டு நீடித்து வருகிறது. முதல் அணுமின் உலை செயற்பட ஆரம்பித்ததும் 965 மெகாவாற் மின் சாரம் தமிழகத்துக்கு உடனடியாக வழங்கப்படும். மின் பற்றாக்குறையைக் காரணம் காட்டி 2 ஆயிரம் மெகாவாற்றையும் தமிழகத்துக்கே ஒதுக்க வேண்டும் என்று முதவர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார். பிரதமரும் அது குறித்து பரிசீலித்து வருகிறார்.

தமிழக மீனவர்கள் மீதான தாக்கு தலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக தமிழக மற்றும் இலங்கை மீனவ சமுதாய தலைவர்களுடன் பேச்சு நடத்தப்பட்டு, எந்த எல்லைவரை யார், யார் மீன் பிடிப்பது என்று தீர்மானிக்கப்பட உள்ளது. இந்த பேச்சு விரைவில் ஆரம்பமாகும் - என்றார் அவர். (வ)

# இராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கை கடற்படை எச்சரிக்கை

எல்லை தாண்டி வந்தால் கைது செய்வோம் என்று இராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படை எச்சரிக்கை விடுத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய ஊடகங்களின் செய்தியில் மேலும் தெரிவித்ததாவது:-

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 4ஆம் திகதி 300 விசைப் படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். மீனவர்கள் நள்ளிரவில் கச்சதீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது இராமேஸ்வரம் மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் மீன்பிடிக்க விடாமல் விரட்டி அடித்தனர். இதனால் இடை நடுவிலேயே மீனவர்கள் கரை திரும்பினர்.

இதுகுறித்து இராமேஸ் வரம் மீனவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கடந்த 4ஆம் திகதி இந்திய - இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிக்க சென்றபோது 4 போர்க் கப்பல்களில் ரோந்து வந்த இலங்கைக் கடற்படையினர் எங்களது படகுகளை மீன் பிடிக்க விடாமல் துப்பாக்கியைக் காட்டி மிரட்டினர். இனிமேல் இந்திய கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்க இலங்கை எல்லைக்குள் வந்தால் கைது செய்து சிறையில் அடைத்து விடுவோம் என இலங்கைக் கடற்படையினர் எச்சரித்தனர். இதனால் நாங்கள் தொடர்ந்து மீன் பிடிக்காமல் கரை திரும்பினோம் என்று தெரிவித்ததாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ)

# தமிழ்த் தினப் போட்டிகள்

அச்சுவேலி, ஏப்.9

யாழ்.மாவட்ட பாடசாலைகள் மட்டத்தில் நடைபெறவுள்ள தமிழ் மொழித் தினப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை கலைத்திறன் போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் வேம்படி மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன. மே மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை நாட்டுக் கூத்துப் போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. மே மாதம் 4 ஆம் திகதி விவாதப் போட்டி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களில் இருந்தும் வலய மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற போட்டியாளர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-11)

### தலைதெறிக்கும் ஓட்டத்தால் விபரீதம்

# ஓட்டோ– மோ.சைக்கிள் விபத்து ஓட்டோ சாரதி படுகாயம்



யாழ்.இலுப்பையடிச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஓட்டோ மோட்டார் சைக்கிள் விபத்து ஓட்டோ சாரதி தலையில் படுகாயத்துக்கு உள்ளானார். கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ அந்தப் பகுதியில் இருக்கும் புடைவை விற்பனை நிலையத்துக்குள் புகுந்துள்ளது.

நாவலர் வீதியால் வந்த ஓட்டோவும் பலாலி வீதியால் வந்த மோட்டார் சைக்கிளும் இந்த விபத்தில் மோதிக் கொண்டன. ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளில் வந்தவரை மோதிச்சென்று புடைவை விற்பனை நிலையத்தில் மோதி நின்றது. இதனால் ஓட்டோ சாரதிக்கு தலையில் படுகாயம் ஏற்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்தவர் சிறு காயங்களுக்கு உள்ளானார். ஓட்டோ சாரதி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு வந்த யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-135)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**

பங்குனி 28 செவ்வாய்க்கிழமை 10.04.2012
திதி: சதுர்த்தி பி.ப. 04.18 வரை
நட்சத்திரம்: அனுசம் சித்தம் மு.இ 07.12 வரை
சுபநேரம்: 10.36-12.06 வரை
ராகு காலம்: 03.06-04.36 வரை

**மேடம்:** இன்று எதிர்நோக்கி இருக்கும் விவகாரங்கள், செய்து முடிக்க வேண்டிய பணிகள் என்று பலவற்றையும், மனதில் போட்டு குழம்பிக் கொண்டிருப்பீர்கள். இருப்பினும் தாங்களே எதிர்பார்க்காத வகையில், நல்லதொரு தீர்வு ஏற்படும். சந்திக்கும் நபர்களிடம் தங்கள் மனநிலையை மட்டும் கருத்தில் கொண்டு செயற்படுவதை, கொஞ்சம் மாற்றிக் கொள்ளுங்கள்.

**இடபம்:** இன்று காரணமற்ற தயக்கம், சோர்வுகள் என, தங்களின் செயற்பாடுகளில் குறுக்கிட்டபோதும், அதையும் மீறி பெரும்பாலான விடயங்கள் தங்களுக்கு சாதகமாக முடிப்பீர்கள். உதவிகள் செய்வதில் தவறல்ல. அதே நேரத்தில் யாருக்கு, எந்த சூழ்நிலையில் உதவி என்பதனை யோசித்து செய்யுங்கள். ஆரோக்கியம் கூடும்.

**மிதுனம்:** இன்று வரவுகள் திருப்திதரும். செலவுகள், கடன்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் ஓரளவுக்கு பயன் ஏற்படும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத்தில் ஒற்றுமை கூடும். பெற்றோரின் செயற்பாடுகள் திருப்தி தரும். உறவினரின் விவகாரங்களில் சற்று எச்சரிக்கையோடு செயற்படுங்கள்.

**கடகம்:** இன்று மாற்றங்களை எதிர்நோக்கி தங்களின் செயற்பாடுகள் இருந்த போதும், சற்று தாமதத்திற்கு பின் மாற்றம் ஏற்படும். உடல் நிலையில் சிற்சில தொந்தரவுகள் ஏற்பட்டு விலகிய போதும், தகுந்த மருத்துவரின் ஆலோசனையை எடுத்துக் கொள்ளுங்கள். நீதிமன்ற விவகாரங்களில் குழப்பம் நீடிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும்.

**சிங்கம்:** தங்களின் நிதானமும், பெருந்தன்மையான போக்கும் பலவிவகாரங்களுக்கு தீர்வாக அமையும். எல்லா நேரங்களிலும், தன்னுடைய வியூகம் வெற்றி பெறும் என்ற எண்ணத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள். உடல் நிலையில் உணவு, பழக்க வழக்கங்களை முறைப்படுத்திக் கொள்ளல் அவசியமாகும்.

**கன்னி:** இன்று மன நிறைவு, ஆதாயம் என நிரம்பி இருக்கும். பழக்கப்பட்டவர்களால் பயன் அதிகமாகும். உறவுகள் சந்திப்பு, நண்பர்களுடன் கலந்துரையாடல் இருக்கும். அசு சம்பந்தப்பட்ட பணிகளை ஒத்தி வைத்துக்கொள்ளுதல் நல்லது. உடல் நிலையில் தொந்தரவுகள் குறைந்து உற்சாகம் கூடும்.

**துலாம்:** இன்று தங்களின் உடல்நிலை ஒத்துழைக்காதபோதும் தளராத முயற்சி, தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள். தாமதப்பட்ட பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். எதிர்பாராத உதவி, புதிய அறிமுகங்களால் உற்சாகம் கூடும். செலவுகளுக்கு முன்பே திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**விருச்சிகம்:** இன்று பல நல்ல மாற்றங்களை எதிர்கொள்வீர்கள். வழக்குகள் புதிய திருப்பத்தை தரும். குடும்பத்தில் தங்களின் பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவீர்கள். உடன்பிறப்பு, உறவுகளோடு சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பங்குதாரர்களோடு பக்குவமான அணுகுமுறை நல்லது.

**தனுசு:** இன்று தங்கள் மனதில் சிந்தனையும், திட்டமும் அதிவேகமாக இருந்தபோதும் செயற்பாடு தாமதமாக இருக்கும். அரசு சம்பந்தப்பட்ட வகையில், சிற்சில ஆதாயங்கள் கிடைக்கப் பெறும். உடல் நிலையில் நிலவும் குழப்பங்களைத் தவிர்க்க தகுந்த மருத்துவரின் ஆலோசனையை மேற்கொள்ளுங்கள்.

**மகரம்:** இன்று கருத்துக்களோடும், கவனத்தோடும் தங்களின் செயற்பாடுகள் இருக்கும். தாமதப்பட்ட பணிகளை வியூகங்களால் எளிதாக முடிப்பீர்கள். வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களை விரிவுப்படுத்திக் கொள்வீர்கள். பொதுகாரியங்களில் ஆர்வம் கூடும். மனக்குறை சிறிதளவு இருக்கத்தான் செய்யும்.

**கும்பம்:** இன்று யுக்திகளாலும், வியூகங்களாலும் வெற்றிகள் பல கிட்டும் உற்சாகம் கூடும். உள்ளம் உவந்து உதவிகள் செய்வீர்கள். எடுத்த பணிகளை முடித்து விட்டு தான் ஏனைய பணிகளை பார்ப்பீர்கள். புதிய முயற்சி, பேச்சுகளில் ஒப்பந்தங்கள் என இருக்கும். ஆரோக்கியத்தில் குறைவிருக்காது. நிதி நிலையில் பற்றாக்குறை அற்ற நிலை நிலவும்.

**மீனம்:** இன்றைய நாள் புதிய சிந்தனைகளோடு ஆரம்பமாகும். தங்களின் விரைவான செயற்பாடுகள் ஒவ்வொரு காரியத்தை [illegible] செய்து [illegible] உதவி செய்யும் போதும், பிறரிடமிருந்து தாங்கள் உதவி பெறும் போதும் சற்று கவனம் இருக்கட்டும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 9 | 8 | | | 2 | | |
| | | | | 7 | 6 | | 3 | 8 |
| | | | 9 | 2 | | 4 | | 6 |
| | | | 6 | 8 | 1 | | | 3 |
| | 9 | | | 3 | | | 2 | |
| 8 | | | 2 | 9 | 5 | | | |
| 7 | | 8 | | 4 | 2 | | | |
| 2 | 1 | | 7 | 5 | | | | |
| | | 4 | | | 8 | 1 | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 5 | 2 | 1 | 4 | 9 | 6 | 7 |
| 1 | 2 | 9 | 6 | 5 | 7 | 8 | 4 | 3 |
| 7 | 9 | 6 | 8 | 9 | 3 | 1 | 2 | 5 |
| 6 | 9 | 1 | 3 | 4 | 2 | 7 | 5 | 8 |
| 3 | 7 | 8 | 5 | 6 | 1 | 4 | 9 | 2 |
| 2 | 5 | 4 | 9 | 7 | 8 | 3 | 1 | 6 |
| 9 | 1 | 2 | 7 | 3 | 6 | 5 | 8 | 4 |
| 5 | 8 | 3 | 4 | 2 | 9 | 6 | 7 | 1 |
| 4 | 6 | 7 | 1 | 8 | 5 | 2 | 3 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறிகண்டியில் விரைவில் மீள்குடியமர்வு ஆரம்பம்

## ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தகவல்

ஒட்டுசுட்டான், ஏப்.9 கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் நிறைவு பெற்றதும் முல்லைத்தீவு மாவட்டம் திருமுறிகண்டிப் பகுதி மக்கள் மீளக்குடியேற்றப்படுவார்கள் என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட திருமுறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த சுமார் 119 குடும்பங்கள் இதுவரை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதில் 46 குடும்பங்கள் மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் உள்ளன.

இந்தக் குடும்பங்களின் காணிகள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. ஏ-9 வீதியின் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்புறத்தில் அமைந்துள்ள திருமுறிகண்டிக்குளம், அதன் கீழ் உள்ள 80 ஏக்கர் வயல் காணி, திருமுறிகண்டித் தபாலகம், பொது மயானம், இரண்டு இந்து ஆலயங்கள் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம், கிராம அலுவலர் அலுவலகம், பொது நோக்கு மண்டபம் என்பவற்றை உள்ளடக்கிய பகுதியே இவ்வாறு இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளது.

இந்த நிலையில் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த 119 குடும்பங்களில் 46 குடும்பங்கள் இன்று வரை மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ளன. ஏனைய குடும்பங்கள் தொழில் வாய்ப்புகளைக் கருதி. உறவினர், நண்பர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் மேற்படி மக்களை மாற்று இடம் ஒன்றில் குடியமர்த்துவதற்கு கடந்த ஆண்டு ஆரம்பத்தில் தீர்மானிக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

அதன் பிரகாரம் கொக்காவில் சந்திக்கும் திருமுறிகண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் ஏ-9 வீதிக்கும் ரயில் பாதைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் மீளக்குடியமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இது வரை மீளக்குடியமர்வு இடம்பெறவில்லை.

இந்த விடயம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தி.திரேஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்ட போது தற்போது இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மாத இறுதிக்குள் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் நிறைவடையும். அதன் பின்னர் காடுகள் அழிக்கப்பட்டு அரை ஏக்கர் வீதம் காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

வீட்டு வசதிகளும் செய்து கொடுக்கப்படும். பின்னர் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

### தூக்கில் தொங்கிய நிலையில் சிப்பாயின் சடலம் மீட்பு

கிளிநொச்சி திருவையாறுப் பகுதியில் இராணுவ முகாம் ஒன்றில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சிப்பாயின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை மரம் ஒன்றில் கயிற்றினால் சுருக்கிட்ட நிலையில் இவரது சடலத்தை சக இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

அம்பாறையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சாந்த (வயது 47) என்ற சிப்பாயே சடலமாக மீட்கப்பட்டார். இவரது சடலம் இராணுவ முகாமில் வைக்கப்பட்டு பின்னர் நேற்றிரவு கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. திருவையாறுப் பகுதியில் அமைந்துள்ள ஏழாவது காலாற் படை முகாமில் இவர் பணியாற்றிவந்துள்ளார். சம்பவம் குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## சிலைகள் உடைப்புடன் தொடர்பில்லை

### தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறிவிப்பு

மட்டக்களப்பு நகரில் இடம்பெற்ற சிலை உடைப்புச் சம்பவங்களுக்கும் தமது கட்சிக்கும் தொடர்பில்லை என்று தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவித்துள்ளது.

மகாத்மா காந்தி மற்றும் சாரணியர் சங்கத் தலைவர் பேடன் பவல் உள்ளிட்ட பெரியார்களின் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிலை உடைப்புச் சம்பவங்களுக்கும் தமது கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பேச்சாளர் அசாத்மௌலான தெரிவித்தார்.

தமது கட்சி தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் கட்சி. இந்திய தேசத் தந்தையின் சிலையை உடைப்பது போன்ற இழிசெயல்களில் தமது கட்சி ஈடுபடாது என்று அவர் தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தில் குழப்பங்களை விளைவிக்க முயற்சிக்கும் தரப்பினரே இவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாக' அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். உடைந்த சிலைகளை உடனடியாக திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### விபத்துப் பிரதேசமாக குஞ்சர்கடை

வடமராட்சி நெல்லியடி குஞ்சர் கடைப் பிரதேசம் விபத்துப் பிரதேச மாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு அறிவித்தல் பலகைகளும் போடப் பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் இந்தப் பகுதியில் இரண்டு கோர விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்த நிலையில் இந்தப் பகுதியால் போக்குவரத்தில் ஈடுபடுவோரின் நலனைக் கருத்தில் கொண்டு எச்சரிக்கை விடுக்கும் வகையில் அறிவித்தல் பலகைகள் நடப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் போக்குவரத்துப் பிரிவினர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். மக்கள் போக்குவரத்துகளின் போது அவதானமாக வாகனங்களைச் செலுத்தவேண்டும் என்பதற்காகவும் வேகம், விவேகம் இல்லை என்பதை உணர்த்தும் நோக்குடனும் இந்த எச்சரிக்கை அறிவித்தல் பலகைகள் நடப்பட்டுள்ளன என்று நெல்லியடிப் போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 01 ★ 10 ★ 1940



இறப்பு 12 ★ 04 ★ 2009

### அமரர் சின்னையா புலேந்திரன்

(ஓய்வுநிலை இ.போ.ச. சாரதி)

திதி : திருதியை

ஆண்டுகள் மூன்று ஆகிடினும்
ஆறவில்லை எம்துயரம்
நீங்கள் இல்லாத வாழ்வை
நினைத்துப் பார்க்கவும் முடியவில்லையே
துன்பக் கடலில் மூழ்கியே
துவண்டு துடிக்கின்றோம் தினம் தினம்
உயிர் உள்ளவரை உமை மறவோம்
உமக்காய் இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

"ரஜனி மஹால்",
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம். (16630)

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் இராஜரட்ணம்



(முன்னாள் பிரபல வர்த்தகர் ரஞ்சினி ஸ்ரோர்ஸ் பொரளை)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 11 ஆம் வட்டாரம்,இல. 16, அம்மன் வீதி யாழ்ப்பாணம் Scavlorough கனடா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இராஜரட்ணம் நேற்று முன்தினம் (07.04.2012) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயலட்சுமி (பாக்கியம்-சாவகச்சேரி) காலம் சென்றவர்களான சீவரத்தினம்,சாந்தலிங்கம், சண்முகராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜரஞ்சினி, காலம் சென்ற இராஜரஞ்சன் மற்றும் இராஜேஸ்வரன், இராஜகுமார், இராஜரமணி, இராஜபிர தீபன்,இராஜசுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நம்பியாரூரன், கிருஸ்ணகலா, செல்வேந்திரன், விநோதினி, சந்திரகலா ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (12.04.2012) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
க.மருதலிங்கம்.

## கண்ணீர்க் காணிக்கை



### அமரர் திருச்செல்வம் றொபேட்

கடந்த 06-04-2012 அன்று இறைபதமடைந்த எமது சிரேஷ்ட மத்தியஸ்தர் அமரர் திருச்செல்வம் றொபேட் அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*யாழ். உதைபந்தாட்ட*
*மத்தியஸ்தர் சங்கம்,*
*யாழ்ப்பாணம்.*

(16627)

## கண்ணீர் அஞ்சலி



### இராமநாதன் அமுதசிங்கம்

கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஆசிரியை திருமதி அ.பத்மலீலா அவர்களின் பாசமிகு கணவர் இராமநாதன் அமுதசிங்கம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர நடராசப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/கலாநிதி ஆ.தியாகராசா
மத்திய மகாவித்தியாலயம், காரைநகர்.

(16628)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிமுத்து தில்லைப்பிள்ளை



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து தில்லைப்பிள்ளை நேற்று (08.04.2012) ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்குக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சத்துருசிங்கம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் தம்பிமுத்துவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), கந்தையா, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, தையல்நாயகி ஆகியோரின் மைத்துனியும் நடராசா (ஜேர்மனி), தங்கராணி, அரியராணி (ஜேர்மனி), நவரட்ணராஜா (ஜேர்மனி), நேசராணி ஆகியோரின் அன்புத் தாயும் கிருஸ்ணானந்ததேவி (ஜேர்மனி), நவரட்ணராஜா, விவேகானந்தன் (ஜேர்மனி), யசோதா (ஜேர்மனி), தனபாலசிங்கம் (சாவகச்சேரி பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியும் சிறிசசிகரன் (ஜேர்மனி), கௌரிதாசன் - பிரியதர்சினி (ஜேர்மனி), சிவானந்தன் - கௌரிதாசினி (சுவிஸ்), காலஞ்சென்ற கௌரிமாலா - கௌதீபன் (பிரான்ஸ்), கௌதமன் (காமா) - கோமதி, செந்தூரன் (ஜேர்மனி), ஜீவந்தி (ஜேர்மனி), மயூரன் (ஜேர்மனி), தர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேஸ்வரன் (ஜேர்மனி), சபேஷ்வரன் (கனடா), சுதேஸ்வரன் (கனடா), றவிஸ்வரன் (கனடா), மகிந்தினி (கனடா), சுகிந்தினி (லண்டன்), ரவிந்தினி (லண்டன்), காலஞ்சென்ற லோகாம்பிகை, லலிதாம்பிகை, மகேந்திரம் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியும் வினித்ரா (ஜேர்மனி), சுசிபா (ஜேர்மனி), சாரங்கன் (சுவிஸ்), சாருசன் (சுவிஸ்), வினோஜா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி. (16673)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடமாகாண ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டம்

# கிளிநொச்சி முன்னிலை

**கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மாணவர்கள் சிட்டாகப் பறந்து இலக்கு நோக்கி விரைந்தார்கள். இறுதியில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் முதல் இரண்டு இடங்களையும் தம்வசமாக்கினர்.**



வலி.வடக்கு ஏப் .9

வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் வட மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டி( 21 கிலோ மீற்றர் தூரம்) நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வவுனியா பரக்கும்பா மகா வித்தியாலய முன்றிலில் இருந்து ஆரம்பமாகி ஓமந்தை மத்திய கல்லூரிமுன்றலில் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் வட மாகாணத்துக்கு உட்பட்ட வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டப் பாடசாலைகளின் வீரர்கள் கலந்து கொண்டார்கள்.

ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியை வவுனியா பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரிஆரம்பித்து வைத்தார்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் மாணவர்கள் சிட்டாகப் பறந்து இலக்கு நோக்கி விரைந்தார்கள். மாணவர்களுக்கு ஒத்தாசை புரியவென துவிச்சக்கர வண்டிகளிலும், மோட்டார் சைக்கிள்களிலும் ஆசிரியர்களும் சக மாணவர்களும் கூடவே பயணித்தார்கள். இலக்கு நோக்கி விரைந்தோடும் மாணவர்களுக்கு பொது மக்களும் உற்சாகப்படுத்தினர். இறுதியில் மாணவர்கள் வெற்றி இலக்கை எட்டிப் பிடித்தனர்.

இதனடிப்படையில் ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் முதல் இரண்டு இடங்களையும் தம்வசமாக்கினர். இதே வேளை வவுனியா மாவட்ட மாணவர்களே முதல் பத்து இடங்களைப் பெற்றவர்கள் பட்டியலில் அதிகளவில் இடம்பிடித்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வடமாகாண ஆண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களைப் பெற்றவீரர்களின் விவரங்கள் வருமாறு.

முதலாமிடம் ரி.அன்ரனிடெல்மன் - கிளிநொச்சி மத்திய கல்லூரி,

2ஆம் இடம் பி.நிமோச் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்,

3ஆம் இடம் பி.பிரசாந் - முல்லைத் தீவு கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை,

4 ஆம் இடம் ஆர்.சாந்தன் வவுனியா சுந்தரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, 5 ஆம் இடம். எ.அனோஜன் - கிளிநொச்சி செல்லையாத்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, 6ஆ ம் இடம்.எஸ.தனுஜன் வவுனியா தாரணிக்குளம் கணேசா வித்தியாலயம், 7ஆ ம் இடம் வி.பத்மரூபன் வவுனியா சேமமடு சண்முகானந்தா வித்தியாலயம், 8.பி.மதீபன்-வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம், 9.ரி.வாசவன் - வவுனியா சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்., 10.வி.பிரவேந்தன் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலயம்.

(ங-86-400)

## கரைதுறைப்பற்று கோட்டம்

### உதைபந்தாட்ட முடிவுகள்



கரைதுறைப்பற்று, ஏப்.9

கரைதுறைப்பற்று கச்சாய்க் கோட்டப்பாடசாலைகளுக்கு இடையே முள்ளியவளை வித்தி யானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகளின் விவரம் வருமாறு

**15 வயது ஆண்கள்**

உடும்புக்குளம் தமிழ் வித்தியாலயம் , முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி.

**17 வயது ஆண்கள்**

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி,உடும்புக்குளம் தமிழ் வித்தியாலயம்,முல்லை த்தீவு மகாவித்தியாலயம்

**19 வயது ஆண்கள்**

முல்லைத்தீவு மகா வித்தியாலயம்,செம்மலை மகா வித்தியாலயம்,முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி.

(ங-8)

### சதுரங்க முடிவுகள்



கரைதுறைப்பற்று, ஏப்.9

முல்லைத்தீவு மாவட்ட கரைது றைப்பற்று கோட்டப் பாடசாலைகளுக்கிடையே முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூ ரியில் சதுரங்கப் போட்டி அண்மையில் நடைபெற்றது இந்தப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட பாடசா லைகளின் விவரம் வருமாறு

**15 வயது ஆண்கள்**

வற்றாப்பளை மகாவித்தியாலயம்,சிலாவத்தை அ.த.க. பாடசாலை,உடும்புக்குளம் தமிழ் வித்தியாலயம்.

**15 வயது பெண்கள்**

சிலாவத்தை அ.த.க பாட சாலை,முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி,செம்மலை மகா வித்தியாலயம்

**19 வயது ஆண்கள்**

சிலாவத்தை அ.த.க பாடசாலை,முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ,உடும்புக்குளம் தமிழ் வித்தியாலயம்

**19 வயது பெண்கள்**

சிலாவத்தை அ.த.க பாடசாலை,முள்ளியவளை வித்தி யானந்தாக் கல்லூரி,செம்மலை மகாவித்தியாலயம். (ங-8)

### வவுனியாவில் ஏப்ரல் 19 ஆம் திகதி

# புத்தாண்டு விளையாட்டு விழா

**சித்தி விநாயகர் வி.க. ஏற்பாடு**

வவுனியா, ஏப்.9

தமிழ் - சிங்கள மக்களின் புதுவருட கொண்டாட்டத்தை சிறப்பிக்கும் முகமாக வவுனியாவில் மாபெரும் விளையாட்டு விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களை ஒன்றிணைத்து நடத்தப்படவுள்ள இந்த மாபெரும் விளையாட்டு விழாவை வவுனியா புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

ஏப்ரல் 19 ஆம் திகதி புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் திறந்த வெளி அரங்கில் இந்தப் புத்தாண்டு விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

குறித்த விளையாட்டு விழா தொடர்பான முன்னோடிக் கூட்டம், மேற்படி விளையாட்டுக் கழகத்தின் திறந்த வெளி அரங்கில் அண்மையில் நடைபெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவரும், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினருமான பாக்கியநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தக்கூட்டத்தில் வவுனியாப் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியலிங்கம், வைத்திய கலாநிதி எஸ்.சுதாகரன், புதுக்குளம் கிராம அலுவலர் உமாபதி, கிராம சமூக சேவை உத்தியோகத்தர் சிவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது புத்தாண்டு விளையாட்டு விழாவை ஏப்ரல் 19 ஆம் திகதி நடத்த முடிவு செய்யப்பட்டது. இதில் வலுவிழந்தோர்களுக்கான விளையாட்டுப் போட்டி, சைக்கிளோட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, கரப்பந்தாட்டம் மற்றும் மரபு விளையாட்டுக்கள் என்பன இடம்பெறவுள்ளன.

1990 ஆம் ஆண்டு மிகப் பிரமாண்டமான விளையாட்டு விழாவை சித்திவிநாயகர் வி.க. நடத்தியிருந்தது. எனினும் போர்ச் சூழ் நிலை காரணமாக அதன் பின்னர் அத்தகைய விளையாட்டு விழாக்களை நடத்த முடியாத நிலையேற்பட்டிருந்தது.

எனவே இந்த முறை விளையாட்டுக் கழகத்தின் 14 ஆவது விளையாட்டு விழாவை பிரமாண்டமாக நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதுதொடர்பானஅனைத்து விவரங்களும் வடக்கு மாகாணங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு பிரதேச செயலகங்கள் மூலமாக தெரியப்படுத்தப்படும் என்று விளையாட்டு கழகத்தின் முன்னாள் தலைவரும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினருமான பாக்கியநாதன் பார்த்தீபன் உதயனுக்கு தெரிவித்தார். (ங-421)

## பண்டத்தரிப்பை வீழ்த்தி இராமநாதன் சம்பியன்



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. நான்கு கால் பாதி ஆட்டங்களைக்கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று கால்பாதி ஆட்டங்களிலும் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி காட்டிய எதிர்ப்பை இறுதிக்கால் பாதி ஆட்டத்தில் காட்டவில்லை. இதனால் இறுதி கால் பாதி ஆட்டத்தில் இராமநாதன் கல்லூரி அணி அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றியை உறுதி செய்தது.

முதல் மூன்று கால்பாதி ஆட்டங்களிலும் இராமநாதன் கல்லூரி 13 : 09, 16 :15, 09 :06 புள்ளிகள் என்றுமுன்னிலை பெற்றிருந்த நிலையில் முடிவடைந்தது. நான்காம் கால்பாதி ஆட்டத்திலும் இராமநாதன் கல்லூரி உத்வேகத்துடன் விளையாடி 20 : 9 புள்ளிகளைப் பெற்றது. ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 58:39 புள்ளிகள் என்ற நிலையில் வெற்றியை தன்வசமாக்கியது. போட்டியில் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுவேனியா 27, சுகன்யா 15, எஸ்.லக்சனா 11, எஸ்.சோபனா 5 புள்ளிகளைப்பெற்றுக் கொடுத்தனர். பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணிக்கு எஸ்.கிரிஷாந்தினி 30, சி.றொசாந்தினி ஆர்.சபீனா தலா 3, ஜ.கௌரிகா 2, எஸ்.கீர்த்திகா 1 புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தார்கள்.

போட்டியில் ஆட்ட நாயகியாக இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.சுவேனியாவும் போட்டியின் தொடர் ஆட்ட நாயகியாக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.கிரிசாந்தினியும் தெரிவு செய்யப்பட்டார்கள். (ங-86)

# சாலையும் அதிசயமும் எல்லேயில் வென்றன



பளைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டியில் ஆண்கள் பிரிவில் அல்லிப்பளைச் சாலை விளையாட்டுக் கழக அணியும் பெண்கள் பிரிவில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணியும் வெற்றி பெற்றன.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் அல்லிப்பளைச் சாலை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புலோப்பளை அதிசயம் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் அல்லிப்பளைச் சாலை விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சோரன்பற்று பராசக்தி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.


அதில் புலோப்பளை அதிசயம் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

(ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸியுடன் போராடும் மேற்கிந்தியத் தீவுகள்

## பந்துவீச்சாளர்களின் சிறப்பான ஆட்டத்தால் மே. இந்தியாவின் ஓட்டவேகம் மந்தம்



ஆஸ்திரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவுக்கு இடையே நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி கடுமையாகப் போராடி வருகிறது. மழை காரணமாக 73 பந்துப் பரிமாற்றங்களே முதல்நாள் வீசப்பட்டது. ஆட்ட நேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 இலக்குகளை இழந்து 179 ஓட்டங்களை பெற்றிருந்தது.

பார்படோஸ் கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்று வரும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டெரன் சமி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முதல் இலக்கு 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் 38 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது வீழ்த்தப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய அட்ரியன் பரத் 22 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் இணை சேர்ந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறெய்க் ப்ரெத்வைட் மற்றும் மூன்றாம் இலக்கத் துடுப்பாட்ட வீரர் கேர்க் எட்வேர்ட்ஸ் இருவரும் மிகச்சிறந்த இணைப்பாட்டமொன்றைப் பகிர்ந்தனர். இருவரும் 104 ஓட்டங்களை இரண்டாவது இலக்கினைப் பகிர்ந்தனர்.

அணி 142 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த கேர்க் எட்வேர்ட்ஸ் டேவிட் வோர்னரில் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இது டேவிட் வோர்னர் சர்வதேசப் போட்டிகளில் கைப்பற்றிய முதல் இலக்கு ஆகும்.

அதன் பின்னத் களமிறங்கிய டெரன் பிராவோ மற்றும் கிறெய்க் ப்ரெத்வைட் இருவரும் நிதானமாக ஆட முனைந்தனர். எனினும் அணி 167 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நிதானமாக ஆடிக்கொண்டிருந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ப்ரெத்வைட் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


இவர் இந்த 57 ஓட்டங்களுக்காக 199 பந்துகளைச் சந்தித்திருந்தார். மேற்கிந்தியத் தீவுகள் அணி 179 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது முதலாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆடுகளத்தில் டெரன் பிராவோ 20 ஓட்டங்களோடும், ஷிவ்நரேன் சந்தர்போல் 8 ஓட்டங்களோடும் உள்ளனர்.

ஆஸி. வீரர்கள் சிறப்பாகப் பந்துவீசிய போதிலும் இலக்குகளைக் கைப்பற்றத் தடுமாறினர். றயன் ஹரிஸ், பீற்றர் சிடில், டேவிட் வோர்னர் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றைய போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் மத்தியூ வேட் தனது டெஸ்ட் அறிமுகத்தைப் பெற்றிருந்தார். அத்தோடு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் ப்ரெத்வைட் வழங்கிய பிடியைக் கைப்பற்றியதன் மூலம் தனது முதலாவது டெஸ்ட் ஆட்டமிழப்புப் பங்களிப்பை தொடங்கியிருக்கிறார். (ங)

# இது கடவுளால் மட்டுமே முடியும்



கடவுளால் மட்டுமே 100 சதம் அடித்து சச்சினின் சாதனையை முறியடிக்க முடியும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் வீரேந்திர ஷேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர் கடந்த மாதம் ஆசிய கிண்ணப் போட்டியில் தனது 100ஆவது சதத்தை நிறைவு செய்தார்.

அதன் பிறகு பலதரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன. சச்சின் ஒரு பேட்டியில்

''எனது சாதனை முறியடிக்கப்படக்கூடிய ஒன்றுதான்'' என்று கூறியிருந்தார்.

இதுகுறித்து வீரேந்திர ஷேவாக் கூறுகையில், சச்சினின் 100 சதம் என்ற சாதனையை நினைக்கும்போது கடவுளால் மட்டுமே இப்படி ஒரு சாதனைபடைக்க முடியும் என்றுதான் என்னால் சொல்ல முடியும். இந்தமுறை ஐ.பி.எல். சீசனில் யார் சம்பியன் என்று கேட்டால் எனது பதில், டெல்லி டேர்டெவில்ஸ், என்பது மட்டுமே என்றார்.

இந்திய அணியின் இளம் அதிரடி வீரர் ஹோக்லி கூறுகையில், சச்சினின் 100 ஆவது சத சாதனைக்கு அருகில் கூட யாராலும் நெருங்க முடியாது என்றார். (ங)

# இவர் அவர் அல்லர்

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் தற்போதைய தலைவர் ராகுல் டிராவிட்டையும் முன்னாள் அணித்தலைவர் ஷேன் வோர்னையும் ஒப்பிடுவது நியாயமற்றது என்று ஆஸ்திரேலிய முன்னாள் விக்கெட் காப்பாளர் கில் கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.



ஜெய்ப்பூரில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கில் கிறிஸ்ட் தலைமையிலான பஞ்சாப் அணி தோற்றது.

இது குறித்து கருத்து வெளியிட்ட கில் கிறிஸ்ட்,

''தனது ஆட்டத்திறன் மற்றும் திட்டமிடுதலால் மற்ற வீரர்களிடம் இருந்து வேறுபட்டவர் வோர்ன்.

துடுப்பாட்ட வீரர்களைச் சமாளிக்கும் அற்புதமான ஆற்றல் பெற்றவர். அவரையும் டிராவிடையும் ஒப்பிடுவது தேவையற்றது. டிராவிட் மிகச்சிறந்த வீரர். உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களால் மதிக்கப்படுபவர்.

அவரது தலைமை மூலமாக ராஜஸ்தான் அணி பலனடையும். இந்த ஐ.பி.எல். தொடரில் பங்குபெறும் சிறந்த அணிகளில் ராஜஸ்தானும் ஒன்று. அவர்கள் வெற்றியுடன் தொடங்கியுள்ளார்கள். அவர்கள் தொடர்ந்து சிறப்பாக விளையாட இந்த வெற்றி அவர்களுக்கு உதவும்.

''இந்த ஆட்டத்தைப் பொறுத்தவரை மைதானத்திற்கு ஏற்றவாறு எமது பந்துவீச்சாளர்கள் பந்துவீசத் தவறிவிட்டனர். தோல்வி என்பது எல்லோருக்கும் ஏமாற்றமளிப்பதாகவே அமையும். அதிலும் முதல் ஆட்டத்தில் என்றால் சொல்லவே வேண்டாம். இருப்பினும் இந்தத் தோல்வியை உடனடியாக மறந்துவிட்டு சிறப்பாக ஆட முயற்சிப்போம்.'' என்று தெரிவித்தார்.



ஐ.பி.எல். ஆட்டத்தைப் பார்வையிடும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணித்தலைவர் ராகுல் டிராவிட் மற்றும் அணி உரிமையாளர் சில்பா ஷெட்டி.

# கொல்கத்தாவை வென்றது ராஜஸ்தான்

ஜெய்ப்பூர், ஏப். 9

ஐ.பி.எல். 5ஆவது தொடரின் 7ஆவது ஆட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸை 22 ஓட்டங்களால் வீழ்த்தி தனது இரண்டாவது வெற்றியை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி பதிவு செய்தது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் ராஜஸ்தான் றோயல்ஸ் துடுப்[illegible] போட்டியில் 98 ஓட்டங்களை எடுத்த [illegible] போட்டியில் ஓட்டம் எதுவும் பெறாமல் ரன் அவுட் ஆனார். எனினும் ஏனைய வீரர்கள் பொறுப்பாக ஆடி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 164 ஓட்டங்களை அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பிரட் ஹொட்ஜ் 44 ஓட்டங்களை விளாசினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் [illegible] நோக்கி அதக அணி பயணித்தது. அணித் தலைவர் காம்பீரும் தன் பங்குக்கு ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார். கொல்கத்தா நைட் ரைடர்ஸ் சார்பில் மனோஜ் திவாரி மட்டும் 59 ஓட்டங்களை எடுத்தார். எனினும் அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களை எடுத்து தோல்வியைத் தழுவியது. ராஜஸ்தான் அணியின் கூப்பர் 3 இலக்குகளைச் சாய்த்தார். இதன் மூலம் தனது 2ஆவது போட்டியிலும் கொல்கத்தா அணி தோல்வியைத் தழுவியுள்ளது. அதேநேரம் தொடர்ந்து 2ஆவது வெற்றியை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி நேற்றுப் பெற்றுக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக ஹொட்ஜ் தெரிவானார். (ங)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் 2012: சவூதிப் பெண்கள் பங்கேற்பார்களா?




லண்டனில் இந்த ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியில் சவூதி நாட்டு பெண்கள் பங்கேற்பார்கள் என்று நம்புவதாக சர்வதேச ஒலிம்பிக் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற இளைஞர் ஒலிம்பிக் போட்டியில் தல்மா ருஷ்டி என்ற பெண் பங்குபற்றி வெண்கலப்பதக்கம் வென்றிருந்தார். எனவே இவ்வாறான திறமையான வீராங்கனைகளைக் கொண்டுள்ளதைச் சுட்டிக்காட்டி சவூதி நாட்டின் சார்பில் ஒலிம் பிக் போட்டியில் பெண்கள் பங்கேற்கும்படி வலியுறுத்தப்படும் என்று சர்வதேச ஒலிம்பிக் குழு கூறியுள்ளது.

கட்டார், புருனே ஆகிய நாடுகளில் உள்ள பெண்களையும் விளையாட அனுமதிக்கும் படி வருகின்ற மே மாதம் 23 - 25ஆம் திகதிகளில் மீண்டும் வலியுறுத்தப்படும் என்றும் ஒலிம்பிக் குழு தெரிவித்துள்ளது.

ஆனால் சவூதி நாட்டு ஒலிம்பிக் குழுத் தலைவர் பெண்களை ஒலிம் பிக்கில் விளையாட ஒப்புதல் அளிக்கவில்லை என்று சவூதிப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

LONDON 2012


## மாபெரும் 15% விலை தள்ளுபடி
## புதுவருடத்தை முன்னிட்டு

★ மகாசில்க்
★ பியூட்டி சில்க்ஸ்
★ கவுஸ் ஒவ் செலெக்ஷன்

ஆகிய ஸ்தாபனங்கள் வழங்கும் அனைத்துப் புடைவைகளுக் கும் நிஜமான 15% விலைத் தள்ளுபடி 08.04.2012 தொடக்கம் 13.04.2012 வரை மட்டுமே நடைபெறும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மன மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

## காணி விற்பனைக்கு

இரண்டாம் குறுக்குத்தெரு (2nd Cross Street) யாழ்ப்பாணத்தில் 1¼ பரப்புக்காணி உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 4842464
077 5114873

## தூதரகப் பரீட்சைகளுக்கான

German-Deutsch, Netherland-Dutch, French, Italian
வகுப்புகள் நடைபெறுகின்றன.

**Vivekananda Academy**
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 484 2464, 021 222 0393, 021 321 6928

பல வருடங்களின் பின்
மீண்டும் யாழ்.நகரில்

## ஸ்ரார் பியூட்டி சென்ரர்




- Hair Styling & Bridal dressing
- Cake icing
- Fondant icing
- Saree Graphic
- Christal ornaments making
- Fabric painting
- Flower arrangement & beuget making

3 மாத பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பம் : 11.04.2012


978, கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0776976458

## சர்வதேசத் தராதரமுடைய சான்றிதழுக்கான கற்கைநெறிகள்
## புத்தாண்டுக்காக குறைக்கப்பட்ட கட்டணங்களுடன்...

Gateway – The leading ICDL and e-Citizen trainer in South Asia

ICDL International Computer Driving Licence — Just 6,500/= ONLY
e - Citizen — Just 2,500/= ONLY

தென்னாசிய நாடுகளில் கணினிப் பயிற்சியில் முன்னணி வகிக்கும் நிறுவனத்திடமிருந்து நேரடியாக, மிக விரைவாக தராதரமொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு.




**Gateway** Centre for ICT Education
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

இந்த சலுகை ஏப்ரல் 20 வரை மட்டுமே

## இறுக்கமானது - பிரித்தானியா Student Visa சட்டம்
## வேலைவாய்ப்பென்ற பேச்சுக்கே இடமில்லை

எனவே,
ஆஸ்திரேலியா சென்று கல்வி கற்போமா?
பின்வரும் மேலதிக வசதிகள் எமது ஆலோசனையுடன் உங்களுக்கு வழங்கத் தயாராக உள்ளோம்.
விமான நிலையத்தில் சென்று இறங்கியவுடன் அழைத்துச் செல்லல்.
குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதி.
பகுதி நேரத் தொழில் வாய்ப்புகளுக்கான ஆலோசனை.

ஆலோசனைகளுக்கு:
**திசைகாட்டி** (பிறைவேற்) லிமிட்டெட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9016
(சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாள்கள் உட்பட எல்லா நாள்களும் திறந்திருக்கும்.)
புதுவருட தினத்தன்று ஆலோசனை பெறுபவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

கிளைகள்:
23 1/3, மகேஸ்வரி லேன், கொழும்பு-06. 0112366925
115- இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 0212285544

மெல்போர்ண் - ஆஸ்திரேலியா Land Line: 0661390437100

## விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு நாய்கள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 077 655 2676

## ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
## சுவிஸ், இலண்டன் விசா

ஆலோசனைகளுக்கு:
**திசைகாட்டி** (பிறை) லிமிட்
யாழ்ப்பாணம் - 021 2219016
கிளிநொச்சி - 021 2285544
கொழும்பு - 0112366925

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 24,000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
**கண்ணா**
0776766499

# கவுஸ் ஒவ் செலெக்ஷன்
## கிளை நிறுவனத்தின் விற்றுத்தீர்த்தல்



அனைத்து புடைவைகளும் மலிவான விலையில் விற்றுத்தீர்க்கப்படும் என்பதனை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

| பொருள் விவரம் | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சாறி W.Blouse | ~~800~~ | 400 |
| சாறி சில்க் W.Blouse | ~~1100~~ | 500 |
| டெனிம் ஸ்கேட் | ~~950~~ | 300 |
| ஸ்கேட் | ~~600~~ | 200 |
| பிளவுஸ் | ~~500~~ | 150 |
| டெனிம் ஜீன்ஸ் | ~~1100~~ | 300 |
| டெனிம் ஜீன்ஸ் (சிறிது) | ~~1250~~ | 400 |
| ஜீன்ஸ் (சிறிது) | ~~650~~ | 200 |

| பொருள் விவரம் | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சோக்கோ ஜீன்ஸ் | ~~1150~~ | 400 |
| சேட் பெரிது | ~~850~~ | 300 |
| ஜம்பர் | ~~650~~ | 200 |
| சல்வார் பெரிது | ~~1200~~ | 400 |
| சல்வார் சிறிது | ~~900~~ | 300 |
| சோலிக்கிற் பெரிது | ~~1200~~ | 400 |
| பாட்டி வுறக் | ~~850~~ | 300 |
| சூட் | ~~900~~ | 300 |
| T சேட் | ~~350~~ | 150 |
| வெஸ்ட் | ~~190~~ | 100 |
| 01m கொட்டன் பிறின்ட் | ~~200~~ | 160 |
| 01m பட்டுக் குயின் | ~~200~~ | 100 |
| 01m ரெறின் | ~~280~~ | 200 |



75B, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(C\721) (6,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# யாழ் மண்ணில் HNB வழங்கும் ஷொப்பிங் திருவிழா

## கிரடிற் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் வாடிக்கையாளர்களுக்கு



மலருகின்ற புத்தாண்டிலே நம் அன்புக்குரியவர்களுக்கான புத்தாடைகள், நம் இல்லத்திற்கான தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் என்பவற்றை அதி கூடிய விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள, HNB வழங்கும் ஷொப்பிங் திருவிழா இது.

எல்லாக்காலங்களிலும் யாழ் மக்களின் தோளோடு தோள் நின்ற HNB, இப்புத்தாண்டு காலத்தில் கிரடிற் கார்ட் மற்றும் டெபிட் கார்ட் மூலம் புத்தாண்டு பொருட்களை விலைக்கழிவில் கொள்வனவு செய்ய, யாழ் மக்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறது.

## கீழ் காணும் காட்சி அறைகளிலுள்ள பொருட்களுக்கான விலைக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

| | |
|---|---|
| 1. மங்களா காட்சி அறை | |
| பிளாஸ்டிக் தளபாடங்கள், மெத்தைகள் மற்றும் பேபி கொட்ஸ் | 3% – 7% |
| மரத்தளபாடங்கள் மற்றும் ஏனைய தளபாடங்கள் | 5% – 20% |
| உலோக தளபாடங்கள் | 5% – 10% |
| சோபா செட்கள் | 5% – 15% |
| 2. கனடா ஜெயஸாஜீ சுப்பர் சென்ரர் | 10% – 50% |
| 3. கமலேஸ்வரி டெக்ஸ் | 10% |
| 4. சீமாட்டி (பிரைவட்) லிமிட்டட் | 10% – 15% |
| 5. ஸ்டைல் பார்க் | 10% |
| 6. மீடியா எலக்ரோ மார்ட் | 5% |
| 7. பெனின்சுலா சுப்பர் மோல் | 5% |
| 8. டி எஸ் ஐ | 7.5% |
| 9. த வேர்ல்ட் ஒவ் ஹெய்லீஸ் | 10% – 15% |
| 10. ரொபாஸ் | 15% |
| 11. மிலேனியம் பெஷன் | 15% |

நிபந்தனைக்குட்பட்டது

மார்ச் 31 முதல் ஏப்ரல் 13 வரை மட்டுமே



HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் [illegible] மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி / Hatton National Bank PLC - PQ 82

பிட்ச் ரேட்டிங் : AA-(lka)
HNB தலைமை அலுவலகம், HNB டவர்ஸ், 479, ரி. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
மேலதிக விபரங்கட்கு: HNB கார்ட் சென்ரர், தொ.பேசி 4523523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org